24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 28
விலை: 30

சுடர் 34 கதிர் 07 கார்த்திகை 17ஆம் நாள் திங்கட்கிழமை 03 டிசெம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

# தமிழ் மக்களுக்கு நன்றி கெட்டவனாக இருக்கமாட்டேன்

### தமிழ்க் கூட்டமைப்புக்கு வாக்குறுதியளித்தபடி அரசமைப்பை நிறைவேற்றுவேன் என்கிறார் ரணில்



கொழும்பு, டிசெம்பர் 3

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு தமிழ் மக்கள் நம்பி வாக்களித்தனர். அந்த மக்களுக்கு அவர் இன்று துரோகமிழைத்துவிட்டார். தமிழ் மக்கள் அவரை, நன்றி கெட்ட மனிதராகவே பார்க்கின்றனர். நான் அப்படி இருக்க மாட்டேன். ஆட்சிப் பொறுப்பை மீண்டும் ஏற்றதும், கூட்டமைப்புக்கு வழங்கிய வாக்குறுதிக்கு >> 23

## அமைதிவாழ்வு குலைந்தால் மீண்டும் சோதனைச் சாவடி

### மிரட்டுகின்றார் இராணுவத் தளபதி

யாழ்ப்பாணம், டிசெ. 3

தமிழ் மக்கள் அமைதியான வாழ்வை விரும்பாவிடின் மீண்டும் இராணுவத்தினரும், பொலிஸாரும் வீதிகளில் சோதனைச் சாவடிகளை அமைத்துச்சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்று யாழ்ப்பாண மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

வட்டுக்கோட்டைப் பகுதியில் இராணுவத்தினரால் மறுசீரமைக்கப்பட்ட குளத்தைப் பொது மக்களுக்கு >> 23

### அரசியல் கைதிகள் விவகாரம்

## கூட்டமைப்பு - மைத்திரி இன்று நேரில் பேச்சு

யாழ்ப்பாணம், டிசெ. 3

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் இன்று மாலை 4 மணிக்கு சந்திப்பு இடம்பெறவுள்ளது. இந்தச் சந்திப்பில் தமிழ் >> 23

## மூதாட்டியை கொடூரமாக தாக்கிய கும்பல்!

### உடுவிலில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 3

யாழ்ப்பாணம் உடுவில் பகுதியில் நேற்று அதிகாலை 2 மணியளவில் தனிமையில் இருந்த மூதாட்டியை >> 25

## மைத்திரி - ஐ.தே.மு. சந்திப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, டிசெ. 3

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், ஐக்கிய தேசிய முன்னணியினருக்கும் இடையில் இடம்பெறவிருந்த முக்கிய சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் >> 23

## தந்தை தமிழர் என்பதால் நான் பெருமையடைகிறேன்

### மகிந்த அணியினருக்கு நிசாந்த சில்வா பதிலடி

கொழும்பு, டிசெ. 3

எனது தந்தை தமிழர் என்பது குறித்து நான் பெருமைபடுகின்றேன் இவ்வாறு குற்றப் புலனாய்வுத் திணைக்கள விசாரணை அதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிசாந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

மகிந்த அணியைச் >> 24

## கூட்டமைப்பு – ரணில் சேர புது காரணம் கண்டுபிடிப்பு

கொழும்பு, டிசெ. 3

ஐக்கிய தேசியக் கட்சி அரசில் நிதி அமைச்சின் செயலராக கடமையாற்றிய ஆர். பாஸ்கரலிங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு, மக்களின் வரிப்பணத்தை நிதியாக வழங்கினார் என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

தலைமை அமைச்சர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் >> 23

### வடகிழக்கு மக்களுக்கு

## அபிவிருத்தி வேண்டுமா? நாடு பிளவுபடவேண்டுமா?

### அவர்களே தீர்மானிக்கட்டும் என்கிறார் வாசுதேவ

கொழும்பு, டிசெ. 3

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் நாட்டைப் பிளவுபடுத்தும் கொள்கைக்கு ஆதரவு வழங்காது என்பது எமக்கும் >> 23

see more news in
newuthayan.com

## என் உருவ பொம்மையை எரித்தாலும் பரவாயில்லை தமிழர்களின் கொள்கைகளை எரித்துவிடாதீர்கள்

### கூட்டமைப்பு ஆதரவாளர்களுக்கு விக்கி அறிவுரை

வவுனியா, டிசெ. 3

என்னுடைய உருவ பொம்மையை ஒரு முறையல்ல ஆயிரம் முறை எரியுங்கள். அதைப்பற்றி நான் கவலைப்பட மாட்டேன். ஆனால் தமிழ் மக்களின் நீண்ட கால கொள்கைகளை நீங்கள் சார்ந்த கட்சியுடன் >> 24

## மீண்டும் கூட்டு அரசு அமைப்பதற்கு சு.கவின் 14 எம்.பிக்கள் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 3

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து கூட்டு அரசு அமைப்பதற்கான யோசனையை அரச தலைவர் மைத்திரிபால >> 23

### க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை இன்று ஆரம்பம்

## வடக்கில் 333 பரீட்சை நிலையங்களில் 45,338 மாணவர்கள் தோற்றுகின்றனர்

யாழ்ப்பாணம், டிசெ. 3

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை நாடு முழுவதும் இன்று ஆரம்பமாகவுள்ளது. இந்தப் பரீட்சைக்கு வடக்கு மாகாணத்தில் 333 பரீட்சை நிலையங்களில் 45 ஆயிரத்து 338 மாணவர்கள் >> 23

## பலவீனப்படுத்தப்பட்ட ஜனநாயகத்தை தேர்தல் மூலமே உறுதிப்பாடாக்கலாம்

### கூறுகிறார் மகிந்த ராஜபக்ச

கொழும்பு, டிசெ. 3

கடந்த காலங்களிலும் நாட்டின் ஜனநாயகம் பலவீனப்படுத்தப்பட்ட போது பொதுத் தேர்தல்கள் நடத்தப்பட்டே அது உறுதிப்படுத்தப்பட்டது. எனவே பலவீனப்படுத்தப்பட்ட ஜனநாயகத்துக்கு தேர்தல்கள் மூலம் >> 25

## ஏ.ரி.எம்மில் திருட முயன்றவர் கைது

### சாவகச்சேரியில் சம்பவம்

சாவகச்சேரி, டிசெ. 3

வங்கியின் தன்னியக்க பணப் பரிவர்த்தன இயந்திரத்தை (ஏ.ரி.எம்.) உடைத்துப் பணம் திருட முயன்றவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை >> 23

### போர்க்குற்ற விசாரணை விவகாரம்

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் ஒன்றுக்கொன்று முரணான கருத்து

யாழ்ப்பாணம், டிசெ. 3

அரசியல் நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடனும், ரணில் விக்கிரமசிங்கவுடனும் நடத்திய பேச்சுக்களில் போர்க்குற்ற விசாரணை தொடர்பில் பேசப்பட்டதாக, கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ள நிலையில், அவ்வாறு பேசப்படவில்லை என்று >> 23

வாழ்த்துகிறோம்
இன்று ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சை எழுதும் மாணவ, மாணவிகள் இலட்சியத்தில் வென்றிட உதயன் உங்களை மனதார வாழ்த்துகின்றான்...
O/L Exam 2018

# சட்டபூர்வமான அரசு தேர்தல் நடத்தட்டும்

## எதிர்கொள்ளத் தயார் என்கிறது ஐ.தே.க.

கொழும்பு, டிசெ.3

தேர்தலுக்கு செல்லத் தயார். அதைச் சட்டப்பூர்வமான அரசு நடத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் கபீர் ஹசீம் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத்தை நிலைநாட்டப் பொதுத் தேர்தலுக்கு செல்வதே ஒரே வழி தற்போது சில மாகாண சபைகளுக்கான பதவிக்காலம் முடிவடைந்ததும் ஐக்கிய தேசியகட்சிதேர்தலைநடத்தாமல்காலம் தாழ்த்தி வருகின்றது என்று மகிந்த ராஜபக்சநேற்றுத்தெரிவித்திருந்தார். அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே கபீர் ஹசீம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமது கட்சி தேர்தலைக் கண்டு அச்சம் கொள்ளவில்லை தேர்தலுக்கு நாம் தயாராகவே இருக்கின்றோம். ஆனால் அது சட்டபூர்வமாக நடத்தப்பட வேண்டும். அதைச் சட்டப்பூர்வமான அரசு நடத்த வேண்டும். ஒரு தேர்தல் ஒரு ஜனநாயக கட்டமைப்புக்குள்மட்டுமேநடக்கமுடியும் -என்றார். (ற)

## மைத்திரி விட்ட தவறை அவரேதிருத்தவேண்டும்

### வலியுறுத்துகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, டிசெ.3

அரசதலைவர்மைத்திரிபால சிறிசேனவால் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி நிலையை அவரே திருத்தியமைக்க வேண்டும் என்றும் மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

மக்கள்விடுதலைமுன்னணியின் தலைமை அலுவலகத்தில்நேற்று நடத்தப்பட்டசெய்தியாளர் சந்திப்பில் உரையாற்றும்போது கட்சியின் செயலர்ரில்வின்சில்வா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பானது பன்னாட்டுச் சமூகத்தின் பொழுதுபோக்காக மாறிவிட்டது. அவர்களை எவரும் ஏற்கொள்ளவில்லை. நாடாளுமன்றத்துக்கு வந்து விளையாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

அவர்கள் நாடாளுமன்றத்துக்கு வந்து உணவருந்திவிட்டு அங்கு அறை ஒன்றுக்குள் ஊடகவியலாளர் சந்திப்பில்கலந்துகொண்டுபின்னர் பின் கதவால் நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறுகின்றனர். இது எந்தவொரு நாடாளுமன்றத்திலும் நடக்காத செயற்பாடு. இவை அனைத்தும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனாவால் நிகழ்ந்தது. அதற்கு அவரே பொறுப்புக் கூற வேண்டும்-என்றார். (ற)

## பெரும்பான்மை இல்லாத அரசில் நான் அமைச்சர்!

### ஹிஸ்புல்லா தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.3

நான் அமைச்சராக இருக்கும்இந்தஅரசுநாடாளுமன்றத்தில்பெரும்பான்மைஇல்லாத அரசாகவே உள்ளது என்று அமைச்சர் ஹிஸ்புல்லாதெரிவித்துள்ளார்.

காத்தான்குடியில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதேஅவர்இவ்வாறுதெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எதிர் கட்சி எல்லோரும் ஒன்றிணைந்து பெரும்பான்மையைவைத்துள்ளார்கள். எமது அரசு செய்யவேண்டிய தேவைகளை, கடமைகளை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றோம்.

இதுவரைக்கும் வரவு - செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. அதனால்ஜனவரி மாதம் எந்தவிதமான வேலைகளையும்செய்யமுடியாமல்போயுள்ளது.

நாடு என்ற அடிப்படையில் அரச தலைவர் எடுத்த முடிவின்அடிப்படையில்40நாள்கள் நாட்டில் பெரும் பிரச்சினைகள்ஏற்பட்டுள்ளன.

அரச தலைவருக்கு முரணான எந்தவொரு செயற்பாட்டையும் செய்வதற்கு அரச தலைவர் விரும்பவில்லை. அரச தலைவரின் தேவை சிறப்பான ஒரு தலைமை அமைச்சரிடம் இந்த நாட்டை ஒப்படைக்க வேண்டும் என்பது மட்டும் தான். அதனால்தான் தொடர்ந்து கட்சிகளோடு பேசியிருந்தார்.

நாடாளுமன்றத்திலே எதிர்க்கட்சிகள் பெரும்பண்மையை காட்டிய போதிலும் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் பெரும்பான்மையை நிரூபிக்க முடியவில்லை. இதுவரைக்கும் 113 பேர் கையொப்பமிட்டு அரச தலைவரிடம் ஒப்படைக்கவில்லை. ரணிலுக்கு ஆதரவாக100பேர்மட்டுமே

## மகிந்தஎதிர்ப்பாளர்கள் அமர்வுகளுக்கு வரார்

### துமிந்த கூறுகின்றார்

கொழும்பு, டிசெ.3

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மகிந்த எதிர்ப்புக் குழு தொடர்ந்தும் நாடாளுமன்ற அமர்வுகளைப் புறக்கணிக்கத் தீர்மானித்துள்ளது என்றுஅமைச்சர்துமிந்ததிசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவித்துள்ளதாவது:

எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவுள்ள நாடாளுமன்றஅமர்வில்நான்கலந்துகொள்ளப் போவதில்லை. எமது நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பாடசாலை மாணவர்களைப் போன்று செயற்பட்டுக் கொண்டிருப்பதே அதற்குக்காரணம்.

நாடாளுமன்ற சம்பிரதாயங்கள்தொடர்ந்தும்மீறப்படுகின்றன. முறையற்ற அமர்வுகளில் கலந்துகொள்ள விருப்பமில்லை. அதனால் தொடர்ந்துநாடாளுமன்றஅமர்வுகளைப்புறக்கணித்துவருகின்றேன்-என்றார். (ற)

## தேர்தலை நடத்தக்கோரி கையொப்பம் சேகரிப்பு



கொழும்பு, டிசெ.3

நாடாளுமன்றத்தைக் கலைத்து உடனடியாக பொதுத் தேர்தலை நடத்த வேண்டும்என்றுகோரிசிறிலங்கா பொது ஜன பெரமுனவின் ஏற்பாட்டில் கையெழுத்து வேட்டை நடத்தப்பட்டுள்ளது.

நாடுமுழுவதும்50இலட்சம் கையொப்பம் பெறும் நிகழ்வின் மற்றொரு கட்டம் நேற்றுப் புத்தளம், மதுரங்குளி நகரில் இடம்பெற்றது.

பொதுத் தேர்தலை நடத்தக் கோரும் துண்டறிக்கைகள் சிறிலங்கா பொது ஜன பெரமுன கட்சியின் உறுப்பினர்களினால் வழங்கப்பட்டன. சிறிலங்கா பொது ஜன பெரமுனகட்சியின்உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பொது மக்கள் தமது கையொப்பங்களை இட்டிருந்தனர்.

அங்கு பெறப்பட்ட கையொப்பங்கள் அரச தலைவர், தலைமை அமைச்சர் மற்றும்தேசியதேர்தல்ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படும் என்றுஏற்பாட்டாளர்கள்தெரிவித்துள்ளனர். (ற)

## சுட்டுக் கொல்லப்பட்ட பொலிஸ் அலுவலர்களின் இறுதிநிகழ்வு



மட்டக்களப்பு, டிசெ.3

மட்டக்களப்பு, வவுணதீவுப் பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்ட பொலிஸ் அலுவலர் கணேஸ்தினேஸின்இறுதிச் சடங்கு அரச மரியாதையுடன் நேற்று இடம்பெற்றது.

இறுதிச்சடங்கு உயிரிழந்த பொலிஸ் அலுவலரின் சொந்த ஊரான பெரியநீலாவணைப் பொது மயானத்தில் இடம்பெற்றது.

இறுதிச்சடங்கில் கிழக்கு மாகாண ஆளுநர்ரோகித போகல்லாம கிழக்கு மாகாணத்திற்கு பொறுப்பான மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் கபில ஜயசேகர, அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நுவன் வெதசிங்ஹ, அம்பாறை பொலிஸ் அத்தியட்சகர் சாமந்த விஜயசேகர உள்ளிட்ட உயர்பொலிஸ் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

மற்றைய பொலிஸ் உத்தியோகத்தரானகாலி, உடுகமவைச் சேர்ந்த நிரோசன் இந்திக்க பிரசன்னவின் உடலுக்குஅரசதலைவர்நேற்று நேரில் சென்று மரியாதை செலுத்தினார்.

அரச தலைவர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோரால் அனுப்பிவைக்கப்பட்ட இரங்கலுரைகளுடன், பூரணப்பொலிஸ்மரியாதையுடன் 39 மரியாதை துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மட்டக்களப்பு வவுணதீவு சோதனைச்சாவடியில்கடந்த 30ஆம்'திகதி இரவு அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டிருந்தனர். (ற)

## அரச தலைவர் தேர்தல் இப்போதைக்குநடக்காது

### சேமசிங்க எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, டிசெ.3

தற்போது நாட்டில் நிலவும் அரசியல் நெருக்கடிகளுக்கு அரச தலைவர் தேர்தலைநடத்துவதால்எந்தத் தீர்வும்கிடைக்காதுஎன்று நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசு மாகாண சபைத் தேர்தலையும், நாடாளுமன்றதேர்தலையும்வெகு விரைவில்நடத்தவேமுயற்சிக்கின்றதே தவிர அரச தலைவர்தேர்தலைநடத்த முயற்சிக்கவில்லை. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர்ஒருபோதும்அரச தலைவர் தேர்தல் இடம்பெறாது. அதற்கானஅவசியமும் அரசுக்குக் கிடையாது.

புதிய தலைமை அமைச்சரைத் தெரிவு செய்வதற்காக எதிர்வரும் 5ஆம் திகதிஐக்கியதேசியக்கட்சியினர் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரவுள்ளனர். அது தோல்வியில் முடியும்-என்றார். (ற)

## கூட்டமைப்பின் கைகளில் ஐக்கிய தேசிய முன்னணி!

### பீரிஸ் கூறுகின்றார்

கொழும்பு, டிசெ.3

ஐக்கிய தேசியக் கட்சியைத் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே வழிநடத்துகின்றது என்று சிறிலங்கா பொது ஜன முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

கொழும்பில்நேற்றுநடத்திய செய்தியாளர் சந்திப்பில் அதன் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கியதேசியக்கட்சியை மட்டுமல்லாது ஐக்கிய தேசிய முன்னணியில் உள்ள அனைத்துக்கட்சிகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே வழிநடத்தி வருகின்றனர். அவர்களை வழிநடத்தும் பணிப்பாளர் நாயகமாக நடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனே செயற்படுகின்றார்.

சுமந்திரனின் வழிகாட்டலில்தான் ஐக்கிய தேசிய முன்னணியின் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. நாடு எந்தத் திசையில் செல்கின்றது என்பதை அனைவரும் சிந்திக்கவேண்டும்.

ஐக்கிய தேசிய முன்னணிஅரசைஉருவாக்குவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பேமுழுவீச்சுடன் செயற்படுகின்றது-என்றார். (ற)

# மகிந்தவுக்கு சாதகமான முடிவை கூட்டமைப்பினர் எடுக்கக்கூடாது

## நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சிவமோகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.3

தமிழ் மக்களின் இன அழிப்புக்கும் தமிழ் இன ஒட்டுமொத்த அவலத்திற்கும் காரணகர்த்தாவாகவிளங்கும் மகிந்தவுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ சாதகமான முடிவினை கூட்டமைப்பு எடுக்க கூடாது என்பதே தமிழ் மக்களின் அடி மன எண்ணம். அதனை நாம் ஒரு போதும் மீற முடியாது எனக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சிவமோகன் தெரிவித்தார்.



இலங்கையின் அரசியலில் ஏற்பட்டுள்ள திடமற்ற அரசியல் நிலமையை பயன்படுத்திமகிந்தவும்சிலஆயுதக்குழுக்களும் மீண்டும் வடக்கு - கிழக்கில் தலை தூக்க முயற்சிக்கின்றன.

இதற்காக அவர்கள் குரல் கொடுக்கும் அதேநேரம் மெத்தப் படித்த மேதாவிகளாகக் காட்டும் சிலரும் அதற்கு தீனி போடும்வகையில்கருத்துரைக்கின்றனர். அதாவது இலங்கையில் உள்ள இரு தேசிய அரசியல் கட்சிகளையும் நாம் நம்பமுடியாது என்பது நீண்டகால அனுபவம். ஆனால் ஒரே தடவையில் பல எதிரிகளை எதிர்க்க முடியாது என்பதும் வரலாறு கற்றுத் தந்த பாடம்.

இந்த நிலையில் தமிழ் மக்களின் நீண்ட அழிவுக்கும்அவலத்துக்கும்காரணமாக இருந்த மகிந்தவை ஆட்சிக் கதிரைக்கு மீண்டும்கொண்டுவரவே கூடாது என்பதற்காகவே கடந்த தேர்தலில் கூட்டுமுயற்சிக்கு சம்மதம் தெரிவித்த நிலையில், இன்று அதே தன்மையான ஆட்சிமாற்றத்தின்போதுஎம்மைஅழித்த பிசாசுமீண்டும்அரியணைஏறுவதனை எந்த வழியில் தடுக்க முடியுமோ அத்தனை வழிகளையும் கையாண்டே தீர வேண்டும்என்றசிந்தனையேஉள்ளது. எமதுமக்கள்இன்றும்முள்ளிவாய்க்கால் அவலத்தையோ, மெனிக்பாம்கொடூரத்தையோ மறக்கவோ மன்னிக்கவோ தயாரகஇல்லை. இந்தநிலையில்தெற்கு அரசியல் குழப்பத்தில் நாம் ஏன் பங்கு கொள்ள வேண்டும். என சில அரசியல்வாதிகள் அப்பாவி மக்களை குழப்பிவிடவே முயல்கின்றனர்.

அந்தக் குழப்பத்தின் பின்னால் உள்ள சதியையும்பார்க்கவேண்டும். அதாவது இரு பிரதான கட்சிகளிடமும் நூறைத் தாண்டியஆசனங்கள்உள்ளநிலையில், கூட்டமைப்பு கை காட்டும் அணி ஆட்சி அமைக்கலாம் என்ற இறுதியில் ஒருபக்கம் எதிரியும் மறுபக்கம் நயவஞ்சகர்களின் கூடாரமும் என்பதும் புரியும். ஆனால் மக்களின் வேதனையைத் தனது சாதனையாகக் கொண்டவருக்கு ஒரு போதும்சம்மதம்கூற முடியாது. இந்தக்காலத்தில்நாம்மெளனம்காத்தாலோ நடு நிலையெனஒதுங்கிகொண்டாலோ முருங்கைமரத்தில்ஏறியுள்ளவேதாளம் மீண்டும்ஊருக்குள்புகுந்தேதீரும். அதற்கான முயற்சியை ஒரு மாதகாலத்திலேயே மேற்கொண்டும் உள்ளனர்.

இவை அனைத்தையும்புரிந்தும்நீண்ட அரசியல் அனுபவம் உடையவர்கள், படித்தவர்கள் எனக் கூறிக்கொள்ளும் கஜேந்திரகுமார்பென்னம்பலம், சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்றோர் மட்டுமன்றி மூத்த பொறுமைசாலி எனப்படும் முன்னாள் முதல்வர் சி.வி. விக்னேஸ்வரன் போன்றோரும் நடுநிலை வகிக்க வேண்டும் எனக் கூறுவதன் மூலம் மறைமுகநன்மையைமகிந்தரப்புஈட்டும்எனச்சற்றேனும்எண்ணாதுகருத்து தெரிவிப்பவர்களை எவ்வாறு எண்ணுவது என்பதும் புரியவில்லை - என்றார். (105)



## மகிந்தராஜபக்சவுக்கு ஆதரவாக வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

வவுனியா,டிசெ.3

வவுனியா நெடுங்கேணி பேருந்து நிலையத்தில் நேற்று முன்தினம்பிற்பகல் 4 மணியளவில் முன்னாள் அரசதலைவரும் தற்போதைய தலைமை அமைச்சருமான மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவாகப் பேரணி ஒன்று இடம்பெற்றுள்ளது.

மக்களுக்கான உரிமையை மக்களிடம் விட்டுவிடுங்கள், வாக்களிக்க இடமளியுங்கள் எனத் தெரிவிக்கும் பதாதையைத் தாங்கியவாறு பேரணி ஒன்று இடம்பெற்றுள்ளது.

நெடுங்கேணி மத்திய பேருந்து நிலையத்தில் 4 மணியளவில் ஒன்றிணைந்த மகிந்த ராஜபக்சவின் ஆதரவாளர்கள் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான கோசங்களை எழுப்பியவாறும், மக்களின் ஆணையை நாங்கள் ஏற்கத் தயார், தேர்தலை நடத்துவோம்எனத்தெரிவிக்கும்பதாதைகளுடன்பேருந்துநிலையத்தைச்சுற்றிபோராட்டம்ஒன்றினைமேற்கொண்டனர். இப்போராட்டத்தில் 10 இலட்சம் கையெழுத்து பெறும் நடவடிக்கையும் இடம்பெற்றது.

ஆண்கள், பெண்கள்எனப்பலரும்கலந்துகொண்டபோராட்டத்தில் முன்னாள் வடமத்திய மாகாண முதலமைச்சர் எஸ்.எம். ரஞ்சித் கலந்துகொண்டு கொண்டிருந்தார்.

## ரணில் விக்கிரமசிங்கவை நியமிக்க அரசதலைவர் இணக்கம் தெரிவிக்கவில்லை

### நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரகொடி தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.3



புதிய தலைமை அமைச்சர் ஒருவரை நியமிப்பதற்கான பிரேரணையை சபையில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்டால் புதிய தலைமை அமைச்சரை நியமிக்க தயாராகவுள்ளதாக தெரிவித்த அரசதலைவர், ரணில் விக்ரமசிங்கவை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தலைமைஅமைச்சராகநியமிப்பதற்குஇணக்கம்தெரிவிக்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

மேலும் ரணில் விக்ரமசிங்க மீண்டும் பிரதமராக நியமிக்கப்படுவார் என்ற ஐக்கிய தேசிய கட்சியின் கனவு ஒரு போதும்நிறைவேறப்போவதில்லை.

அத்தோடு நாட்டில் தொடரும் நெருக்கடி நிலைமைக்கு விரைவில்பொதுத்தேர்தல்ஒன்றுக்குசெல்வதன்மூலமே தீர்வு காணமுடியும். எனினும் தேர்தலுக்கு முகங்கொடுப்பதற்கான தைரியம் ஐ.க.வுக்கு இல்லை. அதனாலேயே இவ்வாறு நேரத்தை வீணடிக்கும் செயற்பாடுகளில்ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர்எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## முச்சக்கர வண்டிக் கட்டணம் பத்து ரூபாவால் குறைப்பு

கொழும்பு,டிசெ.3

நேற்று நள்ளிரவு முதல் முச்சக்கர வண்டிக்கான கட்டணம் 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் முதலாவது கிலோ மீற்றருக்கான கட்டணம் 50 ரூபாவாக அறவிடப்படும்.

எரிபொருள் விலை அண்மையில் குறைக்கப்பட்டதை அடிப்படையாகக் கொண்டே, அதன் பயனை பயணிகளுக்குப் பெற்றுக் கொடுக்கும் வகையிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன்நேற்றுநள்ளிரவுமுதல்முச்சக்கரவண்டியின் கட்டணங்களை குறைக்காத சாரதிகளுக்கு எதிராகசட்ட நடவடிக்கைஎடுக்கப்படவுள்ளமையும்குறிப்பிடத்தக்கது.

## மாகாணங்களை எட்டாக குறைக்க முடியாது

### அப்துல்லாஹ் மஹ்ரூப் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.3

ஒன்பது மாகாணங்களை எட்டு மாகாணங்களாக குறைக்க முடியாது என்பதுடன், வடக்கு - கிழக்கை இணைக்க முடியாது என்ற விடயத்தில் உறுதியாக இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லாஹ் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று முன்தினம் இரவு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு இணைப்பு என்ற விடயத்திலே அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் தெளிவோடு இருக்கின்றோம்.

ஒன்பது மாகாணங்களை, எட்டு மாகாணங்களாக குறைக்க முடியாது. வடக்கு - கிழக்கை இணைக்க முடியாது என்ற விடயத்தில் உறுதியாக இருக்கின்றோம்.

காரணம் இன்றைய நிதி ஒதுக்கீட்டு முறைகள், வேலை வாய்ப்புக்கள், அபிவிருத்தி விடயங்கள் அத்தனையும் பிரதேச ரீதியாக, தொகுதி ரீதியாக, மாவட்ட ரீதியாக, மாகாண ரீதியாக ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இரண்டு மாகாணங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதியை, வடகிழக்கு என இணைந்து குறைத்து கொள்வதற்கோ எதிர்காலத்தில் எமது சமூகத்தின் உரிமைகளை விட்டுக் கொடுப்பதற்கோ நாங்கள் தயாரில்லை.

மட்டக்களப்பில் 27%, திருகோணமலையில் 44%, அம்பாறையில் 43% இருக்கின்ற முஸ்லிம் சமுகம், வடகிழக்காக மாறி ஒரே இரவில் 16% ஆகமாறுவதற்குதயாரில்லை. அந்த அடிப்படையிலே நாங்களும் எங்களுடைய கோரிக்கைகளை அரசதலைவர்மற்றும்தலைமைஅமைச்சரோடு பேசி இருக்கின்றோம் எனத் தெரிவித்துள்ளார்.

## இலங்கையில் தமிழ் தலைமைகள் மக்களை அடகு வைத்துள்ளனர்

### சிவசக்தி ஆனந்தன் எம்.பி தெரிவிப்பு

வவுனியா,டிசெ.3



ஒரு கட்சிக்கு ஆதரவளித்ததன் மூலம் தமிழ் தலைமைகள் தமிழ்மக்களைஅடகு வைத்துள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியா கிடாச்சூரியில் நடைபெற்ற பிரதேச செயலக கலாசார விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

கலைஞர்கள், புத்திஜீவிகள், பொது மக்கள் ஒன்றிணைந்து கலை, கலாசாரத்தைப் பாதுகாப்பது போன்று அரசியல் ரீதியிலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இன்றைக்கு தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கும் இந்த மாற்றத்தை தமிழ்மக்களின்நலன்சார்ந்துஇராஜதந்திரரீதியாக முன்னகர்த்தக் கூடியசந்தர்பங்களைக்கைநழுவ விட்டுள்ளார்கள்.

இன்று இந்த நாடாளுமன்றத்தில் ஒரு தலைமை அமைச்சரை நியமிப்பதற்கு அல்லது பெரும்பான்மையைக்காட்டுவதற்கு 113 உறுப்பினர்கள் தேவையான வேளையில்பலதமிழ்நாடாளுமன்றஉறுப்பினர்களை கையில் வைத்துக் கொண்டு முன்னுக்கு பின் முரண்பட்ட கருத்துக்களைக் கூறிக் கொண்டு இருக்கிறார்கள்.

ஒரு தடவை கூறுகிறார்கள் நாங்கள் மகிந்த ராஜபக்சவை ஆதரிக்கவில்லை. ரணில்விக்கிரமசிங்கவையும் ஆதரிக்கவில்லை. ஆக இருவரையும் ஆதரிக்கவில்லைஎன்றார்கள். பின்னர் இந்த நாட்டில் ஜனநாயகம் மீறப்பட்டுள்ளது. அரசமைப்பு மீறப்பட்டுள்ளது. அதற்காக தான் ஆதரவளிப்பதாகக்கூறியிருக்கிறார்கள்.

அதனையடுத்து நாடாளுமன்றத்தில்வாக்கெடுப்புநடந்து, நீதிமன்றத்திலும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால்இன்றுஇருவருக்கும் ஆதரவு இல்லை என்று கூறிய தமிழ்த்தலைமைகள்ஒருகட்சிக்கு அல்லது ஒரு கட்சியைச் சேர்ந்த நபர் தலைமை அமைச்சராக வர வேண்டும் என்பதற்காக எந்தவித நிபந்தனையுமின்றிஆதரவளித்து உள்ளார்கள்.

இதன்மூலம்தமிழ்மக்களைஅடகு வைத்துள்ளார்கள். இதனை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் - என்றார்.

பிரதேச செயலர் கா.உதயராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட செயலர் ஐ.எம். ஹனீபா, மேலதிக மாவட்டச் செயலர் திரேஸ்குமார் மற்றும் கலைஞர்கள் எனப்பலரும்கலந்து கொண்டனர். (110)

# பொட்டம்மானை இழுப்பது அரசியல் சுயலாபத்துக்கே

## கமல் குணரத்ன கருணா மீது காட்டம்

கொழும்பு, டிசெ.3
தமிழீழவிடுதலைப்புலிகள் அமைப்பின்புலனாய்வுப்பிரிவின்தலைவர்பொட்டம்மான் உயிருடன் இருப்பதாக கருணாகூறுவது அரசியல் இலாபத்துக்கே என்று மேஜர்ஜெனரல்கமல்குணரத்னதெரிவித்தார். பொட்டம்மான் உயிருடன் இருப்பதாகவும், அவர் நோர்வே நாட்டில் வசித்து வருவதாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின்முன்னாள்உறுப்பினரும், முன்னாள்பிரதி அமைச்சருமான விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்துள்ளார். இந்தக் கருத்துக்குப் பதிலளிக் கும் போதே மேஜர் ஜெனரல் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:
2009ஆம் ஆண்டு மே மாதம் விடுதலைப்புலிகளுக்குஎதிரானபோர்நிறைவுக்கு கொண்டு வரப்பட்டது. இதன் போது புலிகள் அமைப்பின் தலைவர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர்.
இறுதிக்கட்டப் போரில் நந்திக்கடல் பகுதியில்ஏராளமானசடலங்கள்புதைந்து கிடந்தன. இவற்றில் விடுதலைப் புலிகள் அமைப்பின் மூத்த தலைவர்கள் பலரின் சடலங்களும் இருந்தன.
நந்திக்கடல்பரந்தபிரதேசமாகும். இறுதிக்கட்டப் போரில் பல உடல்கள் நீருக்குள் ளும், சேற்றுக்குள்ளும் புதைந்து கிடந்தன. அவ்வாறானதொரு சூழ்நிலை யிலேயே விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் உயிரற்ற உடலும் மீட்கப்பட்டது. இறுதிக் கட்ட நந்திக்கடல்போரில்எந்தவொருதலைவரும் தப்பிக்க வாய்ப்பில்லை.
விடுதலைபுலிகள்இயக்கத்தின்கிழக்கு தளபதியாகச்செயற்பட்டகருணாஅரசியல்பிரவேசத்துக்குவந்ததன்பின்னர் போலியான பரப்புரைகளைச் செய்து வருகின்றார்.
இது அவரது அரசியல் நோக்கத்தை மையப்படுத்தியதாகவே காணப்படுகின்றது. அவ்வாறு பொட்டம்மான் உயிருடன் இருப்பாராயின் எட்டு வருடங்கள் தலைமறைவாகி இருக்க வேண்டிய தேவை கிடையாது.
அரசியல்நோக்கங்களுக்காகவும்நாட்டில் அநாவசியமாக குழப்பங்களை ஏற்படுத்தும் நோக்கிலேயும் இவ்வாறானபேச்சுக்களைகருணாகூறிவருகின்றார். 53ஆவது படையணியின் கட்டளை அதிகாரியாக நான் விளங்கினேன். நாம்நந்திக்கடலில்விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிப்போரை மும்முரமாக முன்னெடுத்தோம்.
விடுதலைப்புலிகளின்தலைவர்பிரபாகரனின் உயிரற்ற உடலைக் கைப்பற்றியதும்எனதுபடையணியே. ஆகவே புலிகளின் புலனாய்வுத் துறையின் பொறுப்பாளர் பொட்டம்மான உயிருடன் இருக்கின்றார் என்ற கருத்து முற்றிலும் பொய்யாகும்.
விடுதலைப் புலிகள் சம்பந்தமாகக் கிடைக்கப்பெற்றஅனைத்துப்புலனாய்வுத் தகவல்களும் அதனை உறுதிப்படுத்தியுள்ளன - என்றார்.

## ஐ.தே.கவின் கதிர்காம யாத்திரையை கடவுள் கூட ஏற்றுக்கொள்ளமாட்டார்

### கூறுகின்றார் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த



கொழும்பு, டிசெ.3
ஐக்கிய தேசியக்கட்சியினர் கதிர்காமம் வரை பாதயாத்திரை செல்வதாக தெரிவித்துள்ளனர். அவர்களின் கோரிக்கையைக் கடவுள் கூடஏற்றுக்கொள்ளமாட்டார் என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்ததெரிவித்தார்.
தேசியசுதந்திரமுன்னணிமஹரகமவில்ஏற்பாடுசெய்திருந்த கூட்டத்திலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் சீரான முறையில் இடம்பெறுகின்றன. தற்போதைய அரசின் கீழ் மூன்றாவது தடவையாக எரிபொருளின் விலை குறைக்கப்பட்டுள்ளது.
இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் பந்துல குணவர்த்தன, அரச தலைவர் அமைத்த அரசு மீண்டும் ஒருபோதும் திருப்பி வழங்கப்படமாட்டாது - என்றார். (ஐ)



## மீளத் தாவினாரா வசந்த?

கொழும்பு, டிசெ. 3
ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சேனாநாயக்க, ராஜகிரியவில் நடைபெற்றநிகழ்வு ஒன்றில் அரசதரப்பினருடன் கலந்து கொண்டுள்ளார். "நாட்டை கட்டியெழுப்பும் தேசிய சபை" என்ற தலைப்பில் நிகழ்வு ஒன்று ராஜகிரியவில் நேற்று அத்துரலியரத்னதேரர்தலைமையில் நடைபெற்றது.
நிகழ்வில்அமைச்சர்களானதினேஷ்குணவர்தன, உதய கம்மன்பில மற்றும் பொதுமக்கள் முன்னணிக் கட்சியின் நிறுவுனர் பசில் ராஜபக்ச ஆகியோருடன் வசந்தசேனநாயக்கவும்கலந்து கொண்டுள்ளார்.
இதேவேளை, கடந்த வாரம் அரசிலிருந்து விலகி மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்ட வசந்த சேனாநாயக்க, தனது அமைச்சு பதவியினையும் துறந்தார். அத்துடன், இனி ஒரு போது கட்சி தாவல்களில் ஈடுபட போவதில்லை எனவும்அவர்கூறியிருந்தார். எனினும், ராஜகிரியவில் நடைபெறும் நிகழ்வில் அரச தரப்பினர்களுடன் வசந்த சேனாநாயக்க கலந்துகொண்டுள்ளமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

## நாட்டின் குழப்பத்துக்குத் தேசிய ப்பட்டியல் எம்.பிக்களே காரணம்

### இராதாகிருஸ்ணன் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.3
இந்த நாட்டின் இன்றைய நிலமைக்குக் காரணம் சிறிலங்கா சுதந்திர கட்சியில் தெரிவு செய்யப்பட்டுள்ள தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களே என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் குற்றச்சாட்டியுள்ளார்.
சங்கீதம், நடனம் ஆகியவற்றின் பட்டப்படிப்புக்கான நான்கு நாள் பயிற்சி நெறி பத்தனை ஸ்ரீபாத கல்வியற் கல்லூரியில்நடைபெறுகின்றது.
இந்தப் பயிற்சி நெறியை நேற்றுப் பார்வையிட்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களை மீண்டும் நாடாளுமன்றத்துக்கு கொண்டு வந்ததன் பயனை தற்பொழுது எமது நாடு அனுபவித்து வருகின்றது.
எனவே தேசிய பட்டியல் மூலமாக தெரிவு செய்யப்படுகின்றவர்கள் திறமை யான பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களாகவும்இருக்க வேண்டும் என்பதை இந்த நர்டாளுமன்றம் எமக்குத் தெளிவாகத் தெரிவித்துள்ளது.
மக்களின்ஆணைய்யைநிராகரித்து மீண்டும் இந்தநாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளதால்அவர்கள் அரச தலைவருக்குப் பிழையான தகவல்களை வழங்கி இன்று இந்த நாட்டையே படு பாதாளத்தில் தள்ளிவிட்டார்கள். உண்மையிலேயேதேசியப் பட்டியல் என்பது என்ன? நாடாளுமன்றத்துக்கு அனைத்து துறைகளைச்சார்ந்தவர்கள் உள்வாங்கப்படவேண்டும் என்பதே.
ஆனால் இன்று அப்படிநடப்பதில்லை. கட்சிகள் தங்களுக்குத் தேவையானவர்களைத்தெரிவுசெய்கின்றார்கள் அது எல்லாக் கட்சிக்கும் பொருந்தும், ஐக்கிய தேசியக்கட்சியில்தேசியப்பட்டியலில்தெரிவுசெய்யப்பட்டவர்களின் நிலையும் இதுவாகவே இருக்கின்றது.
எனவேசரியானவர்களைத் தெரிவுசெய்வதற்குச் சம்பந்தப்பட்டவர்கள்எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
மக்கள் நிராகரிக்கின்றவர்களை எந்தக் காரணம் கொண்டும் மீண்டும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்கின்ற பிழையான நடைமுறையை இனிமேலாவது .இரண்டு முதன்மைக் கட்சிகளும் பின்பற்றக்கூடாது - என்றார். (ஐ)

## ரணிலுடன் தொடர்ந்தும் பயணிக்க விரும்பாமையாலேயே அவரைப் பதவியில் இருந்து நீக்கினார் அரச தலைவர்

### கூறுகின்றார் கெஹெலிய ரம்புக்வெல்ல

கொழும்பு.டிசெ.3
"ரணில் விக்ரமசிங்கவுடன் தொடர்ந்தும் பயணிக்க முடியாததன் காரணத்தினாலேயே அரச தலைவர் தனக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி அவரைப் பதவியிலிருந்து நீக்கினார்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.
ஐக்கிய தேசிய முன்னணிக்கும் அரச தலைவருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
" தலைமை அமைச்சர் பதவியிலிருந்து மகிந்த ராஜபக்சவை நீக்கி விட்டு ரணில் விக்ரமசிங்கவை ஒரு போதும் தலைமை அமைச்சராக அரசதலைவர் நியமிக்க மாட்டார். இது தொடர்பில் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுடனான சந்திப்பிலும் அரச தலைவர் உறுதியாகத் தெரிவித்துள்ளார். மகிந்த ராஜபக்சவிற்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி சமர்ப்பித்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் நாடாளுமன்ற சம்பிரதாயங்களுக்கு அமைய சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறிருக்க அந்தத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பை எவ்வாறு நாம் ஏற்றுக் கொள்வது என்பதே எமது கேள்வி.
நாடாளுமன்றில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டுமாயின் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட பின்னரே நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டு 5 நாள்களுக்கு பின்னரே அத் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும். விவாதத்தின் பின்னர் இலத்திரனியல் முறையில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். அவ்வாறு வாக்கெடுப்பு நடத்தப்பட்டு 113 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டால் மாத்திரமே அதனை ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால் மக்கள் விடுதலை முன்னணி கொண்டு வந்த தீர்மானத்தில் இந்தச் செயற்பாடுகள் பின்பற்றப்படவில்லை.
வரலாற்றில் ஆளுந்தரப்பு இல்லாது நாடாளுமன்ற அமர்வுகள் இடம்பெற்றுள்ளமை எமது நாட்டில் மட்டுமேயாகும். நாடாளுமன்றில் அதிகாரம் படைத்த சபாநாயகர் நடுநிலமையாகச் செயற்படாது கட்சி சார்பாகச் செயற்படுகிறார். அதை நாம் கவனத்தில் கொள்வதாய் இல்லை நாடாளுமன்ற சம்பிரதாயங்களை மீறுபவர்களின் நடவடிக்கைகளுக்கு நாங்கள் கவனம் செலுத்த போவதில்லை.
எது எவ்வாறிருந்தாலும் எதிர்வரும் 7ஆம் திகதி நீதி மன்றம் வழங்கும் தீர்ப்பிற்கமையவே எமது அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்போம்." என்

## விலைச் சூத்திரம் நடைமுறையில் இருந்திருந்தால் விலை குறைக்கப்பட்டிருக்கும்

### அர்ஜுன ரணதுங்க தெரிவிப்பு

கடந்த அரசில் அறிமுகப்படுத்தப்பட்ட எரிபொருள் விலைச் சூத்திரம் நடைமுறையில்இருந்திருந்தால்தற்போது உள்ளதுபோன்றுமுன்னரும்எரிபொருள் விலை குறைக்கப்பட்டிருக்கும் என்றுஐக்கியதேசியமுன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்கதெரிவித்தார். தலதாமாளிகைக்கான பயணத்தினை நேற்று முன்தினம் மேற்கொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
தற்போதுநாட்டில்இருக்கின்றநிலை சிறந்ததல்ல என்றும் இது தொடர்பில் அரச தலைவருடன் நேற்றுமுன் தினமும் பேச்சு இடம்பெற்றதாகவும் அவர் கூறினார். அதேவேளை எதிர்வரும்நாள்களிலும்பேச்சு இடம்பெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)





## அரசுக்கு எதிராக போராட்டம்

கொழும்பு, டிசெ.3

அரசுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களால் போராட்டம் ஒன்று நேற்று தெரணியகலையில் முன்னெடுக்கப்பட்டது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கவும், சூழ்ச்சி முறையில் ஆட்சியைக் கைப்பற்றிய அரசுக்கு எதிராகவும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் ஐக்கிய தேசியக் கட்சியின் தெரணியகலை பிரதேச சபையின் உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அரசுக்கு எதிராகத் தமது எதிர்ப்பை வெளியிட்டனர். (ஐ)

# பதவி ஆசையாலேயே ஆடுகின்றார் மைத்திரி

*சாடுகிறார் சரத் பொன்சேகா*



**கொழும்பு, டிசெ. 3**

**எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஒருவரே அரச தலைவர் வேட்பாளராகத் தெரிவு செய்யப்படுவார் என்று அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மூர்க்கத்தனமான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சிந்திக்காமல் ஒவ்வொரு நேரத்துக்கும் ஒவ்வொரு விதமாகப் பேசுகின்றார். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை மறந்து ஜனநாயகத்துக்கு விரோதமான செயற்பாடுகளையே தொடர்ந்தும் செய்து வருகிறார்.

இதற்குக் காரணம் எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள ஒருவரைப் பொது வேட்பாளராக நிறுத்துவோம் என்று அறிவிக்கப்பட்ட நாள் தொடக்கம் அரச தலைவர் ஐ.தே.க.வுக்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொள்ள ஆரம்பித்தார். தற்போது அதன் விளைவு அரசியலில் பெரியளவு நெருக்கடியைத் தோற்றுவித்து நாட்டிலும் அமைதியின்மையை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, அரச தலைவரைக் கொலை செய்யும் சதித்திட்டத்தில் எனக்கும் தொடர்புள்ளதாகக் கூறப்பட்டு வருகின்றமையை வன்மையாகக் கண்டிக்கின்றேன்" என்றார். (ஐ)

## நாட்டில் பற்றுள்ள புதிய அணி உருவாகும்

*கூறுகின்றார் அத்துரலியே ரத்தன தேரர்*

கொழும்பு, டிசெ. 3

அரசியல்வாதிகளை காட்டிலும் மக்கள் மீது அக்கறை கொண்டவர்களை ஒன்றிணைத்து நாட்டைச் சிறந்த முறையில் மீள கட்டியெழுப்புவதற்கு அணியொன்றை உருவாக்கவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்தன தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"தற்போது ஏற்பட்டுள்ள இக்கட்டான அரசியல் சூழ்நிலையில் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டியது கட்டாயமாகும்.

மக்கள் ஆணையால் தெரிவு செய்யப்பட்ட அரசியல்வாதிகள், அவர்களது சேவையை மறந்து தவறான பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர்

இதனால் அரசியல்வாதிகளைக் காட்டிலும் உயரிய நிலையில் தீர்மானங்களை மேற்கொள்ள கூடிய சுயாதீன சிந்தனையாளர்களுடன் இணைந்து சிறிலங்கா தேசிய மகா சபை என்ற பெயரில் அணியொன்றைக் கட்டியெழுப்பி அதன் ஊடாக மக்களுக்கு வேண்டிய சேவைகளை ஆற்றத் தீர்மானித்துள்ளோம்" என்றார். (ஐ)

## கடந்த காலத்தை மறக்கக்கூடாது ஐ.தே.க.

*கூறுகின்றார் டலஸ் எம்.பி.*

கொழும்பு, டிசெ. 3

ஜனநாயகத்துக்காக இன்று போராட்டங்களில் ஈடுபடுகின்ற ஐக்கிய தேசியக் கட்சியினர் ஜனநாயகத்தைச் சீரழித்த கடந்த காலத்தை மறக்கக் கூடாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். காலி ரத்கம பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கைக்குள் அராஜகமான ஒரு சூழல் ஏற்பட்டுள்ளதாகப் பரப்புரை செய்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் ஜே.வி.பியினரும், ஐக்கிய தேசிய முன்னணியிரும் நாட்டுக்கு அவப்பெயரை ஏற்படுத்தி வருவதாகக் கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

## ரணிலுடன் ஒருபோதும் இணையமாட்டேன்

*அரச தலைவர் மைத்திரி தெரிவிப்பு*



கொழும்பு, டிசெ. 3

ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து பணியாற்றும் எண்ணம் எனக்கு ஒருபோதும் இல்லை என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அரச தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதில் மேலும் தெரிவித்ததாவது:

"ரணிலுடன் இப்போது மட்டுமல்ல எதிர்காலத்திலும் கூட இணைந்து பணியாற்றும் விருப்பம் எனக்கு இல்லை. இதுவே எனது தீர்க்கமான முடிவு.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கும் ஒருவரைத் தலைமை அமைச்சராகத் தெரிவு செய்ய முடியும் என்று அரசமைப்பில் தெரிவிக்கப்படவில்லை. ஆனால் அரச தலைவரால் தலைமை அமைச்சர் ஒருவர் தெரிவு செய்யப்படுகின்றமை தொடர்பில் அரசமைப்பில் தெளிவாக கூறப்பட்டுள்ளது. இதேவேளை, சபாநாயகர் கரு ஜயசூரிய மற்றும் முன்னாள் அமைச்சர் சஜித் பிரேமதாச ஆகியோர் ரணில் மீதுள்ள அச்சத்தின் காரணமாகவே தலைமை அமைச்சுப் பதவியை ஏற்கவில்லை.

தற்போதைய அரசியல் பிரச்சினைக்கு எதிர்வரும் 31ஆம் திகதிக்குள் தீர்வு எட்டப்படாவிடின் பொதுத் தேர்தலுக்குச் செல்வதே சிறந்தது" என்றார். (ஐ)

# ஐ.தே.கவினதும் கூட்டமைப்பினதும் இணைவு தனி ஈழத்தை அடைவதற்கான வழிமுறையே

*மகிந்த அணி குற்றச்சாட்டு*



கொழும்பு, டிசெ.3

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையிலான கள்ளத் தொடர்பு அம்பலமாகியுள்ளது. இது தனி ஈழத்தை அடைவதற்கான வழிமுறையே என்று மகிந்த அணி தெரிவித்துள்ளது.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைதொடர்பில் கருத்து வெளியிடும் போதே அமைச்சர் விமல்வீரவன்ச இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"முதன்மையான எதிர்க்கட்சிப் பதவியைக் கைப்பற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்தகாலங்களில் அரசின் பங்காளிக்கட்சிபோலவே செயற்பட்டது. ஆனால், அதை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளவில்லை.

எனினும் தற்போது ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியமைப்பதற்கு ஆதரவளிக்கப்படும் என அரச தலைவருக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடிதம் அனுப்பியுள்ளது.

இதன்மூலம் ஐ.தே.கவுக்கும், கூட்டமைப்புக்குமிடையிலான கள்ளத் தொடர்பு அம்பலமாகியுள்ளது. ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியில் இருந்தால் மட்டுமே கூட்டாட்சித் தீர்வை பெறமுடியும். எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதிக்குள் அதை வழங்கவேண்டும் எனக் கூட்டமைப்பு நிபந்தனை விதித்துள்ளது. கூட்டமைப்பின் அனுமதியின்றி வடக்கு, கிழக்கில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கக்கூடாது எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. தனிஈழத்தை அடைவதற்கான வழிமுறையே இது. எனவே, மக்கள்சிந்திக்கவேண்டும்" என்றார். (ஐ)




*கீரிமலை கருகம்பனை இந்து இளைஞர் கழகத்தின் கல்விக்கரம் செயற்திட்டமூடாக வறிய நிலையில் உள்ள, கல்வியில் சிறந்து விளங்கும் மாணவிக்கு கழகத்தின் மூத்த உறுப்பினர் ஒருவரின் பிறந்தநாளை முன்னிட்டு புதிய கல்வி யாண்டுக்கான கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ம– 114)*

# 40 பேர் கடமையாற்ற வேண்டிய காணி நடுவர் சபையில் 19 பேர்

## மந்த கதியிலான செயற்பாடுகளுக்கு அதுவே காரணம் என்று குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், டிசெ. 3**

**நாற்பது மத்தியஸ்தர்கள் பணியாற்ற வேண்டிய காணி (சிறப்பு) நடுவர் சபையில் 19 பேர் கடமையாற்றுவதால் யாழ்ப்பாணம் மாவட்டம் முழுவதற்கான சேவையை முன்னெடுக்க முடியாத நிலையில் யாழ்ப்பாண மாவட்ட காணி நடுவர் சபை செயற்படுகின்றது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.**

யாழ்ப்பாண மாவட்ட சிறப்பு காணி நடுவர் சபையின் தலைமை அலுவலகம் யாழ்ப்பாணம் கொட்டடி நமசிவாயம் வித்தியாசாலையில் இயங்குகின்றது. நீதி அமைச்சின் நடுவர் சபை ஆணைக்குழுவின் கீழ் சிறப்பாக பயிற்றப்பட்டகாணிநடுவர்கள்நியமிக்கப்பட்டுள்ளனர். எனினும் 19 நடுவர்களே அவ்வாறு செயற்படுகின்றனர். மக்களின் தேவையுடன் ஒப்பிடுகையில் மேலதிகமாக 21 நடுவர்கள் தேவை என்ற நிலையே தற்போது உள்ளது. இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட காணி நடுவர் சபையின் உறுப்பினர்களால் நீதி அமைச்சின் கவனத்துக்குக்கொண்டு செல்லப்பட்டுள்ளது.

காணி சம்பந்தமான சிறப்பு நடுவர் சபை பல வருடங்களாக யாழ்ப்பாண மாவட்டத்தில்இயங்குகின்றபோதிலும் நடுவர்களுக்கான சிறப்பு அடையாள அட்டைகள் இன்னமும் வழங்கப்படவில்லை. பெயர்விவரங்கள்வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரமாகாத நிலைகளும் தொடர்கின்றன. மேலும் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் மூலம் வழங்கப்படுகின்ற மாதாந்தக் கொடுப்பனவுகளும் காலம் தாழ்த்தப் பட்டே வழங்கப்படுகின்றன என்றும் குற்றஞ்சாட்டப்படுகிறது. (ம-50)

# சிறாட்டிக்குளத்தைச் சீரமைப்பதற்கு கோரிக்கை விடுத்தும் பயனில்லை!

## வெள்ள இடருக்கும் அதுவே காரணம் என்று அந்தப் பகுதி கமக்கார அமைப்பு சாடுகிறது

தென்மராட்சி, டிசெ. 3

கொடிகாமம் கெற்பெலி சிறாட்டிக்குளம் உரிய காலத்தில் சீரமைக்கப்பட்டிருந்தால்மழைவெள்ளத்தால்அயலில்இருந்த குடும்பங்கள் பாதிக்கப்படும் அவல நிலை ஏற்பட்டிருக்காது என்று அந்தப் பகுதி கமக்கார அமைப்பு குற்றஞ்சாட்டியது.

குளத்தை ஆழமாக்கி சீரமைத்து விவசாயிகள் பயன்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டிருந்தும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாததால் குளம் உடைப்பெடுத்து அயலில் உள்ள 13 குடும்பங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டது.

கடந்த செப்ரெம்பர் மாதம் மறுவாழ்வு அமைச்சர் யாழ். மாவட்டமேலதிகசெயலர்ஆகியோரிடம்குளத்தின்சீரமைப்புத் தொடர்பில் முறையிடப்பட்டது என்றும் வெள்ளநீர் வழிந்தோடக்கூடியவடிகால்அமைக்கப்பட்டுள்ளநிலையில் குளம் சீரமைக்கப்பட வில்லை என்றும் அந்த அமைப்பு குற்றம் சுமத்துகிறது.

இந்த விடயம் தொடர்பாக பிரதேசசெயலரிடம் கேட்டபோது: "இந்தக் குளம் தனியாருக்குச் சொந்தமானது என தெரிவிக்கப்பட்ட போதிலும் நாம் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாக விவசாயத் திணைக்களம் ஊடாக அடுத்த வருடம் குளத்தைச்சீரமைப்பதற்குநடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் குளம் உடைப்பெடுத்துள்ளது. பாதிக்கப்பட்டதாகக்கூறப்படும்13குடும்பங்களில்எட்டுக்குடும்பங்களுக்கு ஏற்கனவே நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஏனைய இரு குடும்பங்கள் இந்த வருட வீடமைப்புப் பட்டியலில் உள்ளன. பாதிக்கப்பட்ட ஏனைய மூன்று குடும்பங்களுக்கு இடர் முகாமைத்துவ அமைச்சால் தற்காலிக தகரக் கொட்டில்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன" - என்று தெரிவித்தார். (ம-9,159)

# கேபிள் அலைவரிசை நடத்துபவர்கள் கம்பங்கள் நடுவதற்கு நிபந்தனை

## சபையுடன் இணங்கினால் பரிசீலிக்கப்பட முடிவு

யாழ்ப்பாணம், டிசெ. 3

யாழ்ப்பாணக்குடாநாட்டில்கேபிள்அலைவரிசை நடத்துபவர்கள் தனியான கம்பங்கள் நடுவதற்கு சபையின் நிபந்தனையுடன் இணங்கினால் அனுமதிப்பது தொடர்பில் பரிசீலிக்கப்படும்என்றுதெரிவித்தார்யாழ்ப்பாண மாநகர முதல்வர் ஆனோல்ட்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து கேபிள் இணைப்பை வழங்கும் தனியார் நிறுவனமொன்றுமாநகரசபைஎல்லைப்பகுதிகளில் தனியான கம்பங்கள் நட்டு அதன் மூலம் கேபிள் இணைப்பைக் கொண்டு செல்வதற்குமாநகரசபையிடம்அனுமதிகோரியுள்ளமை தொடர்பில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற மாநகர சபையின் சிறப்பு அமர்வில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

குறித்தஒருநிறுவனத்துக்குமட்டும்அனுமதி வழங்கினால் அதேபோன்று சேவையை வழங்கும் ஏனைய நிறுவனங்களும் தனியாகக் கோருவதற்கு வாய்ப்புண்டு. அதனால் இதை அனுமதிக்க முடியாது என உறுப்பினர்கள்ரெமிடியஸ்மற்றும்யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

குறித்த சேவையை வழங்குவதா?, அவ்வாறு வழங்குவதானால் என்ன நிபந்தனை?;அதில்என்னவிடயத்தைஇணைக்க வேண்டும்? என்பதற்கே இங்கே இந்த விடயத்தைக் குறிப்புப்போட்டுள்ளோம். இங்கே பிரஸ்தாபிக்கப்பட்டவுடன் அனுமதிப்பதாகாது. அதற்குஎன்னவழிமுறைஎன்பதனை அனைவரும் தெரிவிக்கலாம். அதன் பிரகாரம் கம்பத்துக்கு அனுமதி வழங்கினால் எமக்கான வரி எவ்வளவு? இதே சேவையை வழங்கும் ஏனைய நிறுவனங்களும் அவ்வாறுவிண்ணப்பித்தால்குறித்தகம்பத்தின் ஊடாகவே அவர்களும் இணைப்பைக் கொண்டுசெல்ல அனுமதிப்பதோடு அதற்கானவாடகையை மாநகரசபையின்ஒப்புதலுடனேயேதீர்மானிக்கமுடியும்போன்றநிபந்தனைகளையும் இணைக்கலாம் என்று ஆனோல்ட் தெரிவித்தார். (ம-105)

# மீசாலை சந்தியில் இளைஞர்கள் அத்துமீறல்

சாவகச்சேரி, டிசெ. 3

மீசாலைச் சந்தியில் மாலை வேளைகளில் பொழுதைப் போக்கும் இளைஞர்களால் பாடசாலை மாணவிகள் உட்பட பெண்கள் அந்த வழியே செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

தினமும் மாலை வேளைகளில் அந்தப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையத்துக்கு முன்பாகக் கூடும் 40க்கும் மேற்பட்ட இளைஞர்கள் தனியார் கல்வி நிலையம் சென்று திரும்பும் மாணவிகள் வேலைக்குச் சென்று திரும்பும் இளம்பெண்கள் மற்றும் வாகனங்களில் வந்து இறங்கிச் செல்லும் பெண்கள் போன்றோரை தரக்குறைவான வசனங்களால் ஏசுகின்றனர்.

அதனைத் தட்டிக் கேட்கச் செல்லும் ஆண்களை இளைஞர்கள் தாக்க முனைகின்றனர்.

இது தொடர்பாகப் பொலிஸாருக்கு முறையிட்டும் எதுவித பயனும் இல்லை என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர். (ம-9,159)




*யாழ்ப்பாணம் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் காவலாளி கட்டடம் கடந்த வெள்ளிக்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டது. மானிப்பாய் இந்துக் கல்லூரியில் 1989ஆம் ஆண்டு 1990ஆம் ஆண்டுகளில் கல்விப் பொதுத்தராதர உயர்தரத்தில் கல்வி பயின்றவர்களால் இந்தக் காவலாளி கட்டடம் அமைக்கப்பட்டு பாடசாலைச் சமூகத்திடம் கையளிக்கப்பட்டது. (ம– 70)*



*கோண்டாவில் தென்கிழக்கு கிராம மட்ட மூத்தோர் சங்கத்தின் ஒன்றுகூடல் நிகழ்வு கோண்டாவில் கிழக்கு அற்புத நர்த்தன சனசமூக நிலையத்தில் கடந்த 26ஆம் திகதி நடைபெற்றது. மருத்துவக் கலாநிதி ஜெயக்குமரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். (ம)*

# அலைபேசியைப் பறித்தவர்களை அடையாளம் காட்டினான் சிறுவன்

சாவகச்சேரி, டிசெ. 3

தான் வைத்து விளையாடிக் கொண்டிருந்த அலைபேசியைப் பறித்துச் சென்ற இருவரையும் சிறுவன் அடையாளம் காட்டினான்.

தென்மராட்சி தெற்கு தனன்களப்புப் பகுதியில் சாலையோரத்தில் சிறுவன் அலைபேசி வைத்திருந்தபோது அந்த வழியே உந்துருளியில் வந்த இருவர் அதனைப் பறித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகச் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

கடந்த மாதம் உந்துருளியில் சென்ற வங்கி அலுவலரின் சங்கிலியை அபகரித்துச் சென்ற சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட இருவரில் ஒருவர் அலைபேசிவழக்குடன்தொடர்புடையவராகக் காணப்பட்டதால் அவரை அடையாளஅணிவகுப்பில்முற்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்த வழக்கு கடந்த மாதம் 28ஆம் திகதி புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மூடிய அறையில் அடையாள அணிவகுப்பு இடம்பெற்றது. அலைபேசியைப் பறிகொடுத்த சிறுவன் சாட்சியாக அழைக்கப்பட்டிருந்தான். அணிவகுப்பில் இருவரையும் சிறுவன் அடையாளம் காட்டியுள்ளான். (ம-9)



கொடுக்குளாய் மகாத்மா படிப்பகத்தால் யாழ்ப்பாணம் ஆழியவளை சீ.சீ.த.க, பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வு ஆழியவளை பாடசாலை மண்டபத்தில் கடந்த 30ஆம் திகதி இடம்பெற்றது. (ம– 70)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 12ஆவது குருதிக் கொடை முகாம் கலைமகள் படிப்பகத்தில் கடந்த முதலாம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றது. (ம)


# பார்த்தீனியங்களை அழிக்க முன்வருக

## யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 3

**நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பார்த்தீனியக் களைகளை அழிக்கும் நடவடிக்கைகள் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டன. மாவட்ட விவசாயத் திணைக்களமும் பிரதேச செயலகங்களும் இணைந்துஇந்தநடவடிக்கைகளைமுன்னெடுத்துள்ளன.**

தற்போது பெய்துவரும் மழையை அடுத்து இந்தப் பார்த்தீனியங்கள்குடாநாட்டில்பல்வேறுஇடங்களிலும் பரவலாகமுளைத்துப்பரவி வருகின்றன. பேராபத்தான இந்தப் பார்த்தீனியங்களைப்பரவவிடாமல்உடனடியாக பிடுங்கி அழிக்கும் நடவடிக்கைளை மக்கள் தன்னார்வத்துடன் மேற்கொள்ளவேண்டும். வீட்டுச் சுற்றாடல்கள், பொது இடங்கள், விவசாய நிலங்கள் போன்றவற்றில் வளர்ந்திருக்கும் பார்த்தீனியங்களை சம்பந்தப்பட்டோர் விரைவாகப்பிடுங்கிஅழிக்க



வேண்டும். பார்த்தீனியக் களைகளை தமது சுற்றாடலில் வைத்திருப்போருக்கு எதிராகசட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்என்று யாழ்ப்பாணம் மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்தது. (ம-17)

## மதிப்பளிப்பு

அளவெட்டி, டிசெ. 3

மல்லாகம் சன்மார்க்க முன்பள்ளி மாணவர்கள், ஆசிரியர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு முன்பள்ளி மண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

சன்மார்க்க சனசமூக நிலையத் தலைவர் தி. பொ.தனராஜின்தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகவலிகாமம்வடக்குப் பிரதேச சபையின் சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செ.சிவயோகன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக வலிகாமம் வடக்குப்பிரதேசசபையின் உலஅலுவலகப்பொறுப்பதிகாரி தியாகச்சந்திரன் கலந்துகொள்ளவுள்ளார். (ம-36)

## சஞ்சிகை வெளியீடு

கொடிகாமம், டிசெ. 3

கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலையின் அரும்பு இதழ்2 சஞ்சிகை வெளியீடும் பிரிவுபசார நிகழ்வும் பாடசாலையின்முதன்மை மண்டபத்தில் இன்று பிற்பகல்2மணிக்குபாடசாலை அதிபர் க. இளங்கோவனின்தலைமையில்நடைபெறவுள்ளன.

இந்தநிகழ்வில்முதன்மை விருந்தினராக தென்மராட்சிவலயக்கல்விஅலுவலக ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக தென் மராட்சிவலயக்கல்விஅலுவலக நூலக இணைப்பாளர் திருமதி சி.உருத்திரமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார். மதிப்புறுவிருந்தினராக பழைய மாணவனும் நூலுக்கான அனுசரணையாளருமானஆ.கருணேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-159)

## 25 வீத வாழை மரங்கள் கஜாவால்அழிவடைந்தன

### யாழ். விவசாயத் திணைக்களம் தகவல்

யாழ்ப்பாணம், டிசெ. 3

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அண்மையில் வீசிய கஜா புயலால்சுமார்25வீதமானவாழைகள்அழிவடைந்தன. இழப்புத் தொடர்பான மேலதிகத் தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன என்று யாழ்ப்பாண மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்தது.

வலிகாமம் கிழக்குப் பகுதியில் அதிகமான வாழைகள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் உடனடியாக வாழைச் செய்கையில் மீண்டும் ஈடுபட வேண்டும். அதற்குரியநடவடிக்கைகள்மேற்கொள்ளப்படும்என்றும்விவசாயத் திணைக்களம் மேலும் தெரிவித்தது. (ம-17)

## மீசாலை கிழக்கு நாவலர் முன்பள்ளியின் ஆண்டு நிறைவு விழாவும் கலைவிழாவும்

கொடிகாமம், டிசெ. 3

மீசாலைகிழக்குநாவலர்முன்பள்ளியின்ஆண்டுநிறைவுவிழாவும்கலைவிழாவும் கடந்த முதலாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நாவலர் முன்பள்ளி அபிவிருத்திக் குழுவின் செயலாளர் தி. அபராஜிதன் தலைமையில் நாவலர் முன்பள்ளி வளாகத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபையின் முன்னாள்உறுப்பினர்ச.சுகிர்தன், வெள்ளாம் போக்கட்டி கிராம அலுவலர் செ.மதியழகன், கிராம அபிவிருத்தி சங்க தலைவர் செ.மகேஸ்வரன், நாவலர் முன்பள்ளியின் நிறுவுனர் செல்விஇராசலட்சுமி,தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக்கல்வி முன்பள்ளிஉதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி ச.அரியநாயகம் உள்ளிட்ட பலர்கலந்துகொண்டனர். (ம-159)

## சிறப்புத் தேவையுடையோர் தினவிழா

வவுனியா, டிசெ. 3

வவுனியாமாவட்டசமூகசேவை அலுவலகத்துடன் வவுனியா மாவட்டச் செயலகமும் மற்றும் பல அமைப்புக்களும் இணைந்து நடத்தும் பன்னாட்டு சிறப்புத் தேவையுடையோர் தின விழா வவுனியா கலாசார மண்டபத்தில் வவுனியா மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீனிவாசன் தலைமையில் இன்று இடம்பெறவுள்ளது.

இந்த விழாவுக்கு முதன்மை விருந்தினராக வவுனியா மாவட்டச் செயலாளர் இ.முஹமட்ஹனீபா கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக வவுனியா மாவட்டச் செயலக மேலதிக மாவட்டச் செயலர்தி.திரேஸ்குமார்மற்றும்வவுனியாமாவட்டச் செயலக தலைமைக் கணக்காளர் அ.பாலகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மதிப்புறு விருந்தினர்களாக நெடுங்கெணி பிரதேச செயலர் க.பரந்தாமன், வெங்கலச் செட்டிக்குளம் பிரதேசசெயலர்க.சிவகரன், வவுனியாநகரபிரதேச செயலாளர் கா.உதயராசா, வவுனியா தெற்கு பிரதேசசெயலர்எம்.எஸ்.ஜானக, வவுனியாமாவட்டச் செயலக உதவி மாவட்ட செயலர் நா.கமலதாசன்,. வவுனியாமாவட்டச்செயலககணக்காளர்எஸ்.ரஞ்சித்குமார், வவுனியா மாவட்ட இடர்முகாமைத்துவ நிலையஉதவிப்பணிப்பாளர்என்.சூரியராஜா, வவுனியா நகரசபைச் செயலாளர் இ.தயாபரன் ஆகியோர்கலந்துகொள்ளவுள்ளனர். (ம-402)



## நூலகங்களுக்கு நூல்கள்

சாவகச்சேரி, டிசெ. 3

உலகத்தமிழ்மாணவர்ஒன்றியத்தின்பங்களிப்புடன்நிலைபேறானஅபிவிருத்திஇலக்குகளுக்கானசாவகச்சேரிபிரதேச இளைஞர்சபையினர்பிரதேசத்தில்உள்ள3நூலகங்களுக்கு மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கென வழிகாட்டி நூல்களை கடந்த 30ஆம் திகதி வழங்கினார்கள்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, சாவகச்சேரி நகரசபை ஆகியவற்றின் பொது நூலகங்களுக்கேஅவ்வாறுநூல்கள்வழங்கப்பட்டன. (ம-9,159)

## உ.கிழங்கு செய்கையில் அதிகமானோர் ஆர்வம்

யாழ்ப்பாணம், டிசெ.3

யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்தமுறை போகத்தின் போதுகூடுதலானசெய்கையாளர்கள்உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபடுவதற்கு ஆர்வம் காட்டியுள்ளனர். குறைந்தது130ஹெக்ரேயர் நிலப்பரப்பில் உருளைக் கிழங்குச் செய்கையில் ஈடுபட விவசாயிகள் தயாராகி வருகின்றனர் என்று யாழ்ப்பாண மாவட்டஉருளைக்கிழங்கு உற்பத்தியாளர் விற்பனையாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர்இ.தெய்வேந்திரம்தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: கடந்த போகத்தைக் காட்டிலும் இந்தப் போகத்தின் போதுகூடுதலானசெய்கையாளர்கள் இந்தச் செய்கைக்குத் தயாராகியுள்ளனர். இந்தச் செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கு ஐம்பது வீத மானியத்தில் அதற்கான விதை உருளைக் கிழங்குகளும் வழங்கி வைக்கப்படவுள்ளன. விதை உருளைக் கிழங்குகளை விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் தற்போதைய காலநிலையில் உடனடியாககிழங்குகளை நடுகை செய்யமுடியாத நிலைஏற்பட்டுள்ளது - என்றார். (ம-17)



கல்வி அமைச்சால் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்டசமஸ் தலங்கா குறவன் குறத்தி இசை நடனப் போட்டியில் யாழ்ப்பாணம்–மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன்கி.கபிநாத்முதலாம் இடத்தைப் பிடித்தார். (ம– 70)

## பன்னவேலை கண்காட்சியும் விற்பனையும்

கொடிகாமம், டிசெ .3
கைதடி தென்மேற்கு சரஸ்வதி மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் நடத்தும் தையல் பயிற்சியும் பன்னவேலை கண்காட்சியும் விற்பனையும் நேற்று 10 மணிக்கு நடைபெற்றது.
சரஸ்வதி மாதர் கிராம அபிவிருத்திச் சங்க தலைவி திருமதி சுதர்சன் வினோதினி தலைமையில் கைதடி மேற்கு சரஸ்வதி வைரவிழா நினைவு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் கந்தையா வாமதேவன், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ப.சதீஸ்வரன், கைதடி கலைவாணி வித்தியாலயத்தின் அதிபர் சி.சிவகுமார், ஜே/293 கிராம அலுவலர், தேசிய அருங்கலைகள் பேரவை அபிவிருத்தி உதவியாளர் அ.தினேஸ் மற்றும் பெற்றோர்கள் நலன் விரும்பிகள் கிராம மட்ட அமைப்புக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (159)

# சட்டவிரோத பயிர்ச்செய்கையால் கால்நடைகளைப் பராமரிப்பதில் சிரமம்

### நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் தி.பரஞ்சோதி தெரிவிப்பு

**மன்னார்,டிசெ.3 மன்னார் மாவட்டத்திற்குரிய கால்நடைகளையும், அவற்றின் பராமரிப்பாளர்களையும் செட்டிகுளம் பிரதேச எல்லையை விட்டு வெளியேறுமாறு செட்டிகுளம் பிரதேச சபை அறிவித்தல் விடுத்ததை தொடர்ந்து, கால்நடைகளைப் பராமரிப்பதற்கு உரிய இடங்கள் இன்றி சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள்.**



இதுதொடர்பாக நானாட்டன் பிரதேச சபை தவிசாளர் தி. பரஞ்சோதியிடம் கேட்ட போது,
பெரும்போக நெற்செய்கை ஆரம்பிக்க முன் மாவட்டச் செயலர் தலைமையில் நெற்செய்கை காலங்களில் கால்நடைகளை பராமரிப்பது தொடர்பான கூட்டம் நடைபெற்றது.
அந்தக் கூட்டத்தில் மன்னார் மாவட்டத்தில் உள்ள தேத்தாவாடிக் கட்டுக்கரைச் செட்டிகுளம் பிரதேசத்தில் உள்ள ஆலங்குளம் போன்ற இடங்கள் தெரிவு செய்யப்பட்டன.
இதில் கட்டுக்கரைப் பகுதிக்குள் சட்டவிரோதமாகப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதால், அந்த இடங்களில் கால்நடைகளை மேய்ச்சலுக்காகவும் பாராமரிப்பிற்காகவும் விடமுடியாது.
இதனால் செட்டிகுளம் பிரதேசம் ஆலங்குளம் பகுதிக்கு கால்நடைகளை கொண்டு செல்லும் நிலை ஏற்பட்டது.
ஆனால் கட்டுக்கரை குளத்தின் ஒரு பகுதி 1970 ஆம் ஆண்டுகளின் பின்னர் கால்நடை பராமரிப்பிற்காக ஒதுக்கப்பட்ட ஆதாரங்களும் உண்டு கட்டுக்கரைக்குள் சட்டவிரோத பயிர்ச்செய்கை நிறுத்தப்படுமாயின்வெளியிடங்களுக்குக் கால்நடைகளை கொண்டு செல்லும் தேவை இருக்காது என்று தெரிவித்த தவிசாளர். செட்டிகுளம் பிரதேச சபை திடீரென இந்த முடிவை எடுத்தமையால் எம்மால் ஒன்றும் செய்யமுடியாமல் உள்ளது.
இதுதொடர்பாக நானாட்டான் முசலி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்க சமாசத்தினருடன் மன்னார் மாவட்ட செயலர் சந்தித்து இந்தப் பிரச்சினைக்கான தீர்வை பெற உள்ளதாகத் தெரிவித்தார். (213)



## அலுமாரி வழங்கும் நிகழ்வு

கிளிநொச்சி,டிசெ.3
கிளிநொச்சி மகா தேவ சிறுவர் இல்லக் குழந்தைகளுக்காக ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான அலுமாரிகள் கொள்வனவு செய்து அன்பளிப்பு செய்யப்பட்டன .
குழந்தைகளின் நலன் கருதி அவர்களின் உபகரணங்களைத் தனித்தனியாக பேணும் வகையில் திருமதி கிருஸ்ணமூர்த்தி குகவதனியின் ஏற்பாட்டில் ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த நியூ ஜேர்சி கலை கலாசார மன்ற நன்கொடையாளர்களால் இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது. 30 ஆம் திகதி 4 மணியளவில் இந்த நிகழ்வு இல்லத்தில் நடைபெற்றது. (222)



## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.
வவுனியா தேசிய இளைஞர் சேவை மன்றமும் மொனராகலை விபில பிரதேச சம்மேளனமும், மறவன்குளம் சமூதாய அடிப்படை சங்கமும் இணைந்து மறவன்குளம் பாரதிதாசன் மகா வித்தியாலய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு, 30 ஆம் திகதி வவுனியா பிரதேச இளைஞர் சேவை அதிகாரி தே.அமுதராஜ், ஈச்சங்குளம் சமுர்த்தி உத்தியோகத்தர் ரி.ரமேஸ் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது. (110)



## திறன் வகுப்பறை திறப்பு நிகழ்வு

கிளிநொச்சி, டிசெ.3
இராமநாதபுரம் அழகாபுரி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் திறன் வகுப்பறை திறப்பு நிகழ்வு கடந்த 30ஆம் திகதி இடம்பெற்றது. இராமநாதபுரம் பிள்ளையார் வீதியைச் சேர்ந்த காந்தியின் பிள்ளைகள் மற்றும் அவர்களது நண்பர்கள் இணைந்து வழங்கிய நிதி உதவியில் திறன் வகுப்பறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
வகுப்பறையைக் காந்தி திறந்து வைத்தார். (21,222)

## மாணவனுக்கு மதிப்பளிப்பு

வடக்கு மாகாணத்தில் மிகக்குறைந்த வயதில் யூடோ தரங்கணிப்பு போட்டியில் பங்குபற்றி வெற்றிபெற்ற மாணவன் ரட்ணகாந்தன் கெவின் வயது - 10 வவுனியாவில் மதிப்பளிக்கப்பட்டார்.
வவுனியா ஏழாம்அறிவு தற்காப்புக்கலை அமைப்பின் ஏற்பாட்டில், வடக்கு மாகாண ரீதியில் கடந்த 18 ஆம் திகதி நடைபெற்ற யூடோ தற்காப்புக்கலை தரங்கணிப்பு போட்டியில் கலந்துகொண்டு வெற்றிபெற்று தகுதி சான்றிதழை பெற்றுள்ளார்.
அகில இலங்கை யூடோ சங்கத்தின் பொது செயலர் யு.ஆர். கே.பஸ்நாயக்க மற்றும் யூடோ தொழில்நுட்பத் தலைவர் கெ.எச்.எஸ்.கே. கப்புஆராட்சி ஆகியோர் நடுவர்களாக செயற்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்குத் தகுதிச் சான்றிதழ்களை வழங்கியிருந்தனர்.
வடக்கு மாகாண ரீதியில் யூடோ தற்காப்புக்கலையை பயிற்றுவித்துவரும் பயிற்றுவிப்பாளர் எஸ்.நந்தகுமாரின் தலைமையில் பங்குபற்றிய மாணவர்களில் 40 மாணவர்கள் யூடோ தகுதிச் சான்றிதழ்களை பெற்றிருந்த போதும் கெவின் மிகக்குறைந்த வயதில் சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (110)



## மாணவர்களுக்குப் பாராட்டு நிகழ்வு

முல்லைத்தீவு, டிசெ. 3
முல்லைத்தீவு, அம்பலவன் பொக்கணை கலைவாணி முன்பள்ளியில் கல்வி பயின்று தரம் ஒன்றுக்குச் செல்லும் மாணவர்களுக்கான பாராட்டு நிகழ்வு கடந்த 30 ஆம் திகதி கலைவாணி முன்பள்ளியில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் புவனேஸ்வரன் மற்றும் முன்பள்ளி நிர்வாகிகள், ஆசிரியர், பொற்றோர் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (21)





## கல்விக் கருத்தரங்கு

கிளிநொச்சி, டிசெ. 3
க.பொ.த சாதாரண தரத்தில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்கு கற்சிலைமடு பகுதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
பிரதேச வாழ் மாணவர்களின் கல்வியினை மேம்படுத்தும் வகையில் இலவச கல்விக் கருத்தரங்கினை கடந்தவாரம் சுசிலன் பவுண்டேசன் மேற் கொண்டு மாணவர்களினை வழிப்படுத்தி பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற உதவியுள்ளார்கள்.
நெதர்லாந்து நாட்டில் வசிக்கும் சுசிலன் 2009 ஆம் ஆண்டு முதல் வடக்கு கிழக்கு உள்ளிட்ட பகுதிகளில் மக்களின் வாழ்வாதாரம் மற்றும் மாணவர்களின் கல்வி நிலையை உயர்த்துவதற்கான பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார். (6)

# மனித உரிமை தொடர்பாக மன்னாரில் கருத்தமர்வு

மன்னார், டிசெ.3

**இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டத்தில் உள்ள சமூக ஆர்வலர்களுக்கான மனித உரிமை தொடர்பான ஒரு நாள் கருத்தமர்வு நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஜெய்க்கா மண்டபத்தில் இடம்பெற்றது.**



மன்னார் மாவட்டத்தில் மனித உரிமைகள் தொடர்பான செயற்பாடுகளை அதிகரிக்கவும், மனித உரிமை சார்ந்த செயற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்கிலும் மாவட்டம் சார்ந்து செயற்படும் சமூக ஆர்வலர்களை உள்ளடக்கிப் பயிற்சி கருத்தமர்வு இடம் பெற்றது. மனித உரிமை ஆணைகுழுவின் பிராந்தியப் பணிப்பாளர் சட்டத்தரணி எம்.ஆர்.பிரியதர்சன், சட்டத்தரணி ஆர்.எல்.வசந்தராஜ் தலைமையில் கருத்தமர்வு இடம்பெற்றது. மனித உரிமை மீறல்களை வெளிக் கொண்டு வருதல், சட்ட ரீதியான தெளிவூட்டல்கள் பற்றிய விவரங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன. (56)

## கொண்டைமடுப் பகுதியில் யானைகளால் தொல்லை

முல்லைத்தீவு, டிசெ.3

கொண்டைமடுப்பகுதியில் யானையின் தொல்லை அதிகரித்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ள னர். முல்லைத்தீவு மாவட்டத்தின் வற்றாப்பளை கமக்கார அமைப்பின் கீழ் உள்ள கொண்டைமடுப்பகுதியில் ஐநூறு ஏக்கர் பெரும்போக நெற்செய்கையை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர்.

கடந்த சில நாள்களாக யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். கடந்த 29ஆம் திகதி இரவு வயல் வெளிக்குள் புகுந்த யானைகள் எட்டு ஏக்கர் வயல்களைச் சேதப்படுத்தியுள்ளன.

கொண்டைமடுப்பகுதியில் யானை வேலி இல்லாத காரணத்தால் யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாகவும், இதனால் நெற்பயிர்கள் பெருமளவில் அழிவடைந்துள்ளன என்றும் வற்றாப்பளை கமக்கார அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (ரி3)



## தேசிய வாசிப்பு மாத நிகழ்வு

துணுக்காய், டிசெ. 3

துணுக்காய்ப் பிரதேச சபையின் மல்லாவி பொது நூலகத்துக்கான தேசிய வாசிப்பு மாத நிகழ்வு பிரதேச சபையின் முதன்மை மண்டபத்தில் இடம்பெற்றது.

சபையின் செயலர் க. தனபாலசிங்கம் தலைமையில் கடந்த 30ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வில், முதன்மை விருந்தினர்களாகச் சபையின் தவிசாளர், முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

போட்டிகளில் வெற்றியீட்டிய 50 ற்கும் மேற்பட்ட துணுக்காய் பிரதேச சபைக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. (222)




## பாலர் பகல் பராமரிப்பு நிலைய ஒளிவிழா

கிளிநொச்சி, டிசெ.3

முறிகண்டி தென்னிந்திய திருச்சபை பாலர் பகல் பராமரிப்பு நிலைய ஒளிவிழா நிகழ்வு கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்றது.

மாலை 3 மணியளவில் முறிகண்டி தென்னிந்திய திருச்சபை ஆலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் புனித பப்ரிஸ் திருச்சபையின் ஊழியர் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டிருந்ததுடன், தென்னிந்திய திருச்சபை ஊழியர்கள், பெற்றோர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ஒளிவிழா நிகழ்வில் சிறார்களின் கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. தொடர்ந்து 2019 ஆம் ஆண்டு பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் இதன் போது மதிப்பளிக்கப்பட்டனர். (6)

## பொலிஸ் அதிகாரிகளுக்கு சட்டம், ஒழுங்கு விரிவுரை



முல்லைத்தீவு, டிசெ.2

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு தொல்பொருள் திணைக்கள சட்டஒழுங்கு தொடர்பான விரிவுரை ஒன்று கடந்த 29ஆம் திகதி ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொல்பொருள் திணைக்களத்தின் சட்ட ஒழுங்கு தொடர்பாகப் பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த தொல் பொருளுடன் தொடர்புபட்ட 85 பொலிஸ் அதிகாரிகளுக்கு, தொல் பொருள் திணைக்களத்தின் மூத்த சட்டத்தரணி றோகண காரியவசம் விரிவுரைகளை நடத்தியுள்ளார்.

தொல்பொருள் திணைக்களத்தின் சட்டங்கள் தொடர்பாகப் பொலிஸாருக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.ஐ. குணரத்ன, மாவட்ட மக்கள் பொலிஸ் பிரிவு அதிகாரி எஸ்.ஐ. அனுர உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர்

முல்லைத்தீவு மாவட்டத்திலே அதிகளவு தொல்பொருள் இடங்கள் தொல்பொருள் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி 3)

## உலருணவுப் பொதிகள் பகிர்ந்தளிப்பு

கிளிநொச்சி, டிசெ. 3

கிளிநொச்சி பூநகரிப் பிரதேச மக்களுக்கு லைக்கா ஞானம் பவுண்டேசன் நிறுவனத்தினரால் உலருணவுப் பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 575 குடும்பங்களுக்கு உதவிகள் நேற்றுப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள், போர்வைகள் உள்ளிட்ட பொருள்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன.

பூநகரிப் பிரதேச செயலர் எஸ்.கிருஸ்ணேந்திரன், கிளிநொச்சி மாவட்ட இடர்முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் இன்பராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டு உதவிகளை வழங்கினர்.

நாடளாவிய ரீதியில் கஜா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 4 கோடி ரூபா பெறுமதியிலான உலர் உணவுப் பொருள்கள், போர்வைகள், நுளம்பு வலைகள், தண்ணீர்ப் போத்தல்கள் உள்ளிட்ட பொருள்கள் லைக்காவின் ஞானம் அறக்கட்டளையால் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. (222)

## கரைச்சிப் பிரதேச பேரவையின் கலாசார நிகழ்வு

கிளிநொச்சி.டிசெ.3

கரைச்சிப் பிரதேச பேரவையினால் நடத்தப்படும் கலாசார நிகழ்வு நாளை 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் த. முகுந்தன் தலைமையில் கரைச்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஆர்வரம் உள்ளவர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

## பண்ணையாளர்களுடன் கலந்துரையாடல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பண்ணையாளர்களுக்கு வர்த்தக ரீதியாக புற்செய்கையை ஊக்குவித்து, பால் உற்பத்தியை அதிகரிப்பது, புல் விற்பனை செய்வது தொடர்பான செயலமர்வு நடைபெற்றது.

உள்ளூரில் பால் உற்பத்தியை அதிகரிக்க கால்நடைகளுக்கான புற்களை உற்பத்தி செய்தல் தொடர்பிலும் புதிய தொழிநுட்பங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கருத்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. றிஸ் நிறுவனத்தின் பிராந்திய திட்ட இணைப்பாளர் தி.பென்சிகர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச கால்நடை மருத்துவ அதிகாரி மருத்துவர் ஜெகஜீவன் றிஸ் நிறுவனத்தின் திட்ட பணிப்பாளர் , உதவித்திட்ட பணிப்பாளர், லங்கா போறேச் பிறைவேற் லிமிற்றட் பணிப்பாளர், பிறீமா நிறுவன முகாமையாளர், வீல் மாஸ்ரர் நிறுவன முகாமைத்துவ பணிப்பாளர், றிஸ் நிறுவனத்தின் உற்பத்திப் பணிப்பாளர் மருத்துவர் சிவயோகநாதன், பண்ணை யாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (21,222)





## சமூக அமைப்புகளுக்கான வலுவூட்டல் பயிற்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 3

சமூக மட்ட அமைப்புகளுக்கான வலுவூட்டல் பயிற்சி யாழ்ப்பாணப் பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் பொ.தயானந்தன் அதைத் தொடக்கி வைத்தார்.

நிகழ்வில் 'உடலுள ஆரோக்கியத்துக்கு யோகா' என்ற தொனிப்பொருளில் யோகா கலாபூசணம் ந. சிவனேஸ்வரராஜாவும், 'நெற்றிக்கண் யோகம்' என்ற தொனிப்பொருளில் கலைமாமணி அச்சுதராஜாவும், 'ஆரோக்கிய வாழ்வும் உணவுப் பழக்க வழக்கமும்' என்னும் தொனிப்பொருளில் மருத்துவர் லோஜி ஜீவானந்தமும் கருத்துரை வழங்கினர். (4.23)

## விண்ணப்பித்தவர்களுக்கு தேசிக்கன்று வழங்கல்

தென்மராட்சி, டிசெ. 3

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள குடியிருப்பாளர்களுக்கு தேசிக்கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

விவசாயத் திணைக்களத்தின் 'வனரோபா' திட்டத்தின் கீழ் இவை வழங்கப்படுகின்றன.

திணைக்களம் விண்ணப்பம் கோரியபோது தேசிக்கன்று தேவை என்று கிராம அலுவலரிடம் விண்ணப்பித்தவர்களுக்கே பிரதேச செயலகத்தில் வைத்து அவை வழங்கப்படுகின்றன.

எழுதுமட்டுவாழ் வடக்கு, மிருசுவில் வடக்கு, அல்லாரை, மீசாலை வடக்கு, மீசாலை மேற்கு, கெற்பேலி, நாவற்காடு, மறவன்புலவு, கரம்பகம், பாலாவி ஆகிய பகுதிகளில் தேசிக்கன்றுகள் நடுவதற்கு ஏற்ற இடவசதியுள்ளவர்களுக்கு தலா எட்டுக் கன்றுகள் வழங்குவதற்கு 500 தேசிக்கன்றுகள் பிரதேச செயலகத்துக்குக் கொண்டு வரப்பட்டிருந்தன. அவை பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. (4,9)



## மரக் கன்றுகள், தானிய உள்ளீடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன

கொடிகாமம், டிசெ. 3

'நாம் பயிரிட்டு நாம் உண்போம்' எனும் தொனிப் பொருளில் பழமரக் கன்றுகளும் விதை தானிய உள்ளீடுகளும் வழங்கும் நிகழ்வு கைதடியில் இடம்பெற்றது.

விவசாய அமைச்சின் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் வடக்கின் துரித விவசாய மீள் எழுச்சித் திட்டத்தில் இது நடைபெற்றது.

இதே நிகழ்வு புலோலி கமநல சேவைகள் நிலையத்திலும் உதவி ஆணையாளர் நிசாந்தன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

விவசாய அமைச்சு நடைமுறைப்படுத்துகின்ற விவசாயக் கிணறு, விவசாய வெங்காயக் கொட்டில், பழமரக் கிராமங்கள் உருவாக்கல் போன்ற திட்டங்களின் ஆரம்ப நிகழ்வுகள் அங்கு இடம்பெற்றன.

விவசாய பிரதி அமைச்சர் இ.அங்கஜன் வெங்காயக் கொட்டகை அமைத்தல் மற்றும் விவசாய கிணறு சீரமைப்புக்கான காசோலைகளை வழங்கினார்.

அவரின் செயலாளர், சாவகச்சேரி கமநல சேவைகள் நிலைய உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், தென்மராட்சிப் பிரதேச செயலக அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், விவசாயப் பயனாளிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (4,159)

# முல்லைச் செயலகம் முன்பாக 10ஆம் திகதி பெரும் போராட்டம்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சகலரினதும் ஒத்துழைப்பைக் கோருகின்றனர்

யாழ்ப்பாணம், டிசெ. 3

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் எதிர்வரும் பத்தாம் திகதி போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று அறிவித்துள்ளனர். காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்கு நீதிவேண்டி – அவர்களைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரியே போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் என்று அவர்கள் தெரிவித்தனர்.



தமது பிள்ளைகளைத்தேடி கடந்த வருடம் மார்ச் மாதம் எட்டாம் திகதி ஆரம்பித்த தொடர் கவனவீர்ப்பு நேற்று 364 ஆவது நாளைக் கடந்து முல்லைத்தீவில் தொடர்கிறது. இந்தநிலையில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் முன்பாகப் போராட்டம் நடத்தவுள்ளனர் என்றும் அனைத்துத் தரப்பையும் தமது போராட்டத்துக்கு ஆதரவு வழங்குமாறும் கோரியுள்ளனர்.

அவர்களது போராட்டம் வெயில், மழைக்கு மத்தியிலும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

போராட்ட காலத்தில் எத்தனையோ தடவைகள் அவர்கள் கவனவீர்ப்புப் போராட்டங்களை நடத்தியுள்ளனர். அரசியல் கட்சிகளும் அதற்கு ஆதரவு தெரிவித்துள்ளன. அதன் உறுப்பினர்கள் சில தடவைகள் அவர்களுடன் சேர்ந்து போராட்டத்தில் கலந்துகொண்டிருக்கின்றனர். எனினும் உறவுகள் ஓயாது போராடிக்கொண்டிருக்கின்றனர். இயற்கை ஒரு புறம் வதைத்தாலும் மறுபுறம் புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல், இடையூறுளையும் தாண்டி அவர்கள் போராட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். இன்னும் தீர்வு கிடைக்கவில்லை. தமது பிள்ளைகள் பற்றிய தகவல்களும் இல்லை என்ற நிலையிலும் அவர்கள், தமது பிள்ளைகள் பற்றிய விவரங்களை வெளியிடுங்கள், அவர்களை ஒப்படையுங்கள் என்று கோரிப் போராடி வருகின்றனர்.

இதனை மேலும் வலியுறுத்தும் நோக்கில் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ள போராட்டத்துக்கு அனைவரும் கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறு அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (4. 214)

# வீட்டுக்குள் புகுந்த மூன்று பேர் கொலை மிரட்டல் விடுத்தனர்

## மூதாட்டி பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 3

வீடு புகுந்த 3 பேர், அங்கிருந்த முதியவருக்குக் கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளனர் என்று காங்கேசன் துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தையிட்டி கலைவாணி வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை பகல் சம்பவம் இடம் பெற்றுள்ளது. அங்கு மீள்குடியமர்ந்துள்ள ஐயம்பிள்ளை தங்கராணி (வயது 68) என்பவருக்கே கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

3 பேரும் தன்னுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர், தாக்க முற்பட்டனர். தடுக்க முற்பட்ட அயல் வீட்டுப் பெண்ணை கழுத்தில் பிடித்து வெளியேற்றியுள்ளனர். பதைபதைத்துப் போன என்னைக் கொலை செய்யப் போவதாகத் தெரிவித்து விட்டு அங்கிருந்து சென்றுள்ளனர் என்று பாதிக்கப்பட்டவர் முறையிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அந்தப் பகுதி (ஜெ 250) கிராம அலுவலகருக்குத் தகவல் வழங்கியுள்ளார். கிராம அலுவலர் பொலிஸில் முறையிடுமாறுகூற காங்கேசன் துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். விசாரணை மேற்கொள்ளப்படுகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"நான் பிரான்ஸ் நாட்டில் வாழ்வதற்கும் குடியுரிமை பெற்றுள்ளேன். அங்குள்ள எனது மகன் இறந்து போனார். அவருடைய சாவுக்குக் காரணமான நபரைப் பற்றி இங்குள்ள உறவினர்களுக்குத் தெரிவித்தேன். அது தொடர்பில் ஏதாவது மேலதிக நடவடிக்கைகளை எடுத்து விடுவேன் என்று எண்ணி அதைப் பொறுத்துக் கொள்ள முடியாமலேயே இங்குள்ளவர்கள் என்னை அச்சுறுத்தியுள்ளனர். என்னைக் கொன்றுவிடுவார்கள் போலுள்ளது. எனவே பொலிஸார் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அந்த மூதாட்டி உதயனுக்குத் தெரிவித்தார். (4.21)

## டெங்கு பரவும் வகையில் சூழலைப் பேணியவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 3

நுளம்பு பெருகும் வகையில் சுற்றாடலை வைத்திருந்தவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது நீதிமன்று.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் தெற்கைச் சேர்ந்தவருக்கே 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

டெங்கு பரவும் வகையில் சுற்றாடலை வைத்திருந்த தோப்பு, ஏழாலையைச் சேர்ந்தவருக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. மல்லாகம் நீதிமன்றில் அவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் குறித்த நபர் நீதிமன்றில் முற்படவில்லை. அவருக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. (4)

## தென்மராட்சியில் நேற்று பேருந்துகள் மீது கல்வீச்சு

### பொலிஸ் அலுவலர் காயம்

சாவகச்சேரி, டிசெ. 3

சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பகுதிகளில் பேருந்துகள் மீது கல்வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சாவகச்சேரியில் நடத்தப்பட்ட தாக்குதலில் பேருந்தில் பயணித்த பொலிஸ் அலுவலர் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. இரண்டு இடங்களிலும் நேற்றுக் காலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த அலுவலர் சாவகச்சேரி நீதிமன்றில் இரவுக் கடமையாற்றிவிட்டு அனுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற பேருந்தில் பயணித்தபோது நுணாவிலில் கல் வீச்சு நடத்தப்பட்டது. பேருந்தின் கண்ணாடியை உடைத்துக்கொண்டு நுழைந்த கல் பொலிஸ் உத்தியோகத்தரைத் தாக்கியது என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, கதிர்காமத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பேருந்து மீது கொடிகாமத்தில் கல் வீச்சு நடத்தப்பட்டது. பேருந்தின் கண்ணாடிகள் உடைந்துள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்த பொலிஸ் அலுவலர் (வயது - 34) சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (4,9)



## தொடருந்துடன் கன்ரர் மோதிச் சேதமடைந்தது

கொடிகாமம், டிசெ. 3

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச்சென்ற பேருந்துடன் கன்ரர் ரக வாகனம் மோதிச் சேதமடைந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச்சம்பவம்ஏ9வீதியில்மிருசுவில்மருத்துவமனைக்கு முன்பாகஇடம்பெற்றது. வாகனச்சாரதிசிறுகாயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (4,159)

## 80 கைக்குண்டுகள் அல்லாரையில் மீட்பு

சாவகச்சேரி, டிசெ. 3

புதைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட பெருமளவு கைக்குண்டுகள் நேற்றுமுன்தினம் சிறப்பு அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி அல்லாரைப் பகுதி கடலேரி கரையோரத்தில் இவை மீட்கப்பட்டன.

அல்லாரை தம்பு தோட்ட முகாம் பகுதி அதியுயர் பாதுகாப்பு வலயமாக இருந்தவேளையில் முகாமுக்கு முன்பாகக் காணப்படும் காணி அவர்களின் பயிற்சிக் களமாகக் காணப்பட்டது. துப்பாக்கி சுடும் பயிற்சி கடலேரியை நோக்கி இடம்பெற்றது. 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பயிற்சிகள் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டு அங்குள்ள காணிகளில் குடியிருப்பாளர்கள்குடியமரத்தொடங்கினர். இந்தநிலையில் கடலேரிக்கரையோரத்துக்குச்சென்றபொதுமகன்தண்ணீர் தேங்கியுள்ள இடத்தில் வெடிக்காதநிலையில்கைக்குண்டுகள் காணப்பட்டதனை அவதானித்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

பொலிஸார் அந்த இடத்தில் பாதுகாப்பை ஏற்படுத்தி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர். நீதிமன்ற உத்தரவுப்படி சாவகச்சேரிப் பொலிஸார் சிறப்பு அதிரடிப் படையினருடன் இணைந்து 80க்கும் மேற்பட்ட கைக்குண்டுகளை மீட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. பாதுகாப்பான இடத்தில் வைத்து கைக்குண்டுகள் செயலிழக்கச் செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (4,9)

## போத்தலால் குத்தப்பட்டு மூவர் மருத்துவமனையில்

### சாவகச்சேரியில் சம்பவம்

கொடிகாமம், டிசெ. 3

சாவகச்சேரி நகரில் இடம்பெற்ற மோதலில், மூவர் போத்தலால்குத்தப்பட்டுப்படுகாயமடைந்துள்ளனர்என்றுதெரிவிக்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலதிக சிகிச்சைக்காக இருவர் யாழ்ப்பாணப்போதனாமருத்துவமனைக்குமாற்றப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி நகரில் வர்த்தக நிலையம் ஒன்றில் ஏற்பட்ட மோதலின்போதே காயம் ஏற்பட்டுள்ளது.

சங்கத்தானையைச் சேர்ந்த மு.நிரஞ்சன்(வயது - 41), கச்சாய் வீதி சாவகச்சேரியைச் சேர்ந்த தீசன் (வயது 22) ஆகிய இருவரும்யாழ்ப்பாணப்போதனாமருத்துவமனையிலும், கச்சாய்வீதிசாவகச்சேரியைச்சேர்ந்தபிறின்ஸ்சியஸ்(வயது - 23) சாவகச்சேரி ஆதார மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மோதல் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரியிலுள்ள வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவர் உட்பட 3 பேரைக் கைது செய்துள்ளோம் என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்துடன்தொடர்புடையவரின்வியாபாரநிலையம்சீல்வைத்து மூடப்பட்டது. மேலதிக விசாரணை இடம்பெறுகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். (4,159)

## இரணைமடுக் குளத்தில்

# திட்டமிட்டுச்சேதம் ஏற்படுத்துவோரால் மாவட்டத்தில் அனைவருக்குமே பாதிப்பு

### கீழ்த்தரச் செயற்பாடுகளில் ஈடுபடாதீர்களென்று நீர்ப்பாசனப் பொறியியலாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 3

**வடக்கு மாகாணத்தின் மிகப்பெரும் சொத்தான இரணைமடுக் குளத்தில் அறியாமல் விடும் சிறு தவறுகள்கூட பெரும் சேதத்தையே ஏற்படுத்தும். சிலர் திட்டமிட்டுச் சேதங்களைஏற்படுத்துகின்றனர். இந்தச்செயற்பாடுகள்ஒட்டுமொத்தமாவட்டத்தினரையும் பாதிக்கும் என்பதால் கீழ்த்தரமான செற்பாடுகளில் ஈடுபடாதீர்கள்.**

இவ்வாறு யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் சுதாகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில்பொறியியலாளர்மேலும் தெரிவித்ததாவது;

இரணைமடுக் குளத்தில் தூண்டில் மூலம் மீன்பிடிப்போர் குளக்கட்டுக்குக் கால்நடைகள் வராதவாறு அமைக்கப்பட்ட பாதுகாப்பு வேலியின் முட்கம்பிகளை வெட்டிச் சேதப்படுத்தி கால்நடைகள்குளக்கட்டில்ஏறுவதற்கும் அவற்றைச்சேதமாக்குவதற்கும்வழியமைத்துக் கொடுக்கும் வகையில் செயற்படுகின்றனர்.

தூண்டிலிடுவதற்கான மண்புழுக்களைப்பிடிக்ககுளத்தின்அலைப்பாதுகாப்புக்கு அடுக்கப்பட்ட கருங்கற்களைப் புரட்டிவிடுகின்றனர். இவை குளத்தின் அணைக்கட்டுக்குப்பாதிப்புஏற்படுத்துவதாகவே அமையும்.

இவ்வாறுசெயற்பட்டசிலர்கடந்தவாரம் அடையாளம் காணப்பட்டு பொலிஸில் முறைப்பாடுகள் செய்யப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

குளத்தில்மீன்பிடிக்கவிரும்பின்இவ்வாறான பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான காரியங்களைச் செய்யாது பதிவில் உள்ளஇரண்டுமீன்பிடிச்சங்கங்களின் அங்கத்துவத்தைப் பெற்று முறைப்படி மீன்பிடியை மேற்கொள்ளலாம்.

அத்துமீறிய செயற்பாடுகளில் தொடர்ந்தும்யாராவதுஈடுபடுவார்களாயின்அது அவதானிக்கப்பட்டால் கடுமையான சட்டநடவடிக்கைக்குஉட்படுத்தும்நிலை உருவாகும்.

இதேவேளை, குளத்தின் வலதுகரை துருசுஇரண்டுகதவுகளைக்கொண்டது. இதன்மூலமே வட்டக்கச்சி, இராமநாதபுரம் போன்ற பகுதிகளிலுள்ள 3 ஆயிரத்து 150 ஏக்கர் வயல் நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படுகின்றது. கதவுகளுக்குப் போடப்பட்டிருந்த பூட்டுக்களை இந்த வருடம் மட்டும் ஐந்து தடவைகள் உடைத்துள்ளனர். கதவுகளைத் திறக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளன. இறுதியாகப் போடப்பட்டிருந்த பூட்டுகளை உடைத்த விசமிகள் கதவுகளைப் பலவந்தமாகத் திறக்க முற்பட்டமையால் ஒரு கதவு இயங்காதநிலைஏற்பட்டுநீர்பாய்ச்சஇயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

எமது குளம், எமது தண்ணீர், எமது வயல் என்பதனைக்கூடப் புரிந்துகொள்ள முடியாதவர்களின் மூர்க்கத்தனமான செயலால்அந்தப்பகுதிக்கானசிறுபோக நெற்செய்கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஒரு கதவே தற்போது இயங்கு நிலையில் இருக்கிறது. இதன்மூலமே அந்தவிவசாயிகளின்வாழ்வாதாரத்தை நாம் பேணவேண்டிய கட்டாயம் உள்ளது.

துருசுகள் பாதிப்படைந்தால் குளத்துத் தண்ணீர் 15 அடிக்கும் கீழ் குறைவடைந்ததன் பின்னர்தான் கதவுகளைத்திருத்தியமைக்கமுடியும். இந்தச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் சிலராயினும் பாதிக்கப்படப்போவது முழு மாவட்டமாக இருக்கும். இதேபோன்று இரணைமடுக் குளத்துக்கு உட்பட்ட நீண்ட வாய்க்கால்களில் உள்ள கதவுகள் திருப்பங்களில் உள்ள திறக்கும் இரும்புகளைஉடைத்துப்பழையஇரும்புக்கு எடுத்துச் செல்கின்றனர். சில நூறு ரூபா கிடைப்பதுகூட கடினம். ஆனால் அதனை மீளவும் சீர் செய்ய எமக்கு 25 ஆயிரம் ரூபா தேவை ஏற்படுகின்றது.

எனவே இவ்வாறான விசமத்தனமான செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்ப்பது மட்டுமன்றி இதனை மேற்கொள்பவர்களை அவதானித்தாலும் அதனைதடுத்துத் தண்ணீர் வளத்தைப் பேணி எமது மாவட்டங்களின்அபிவிருத்திப்பணிக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றார். (4,105)

## அரசியல் குழப்பத்தால் மாணவர்கள்சிரமத்தில்

### தமிழர் ஆசிரியர்சங்கம் மைத்திரிக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், டிசெ. 3

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலையால் நாட்டின் எதிர்காலச் சந்ததியினரான பாடசாலைக்குழந்தைகளின்வாழ்க்கைஆபத்தான கட்டத்தில் உள்ளது.

2019ஆம்ஆண்டுபாடசாலைக்கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாவதற்குமுன்னோடியானசெயற்பாடுகள்சிலவற்றில்இப்போதேகுழப்பம்ஏற்பட்டுவிட்டது. மாணவர்களுக்குச் சீருடை வழங்குதல், இலவச பாடப்புத்தகம்வழங்குதல், இலவசஉணவுவிநியோகம், பாடசாலைகளுக்கான நிதி ஒதுக்கீடுசெய்தல், புதிய ஆளணியினரின் நியமனம் போன்ற பல விடயங்கள் முடங்கும் அபாய நிலை உள்ளது.

அணிந்த உடைக்கு மாற்றுடை இல்லாமல் ஆயிரக்கணக்கான மாணவர்கள் இருக்கின்றனர். ஒரு வேளைக்கே உணவு இல்லாமல் வாழ்கின்றனர். அப்பியாசப்புத்தகம்வாங்குவதற்குவழியில்லாமல் தவிக்கின்றனர். ஆகையால், தற்போதைய குழப்பமான சூழ்நிலைக்கு விரைவில் தீர்வு காணாவிட்டால் எமது எதிர்காலச் சந்ததியினரின் வாழ்க்கை கேள்விக் குறியாகிவிடும். எனவே நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் அசாதாரண சூழலை விரைந்து வழமைக்குக்கொண்டுவருமாறுதயவுடன்கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு குறிப்பட்ட கடிதத்தை அரசதலைவருக்கு அனுப்பியுள்ளதாகச் சங்கம் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (4)

## படை வசமுள்ள காணிகளை விடுவிப்பது பற்றி பரிசீலனை

தென்மராட்சி, டிசெ. 3

தென்மராட்சி கிழக்கில் படையினரின் பாவனையில் உள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதுதொடர்பாகப்பரிசீலனைசெய்து சாதகமான பதிலளிப்பதாக யாழ்ப்பாண மாவட்டக் கட்டளைத் தளபதி தர்சன ஹெட்டியாராச்சி உறுதியளித்துள்ளார்.

தென்மராட்சி கிழக்கு அபிவிருத்திஒன்றியப்பிரதிநிதிச.சாந்தகுமார் மாவட்டத் தளபதியுடன் பலாலியில் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். அதன்போது தளபதி மேற்கண்டவாறு கூறினார் என்று சாந்தகுமார் தெரிவித்தார்.

கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லம் உட்பட படையினரால் பயன்படுத்தப்பட்டுவரும்பொதுமக்களின் காணிகளிலிருந்து படையினரை வெளியேற்ற வேண்டுமெனக் கேட்டபோது இது தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி சாதகமானக் கூறினார். பதில் வழங்குவதாகஎன்றுமேலும்தெரிவிக்கப்பட்டது. (4,9)

## கசிப்பு போதைப் பானத்துடன் புத்தூரில் இரண்டு பேர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 3

நான்கு லீற்றர் கசிப்புப் போதைப் பொருளை உடமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

44 வயதுடைய சந்தேகநபர்கள் இருவரும் ஆவரங்காலைச்சேர்ந்தவர்கள். புத்தூரில் நேற்றுமுன்தினம்மாலைஇருவரும் கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தபோது காங்கேசன் துறை சிறப்புக் குற்றத்தடுப்புப்பிரிவினர் அவர்களைக் கைதுசெய்தனர். அவர்கள்அச்சுவேலிப்பொலிஸாரிடம்பாரப்படுத்தப்பட்டுள்ளனர். (4,26)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சாத்தியமானதையும் சிந்திக்கத்தான் வேண்டும்

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்கு நேரடியாக ஆதரவளிக்கத்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வந்துள்ளதை அடுத்து கொழும்பின் அரசியல் குழப்பம் ஒரு முடிவுக்கு வரும் அறிகுறி தெரிகிறது. நாளைமறுதினம் நாடாளுமன்றம் கூடும்போது ரணில் தனது தரப்புக்குப் பெரும்பான்மை உள்ளதை நாடாளுமன்றப் பாரம்பரியத்தின்படி நிரூபிப்பார்என்றும் அதனை ஏற்றுக்கொண்டு புதிய ஆட்சியிடம் அரச தலைவர் மைத்திரிபால அதிகாரத்தைக் கையளிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன்படி நடந்தால் 2020ஆம் ஆண்டு ஆவணி மாதம் வரையில் சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திற்கு ரணிலின் ஆட்சி தொடரும். அப்படி அவரது ஆட்சியை அவர் தக்கவைப்பதற்கு உதவியமைக்கான பிரதியுபகாரமாகத் தமிழ் மக்களுக்கு ஐக்கிய தேசிய முன்னணி எதைச் செய்யப்போகின்றது என்கிற பேச்சு சில தினங்களுக்கு முன்னர் இரு தரப்பினருக்கும் இடையில் நடந்தது. புதிய அரசமைப்பு உருவாக்கும் முயற்சிகளின் அடுத்த நகர்வாக இலங்கையின் அடுத்த சுதந்திர தினத்திற்கு முன்னதாக புதிய அரசமைப்பு வரைவை நாடாளுமன்றத்தில் முன்வைப்பது என்கிற இணக்கம் இரு தரப்புகளுக்கும் இடையில் முதன்மையானதாக இருந்தது.

தற்போது உருவாக்கப்பட்டுள்ள புதிய அரசமைப்பு வரைவு தமிழ் மக்கள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்படாத, அவர்களின் அடிப்படைக் கோட்பாடுகளுடன் ஒத்துப் போகாத பல விடயங்களையும் உள்ளடக்கியுள்ளது. அரசின் தன்மை ஒற்றையாட்சியா ஒருமித்த நாடா என்பது, பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்குவது, வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைவு போன்ற பல்வேறு அம்சங்களில் தமிழ் மக்களின் கோரிக்கைகளை இந்த வரைவு முழுமை செய்யவில்லை. அதிகாரப் பகிர்வு விடயத்தில் சில முன்னேற்றகரமான அம்சங்களை இந்த வரைவு கொண்டிருந்தபோதும் தமிழ் மக்களின் வேணவாவை முழுமைப்படுத்தும் விதத்தில் அது இல்லை என்பது வெளிப்படையானது.

அப்படியிருந்தபோதும்அந்தஅரசமைப்பைநாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின்ஆதரவு தேவை. அதற்கும் மேலாகஅது பொது வாக்கெடுப்பு மூலம் அங்கீகரிக்கப்படவேண்டும் என்றும்கூட்டமைப்பின்தலைவர்இரா.சம்பந்தன்அழுத்தமாக வலியுறுத்தி வந்திருக்கிறார். அப்படி மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை மற்றும் பொது வாக்கெடுப்பு என்கிற இரு கண்டங்களில் இருந்தும் புதிய அரசமைப்பு தப்ப வேண்டுமானால் மகிந்த தரப்பின் ஆதரவு இன்றி அது நடைபெறுவது சாத்தியமில்லை.

ஆகமொத்தத்தில் புதிய அரசமைப்பை நாடாளுமன்றத்தில் முன்வைத்தாலும் அதனை நிறைவேற்றுவதற்கான சாத்தியம் மிகக் குறுக்கலானதே! இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு அரசமைப்புத் திருத்தங்கள் மூலம் சாத்தியமான சிலவற்றையாவது வென்றெடுப்பது குறித்துச் சிந்திப்பதும் அவசியம். அதனையே வடக்கு மாகாண முன்னாள் எதிர்க்கட்சித்தலைவர்தவராசாவும் சுட்டிக்காட்டி யிருக்கிறார்.

வனவளப் பாதுகாப்பு, வன ஜீவராசிக் திணைக்களங்கள் மற்றும் தொல்லியல் திணைக்களம் என்பன தமிழர்நிலங்களைக் கேட்டுக் கேள்வியின்றி கையகப்படுத்துகின்றன. மகாவலி அபிவிருத்தி நிறுவனம் மற்றப் பக்கத்தில் தான் தோன்றித் தனமாக நடக்கிறது. விகாரைகளின் ஆக்கிரமிப்பு, மீனவர்களின் அத்துமீறல் போன்றன மற்றொருபுறம்பிரச்சினையாகஇருக்கின்றன. ஆகக்குறைந்ததுரணில் ஆட்சியின் ஊடாக இந்தப் பிரச்சினைகளிற்காவது தீர்வு காண்பதற்குக் கூட்டமைப்பு முயற்சிக்க வேண்டும் என்பதே தவராசாவின் கருத்து. அது பற்றியும் சிந்திக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

பிரவீன் ராம்



# மைத்திரிக்கு மருத்துவம் தேவை!

முதல் நாள் ஒன்றாக விருந்துண்டுவிட்டு மகிந்தவைப் புற மொதுக்கியது, கூட்டாக ஆட்சியமைத்து, கூட்டாக இருந்துவந்த ரணிலைத் திடீரெனப் பதவியிலிருந்து அகற்றியது என்ற மைத்திரியின் பலதரப்பட்ட முன்னெடுப்புக்கள் பற்றியும் அவருடைய தனிப்பட்ட பழக்க வழக்கங்கள் சார்ந்தும் பொதுவெளி இந்த அரசியல் சுழலுக்குப் பிறகு அதிகம் சிலாகிக்கத் தொடங்கியிருப்பது கவனிக்கத்தக்கது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருனிகா பிரேமசந்திர. இவர் தெரிவித்த கருத்து ஒன்றைக் கடந்த நாள்ப் பத்திரிகைகளில் காணமுடிந்தது. அதன் சாராம்சம் அரச தலைவரான மைத்திரிபாலசிறிசேன மனநோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார் என்பதாகவும் அவருக்கு அவசரமாக, இரகசியமான முறையிலேனும் சிகிச்சையளிக்குமாறும் இருந்தது. அவருடைய கருத்து மாத்திரமன்றி ஒக்ரோபர் மாதத்தின் இறுதிப் பகுதியில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் இடம்பெற்ற அதிரடி அரசியல் மாற்றங்களுக்குப் பின்னர் அதிகமானவர்களின் கருத்து அரச தலைவர் மைத்திரி பாலவைச் சாடுவதாக அமைந்திருப்பதையே காண முடி கின்றது.

### மைத்திரியின் மகள் இட்ட பதிவு

ஒக்ரோபர் 26ஆம் திகதி நள்ளிரவன்று நாட்டின் அதிகாரத்திலிருந்த தலைமை அமைச்சரை நீக்கி, புதிய தலைமை அமைச்சரை நியமித்து அதிரடி அரசியலில் இறங்கியிருந்தார் அரச தலைவர் மைத்திரிபால. அதன் பின்னர் நாடாளுமன்றத்தில் அவரும், அவர் நியமித்த புதிய தலைமை அமைச்சரும் பெரும்பான்மையை நிரூபிக்கவேண்டிய கட்டாயம் எழுந்தது. அப்போதுதான் அரச தலைவரின் அடுத்த அதிரடியும் அரங்கேறியது. அதாவது அவர் நாடாளுமன்றத்தைக் கலைத்து உத்தரவிட்டார். அதன் பின்னர் அவருடைய கலைப்பு உத்தரவுக்கு நீதிமன்று இடைக்காலத் தடை விதித்தமை, கூடிய மன்றுகளில் அடிதடி ஏற்பட்டமை எல்லாம்அனைவரும்அறிந்தவையே. இதற்கிடையில் அரச தலைவரான மைத்திரிபால சிறிசேனாவின் மகள் பதிவிட்டதாக இணையப் பதிவொன்று இளசுகள் மத்தியில் உலாவியது. 'ஜனாதிபதி தாத்தா' என்ற தலைப்பில் அவர் எழுதிய புத்தகம் ஒன்றில் சிறுவயதில் தன்னுடைய தந்தை அவருக்குண்டான கோபத்தால் நன்கு முற்றி விளைந்திருந்த முழு வயலையும் எரித்தாதகக் குறிப்பிட்டிருந்த பகுதியே அது. அப்போது அரச தலைவர் முழு வயலையும் எரித்ததற்கு ஒப்பானதாகவே நாடாளுமன்றைக் கலைத்த நடவடிக்கை இருப்பதாக அதற்குக் கருத்துக்கள் குவிந்தமையும் குறிப்பிடத்தக்கது.

### மக்கள் விடுதலை முன்னணியின் கருத்து

மைத்திரிக்கு மருத்துவம் தேவைப்படுவதாகக் ஹிருனிகா குறிப்பிடுவதைப்போலவே மைத்திரி ஏற்படுத்திய அரசியல் நெருக்கடிக்குப் பலதரப்பினரும் எதிர்வினை புரிந்துள்ளனர். தான் ஏற்படுத்திய நெருக்கடியின் முடிவில் அதனால், பாதிக்கப்பட்டிருப்பதும் அரச தலைவர் மைத்திரிபாலவே. இந்த அரச தலைவர் குறித்து எங்களுக்கு ஆச்சரியமாக உள்ளது என்றும், இவர் மனநல ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளார் என்றும், அவரை வெளிநாட்டுக்கேனும் அழைத்துச் சென்று சிகிச்சை வழங்குமாறும் மைத்திரிபாலவின் மனைவி - மகளிடம் தான் கேட்டுக்கொள்வதாகக் குறிப்பிட்ட ஹிருனிகா மாத்திரம் மைத்திரியின் விடயத்தில் மைத்திரி பற்றிக் கருத்துத் தெரிவிக்கவில்லை. அவரைப்போன்றே அண்மைய பத்திரிகையில் மக்கள் விடுதலை முன்னணியின் சார்பாக அதன் உறுப்பினர் ஒருவர் வெளிப்படுத்தியிருக்கின்ற கருத்தும் அமைந்திருந்தது. அவர் மைத்திரியை மற்றொரு விதத்தில் அணுகியிருந்தார்.

சதிகளில் தோல்வியடைந்த மைத்திரி தற்போது இறுதிச் சந்தர்ப்பத்திலும் மீண்டும் காட்டிக்கொடுத்துத் தம்மை மீட்பதற்கான செயற்படுகளில் ஈடுபடுவதைக் காண முடிகின்றது என்றும், நாடாளுமன்றத்தில் நிறைவேறிய நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தமக்குப் பாதகமான பகுதியை அகற்றிவிட்டு மகிந்தவின் தலைமை அமைச்சர் பதவி இல்லாமல் போகும் யோசனையில் மைத்திரி தலையீடு செய்து வருவதாகவும் அது உண்மையானால், இது மைத்திரியின் அரசியல் சூழ்ச்சியையே வெளிப்படுத்தி நிற்பதாகவும் வெளிப்படுத்தியிருந்தார்.

### அரச தலைவர் பதவி ஆசை

அடுத்த அரச தலைவர் தேர்தலில் தனக்குப் போட்டியிடும் எண்ணம் இல்லை என்று அதுவரை காலமும் மைத்திரி பால சிறிசேன கூறிவந்தமையும் தற்போது பேசுபொருளாகியுள்ளது. அரச தலைவர் முன்னெடுத்த திடீர் அரசியல் முடிவு அவருடைய அடுத்த அரச தலைவர் பதவி ஆசையையே வெளிப்படுத்துவதாகவும் பரவலாகக் கருத்துக்கள் நிலவுகின்றன.

எது எப்படியிருப்பினும் முதல் நாள் ஒன்றாக விருந்துண்டுவிட்டு மகிந்தவைப் புற மொதுக்கியது, கூட்டாக ஆட்சியமைத்து, கூட்டாக இருந்துவந்த ரணிலைத் திடீரெனப் பதவியிலிருந்து அகற்றியது என்ற மைத்திரியின் பலதரப்பட்ட முன்னெடுப்புக்கள் பற்றியும் அவருடைய தனிப்பட்ட பழக்க வழக்கங்கள் சார்ந்தும் பொதுவெளி இந்த அரசியல் சுழலுக்குப் பிறகு அதிகம் சிலாகிக்கத் தொடங்கியிருப்பது கவனிக்கத்தக்கது.

தேனுஜா

# கருணாவின் பதற்றம் எத்தகையது...?





விடுதலைப் புலிகள் அமைப்பில் கருணா அம்மான் என்கிற பெயருடன் பிரபலமாகியிருந்தாலும், புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் 'துரோகி' என்ற பெயர்ப் பிரபலமே இன்று வரை கருணா என்கிற விநாயக மூர்த்தி முரளிதரனுக்கு மிகப் பொருத்தப்பாடுடையதாகத் தமிழ் மக்கள் மத்தியில் இருந்துவருகிறது.

புலிகள் இயக்கத்தில் அவர் அங்கம் வகித்த காலத்தில் புலிகளின் தலைவர் பிரபாகரனின் நேசம் மிக்க தளபதியாகவும், நம்பிக்கைக்குரிய தளபதியாகவும் இருந்தவர். வன்னிப் பெருநிலப்பரப்பை விட்டுப் பேச்சு மேடைகளுக்காக வெளியே பயணப்பட்ட சமயங்களில் தன்னுடைய போக்கை மாற்றி மிக நீண்டதும், உன்னத இலட்சியத்தைக் கொண்டதுமான புலிகள் அமைப்பை நலிவுறச் செய்வதற்கான கைங்கரியங்களில் ஈடுபட்டு, புலிகள் அமைப்பால் விரட்டியடிக்கப்பட்டு, அரச ஆதரவுக் கரத்துக்குள் பக்குவப்பட்டுக்கொண்டது எனச் சங்கிலித் தொடராக நிகழ்ந்த சம்பவங்கள் அனைத்தும் அனைவரும் அறிந்த வரலாறாகிவிட்டன.

**கருணா - ரணில் ஊடாட்டம்**

கருணாவின் மாற்றத்துக்கான முக்கிய சூத்திரதாரியாக ரணில் விக்கிரமசிங்க இருந்தமையும் தமிழ் மக்களுக்கு மாத்திரமன்றி பன்னாட்டு மற்றும் உள்ளூர் அரசியல் அவதானிகள் பலரும் அறிந்த, தெரிந்த விடயங்கள்.

இவ்வாறாகப் புலிகள் அமைப்பிலிருந்து கருணா பிரிந்ததும், புலிகள் அமைப்புத் தோற்கடிக்கப்பட்டதும், அதன் பின்பு அரச விசுவாசியாகிக் கருணாவுக்கு அமைச்சுப் பதவியும், பின்னர் அவர் தனிக்கட்சி அமைத்து அதன் நிலையும்(?) என்று போய்க் கொண்டிருக்க... விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறைத் தலைவரான பொட்டு அம்மான் உயிருடன் இருப்பதாகவும், தற்காலத்தில் நிகழ்ந்த கொலைகள் இரண்டுக்கும் அவருக்கும் தொடர்பிருப்பதாகவும் தகவல் வெளியிட்டிருக்கிறார் கருணா.

**கருணா வெளியிட்ட அவசர தகவல்**

மட்டக்களப்பு - வவுணதீவுப் பகுதியில் இரண்டு பொலிசாரை இனம் தெரியாத ஆயுததாரிகள் சுட்டுக் கொன்றிருக்கின்றனர். இந்தச் சூட்டுச் சம்பவத்துக்கும் விநாயகமூர்த்தி முரளிதரன் என்கிற கருணாவுக்கும் தொடர்பு இருக்கலாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரால் நாடாளுமன்றில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. இந்த நிலையில்தான் கருணா புதிய தகவல் ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

அதாவது விடுதலைப் புலிகள் அமைப்பின் புலனாய்வுப் பிரிவுத் தலைவராகவிருந்த பொட்டு அம்மான் இறுதிப் போரில் இறக்கவில்லை என்றும் அவர் நேர்வேயில் உயிருடன் இருக்கிறார் என்றும் தெரிவித்திருக்கிறார். அதாவது வவுணதீவுப் பொலிசார் கொலையில் தன் மீது இருந்த சந்தேகத்தை அப்பால் நகர்த்தி, அதைப் பொட்டம்மான் என்கிற புலிகளின் புலனாய்வுத் தலைவரை நோக்கி நகர்த்தி அவர் உயிருடன் இருப்பதால், குறித்த கொலைகளுக்கும் முன்னாள் போராளிகளுக்கும் தொடர்பிருக்கின்றது என்று முடிச்சுப்போட்டிருக்கிறார். இதன் மூலம் முன்னாள் போராளிகள் விடயத்திலான அரச தலையீட்டில் இறுக்கத்தைக் கொண்டுவருவதற்கு அவர் முயற்சிப்பதாகவே அவருடைய இந்தக் கருத்து தமிழ் மக்கள் மத்தியில் நோக்கப்பட்டுள்ளது.

**கருணாவின் துயர நிலை**

புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்த கையுடன் தமிழ் மக்களிடமிருந்து அந்நியமாகிப்போய்விட்ட கருணாவுக்கு அந்தக் காலத்தில் ஆட்சியில் இருந்த அரசின் அரவணைப்பு இன்று வரை அதேயளவுடன் இருந்து வருகிறது என்று சொல்ல முடியாது. எப்படியிருப்பினும் முக்கிய வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்திய ஒருவர் என்கிற வகையில் அவரை அந்தச் சமூகம் கொண்டாடவே செய்யும்.

ஆனால், தமிழ் மக்கள் மத்தியில் அவருக்கு அற்ப, சொற்ப செல்வாக்கோ, மதிப்போ இருப்பதாக அவர் கூடக் கனவு காணமாட்டார் என்பது தமிழ்ச் சமூகத்துக்கு வெளிப்படையாகத் தெரிகின்ற விடயம். அன்றைய அரசின் ஆட்சிக் காலத்தில் பிரதி அமைச்சராக இருந்தமை மாத்திரமன்றி, ஒட்டுக்குழுவாகச் செயற்பட்டுப் பல சட்டவிரோதச் செயல்களிலும், அராஜகங்களிலும் ஈடுபட்டதாகக் கூடப் பரவலாகக் குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

இந்த நிலையில் சாதாரண மக்களோடு மக்களாக அவரால் தமிழ் மக்களோடு சாதாரணமாகக் கலந்துறவாடிவிட முடியாது என்பதும் வெளிப்படை. மக்கள் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொள்கின்ற எந்தவொரு தமிழ்ப் பிரதிநிதிகளால்கூடத் தமக்கான பாதுகாப்பில்லாமல் மக்கள் மத்தியில் நடமாட முடியாத நிலையிருக்கின்ற காலத்தில் கருணாவின் இன்றைய நிலை கவலை தரும் ஒன்றாகவே நிச்சயம் அமையும்.

தற்போது பொட்டம்மான் உயிருடன் இருப்பதாகவும், வவுணதீவுப் பொலிசார் கொலை விடயத்தில் அதைப் பின்னணியாக்குவதற்கு அவர் முயல்வதும்கூடத் தமிழ் மக்களுக்கு நகைப்புக்கிடமான ஒன்றாகவே இருந்திருக்கிறது. காரணம், அவர் சொல்வதுபோல பொட்டம்மான் உயிருடன் இருப்பது உண்மையாக இருந்தால், அவருடைய முதன்மை இலக்குகள் எப்படியிருக்கும் என்பது கருணாவுக்கே முதலில் வெளிச்சமாகும். சிலவேளை, இந்தக் கருத்துக் கருணா கண்ட கனவின் பதற்றமாகக் கூட இருக்கலாம்.

> புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்த கையுடன் தமிழ் மக்களிடமிருந்து அந்நியமாகிப்போய்விட்ட கருணாவுக்கு அந்தக் காலத்தில் ஆட்சியில் இருந்த அரசின் அரணவணைப்பு இன்று வரை அதேயளவுடன் இருந்து வருகிறது என்று சொல்ல முடியாது. எப்படியிருப்பினும் முக்கிய வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்திய ஒருவர் என்கிற வகையில் அவரை அந்தச் சமூகம் கொண்டாடவே செய்யும்.

## ஆசிரியருக்கான கடிதம்

# பசு வதைக்கு எதிராகக் கொக்கரிப்போருக்கு...!

2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தல்களுக்குப் பிறகு, இறைச்சி விற்பனைக்குத் தடை, மாடு வெட்டத் தடை என்று பல வகையான போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. சில பிரதேச சபைகள் இறைச்சி விற்பனைக்குத் தடையும் விதித்துள்ளன.

இருந்தும், இந்த வீணர்களின் கொக்கரிப்பு ஓய்ந்ததாக இல்லை. கட்டாக் காலிகளின் தொல்லையும் ஓய்ந்ததாக இல்லை. விவசாயத்தை மட்டும் நம்பி வாழும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தையே அழித்து விடுகின்றன கட்டாக் காலிகள்.

இதை எல்லாம் இந்த அகிம்சாவாதிகள் கண்டுகொள்வதாகத் தெரியவில்லை. இவர்களின் பொழுதுபோக்குத்தான் இந்தக் கொக்கரிப்பு. சில பிரதேச சபைகளும் இந்த வீணர் கூட்டத்தின் பங்காளிகளாகவே இருக்கின்றன. நிலமை இவ்வாறே போனால், அழிவுகளைச் சந்திக்கின்ற விவசாயிகள் பட்டினிச் சாவைச் சந்திக்க வேண்டியதுதான். இந்தக் கூட்டத்தினருக்குப் பின்னால், சில அரசியல்வாதிகளும், சமயவாதிகள் பலரும் இருப்பதுதான் வேடிக்கையானதாகும்.

**ப.யேசுபாதம் வட்டக்கச்சி**

**வாசகர்களே!**

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்ப டுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப் பாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புபட்ட

# 5ஆயிரம்பேர்சுட்டுக்கொலை

## பிலிப்பைன்ஸ் அதிபருக்குக் கண்டனங்களும் எதிர்ப்புகளும்

மணிலா.டிச.3
பிலிப்பைன்ஸில்போதைப்பொருளுக்குஎதிராக அந்தநாட்டுஅதிபர் ரோட்ரிகோ டுடார்தோ மேற்கொண்டு வருகின்ற மனிதாபிமானமற்றநடவடிக்கைகளின்மூலம் இதுவரை5ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. பிலிப்பைன்ஸ் அதிபர் பதிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த சிலவருடங்களாகப்போதைப்பொருள் கடத்தலைச் சுட்டிக்காட்டி பிலிப்பைன்ஸ் அரசு சுட்டுக் கொன்றசம்பவங்களில்இந்தஒரு வழக்கு மட்டுமே நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. டுடர்தோ பிலிப்பைன்ஸின் அதிபராக 2016ஆம் ஆண்டு முதல் இருந்து வருகிறார். இவருடைய




போத்தைப்பொருள் கடத்தலுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் குற்றவாளிகளைக் கண்டவுடன் சுட்டுக் கொல்வதற்கு உத்தரவிட்டுள்ளார். கடந்த இரண்டு வருடங்களில்மட்டும்5ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள்சுட்டுக்கொல்லப்பட்டனர். பலர் காணாமல்போய் உள்ளனர்.
கடந்தசிலமாதங்களில்இந்தஎண்ணிகைஅதிகரித்துள்ளது.17வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் போதைப்பொருள் கடத்தியதாகப் பொலிஸ் அதிகாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டான். இந்த விவகாரம்பெரிதுபடுத்தப்பட்டதும், சம்பந்தப்பட்ட பொலிசார் மீது வழக்குப்



இந்தச் செயலுக்குப் பல்வேறு மனித உரிமை அமைப்புகளும், அமெரிக்கா உள்ளிட்ட உலகநாடுகளும் தங்களது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன.
இருப்பினும் அதற்கெல்லாம் சற்றும் செவி சாய்க்காமல் குற்றவாளிகளுக்குஎதிரானமிகக் கடுமையான தண்டனைகளை அவர் நடைமுறைப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

# இயற்கைஎய்தினார் அமெரிக்காவின் முன்னாள் அதிபர்

## ஜோர்ஜ்ச்ஹெர்பர்ட்வாக்கர்புஷ்

வோஷிங்டன்.டிச.3
அமெரிக்காவின் முன்னாள் அதிபர்களில் ஒருவரான ஜோர்ஜ்ஹெர்பர்ட்வாக்கர்புஷ் தன்னுடைய 94ஆவது வயதில்உடல்நலக்குறைவால் நேற்று முன்தினம் இயற்கை எய்தியிருக்கிறார். பராக் ஒபாமாவுக்கு முன்னர்



அமெரிக்காவைஆண்டஅதிபர்ஜோர்ஜ்டபிள்யூ. புஷ். அவருடைய தந்தையும்அந்தநாட்டின்முன்னாள்அதிபருமேஜோர்ஜ்ஹெர்பர்ட் வாக்கர் புஷ் (ஜோர்ஜ் எச். டபிள்யூ. புஷ்) ஆவார். அமெரிக்காவின் அதிபராக 1989ஆம் ஆண்டிலிருந்து 1993ஆம் ஆண்டுவரை பொறுப்புவகித்தவர். அதற்குமுன்னதாக1981ஆம்ஆண்டுமுதல் 1989ஆம் ஆண்டு வரையான 8 ஆண்டுகாலம் துணை அதிபராகவும்இருந்தவர். இவரதுமகனானஜோர்ஜ்டபிள்யூ. புஷ், அந்த நாட்டின் அதிபராக 2001ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டுவரை இரண்டு முறை அந்த நாட்டின் அதிபராகப் பதவி வகித்திருந்தார். இந்த நிலையில், வயோதிபம் சார்ந்த காரணங்களால் வீட்டில் ஓய்வெடுத்துவந்த ஜோர்ஜ் எச். டபிள்யூ. புஷ், நிமோனியா எனப்படும் கபவாதம் சார்ந்த பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருந்த அவர் நேற்று முன்தினம் இயற்கை எய்தயிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.






## உக்ரைன் மோதல் போக்கு

# "ஆட்சியாளர்கள் இருக்கு
# போர் நீளும்" புடின் அறை

புடினுடன் ட்ரம்ப் பேசியதாக வெள்ளை மாளிகை அ

வோஷிங்டன்.டிச.3
உக்ரைன் நாட்டைச் சேர்ந்த 3 கடற்படைக் கப்பல்களை கிரிமியாப் பகுதிக்கு அருகே வைத்து ரஷ்ய இராணுவம் கைப்பற்றியிருந்தது. இதனால் உக்ரைன் ரஷ்யா ஆகிய இரண்டு நாடுகளுக்கும் இடையே போர்ப்பதற்றம் அதிகரித்திருந்தது.

இந்தநிலையில்ரஷ்யாஅதிபர்புடினும்அமெரிக்கஅதிபர் ட்ரம்பும் சந்தித்துப் பேசுவதாக இருந்த நிகழ்வும் கேள்விக்குறியாகியிருந்தது.
இதற்கிடையில் நடந்து முடிந்த ஜி20 உச்சி மநாட்டில் புடினுடன்ட்ரம்பேசியதாகஅமெரிக்கஅதிபர்மாளிகை அறிவித்துள்ளது. அதையடுத்து "உக்ரைன்ஆட்சியாளர்கள் இருக்கும்வரை போர் நீளும்" என்று புடின் அறைகூவல் விடுத்திருந்த செய்தியும் வெளிவந்திருக்கிறது. ஆர்ஜென்ரீனாவில்நடைபெற்றஜி20மாநாட்டு நிறைவின்போது நடைபெற்ற விருந்து நிகழ்ச்சியின்போதுட்ரம்ப்பும்புடினும்'சம்பிரதாயமாக' பேசிக் கொண்டதாக அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. விருந்து மேசையின் அருகே ட்ரம்ப்பும் அவரது மனைவிமெலனியாவும்நாற்காலிகளில்அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு அடுத்த நாற்காலிகளில் சீன அதிபர்ஜின்பிங்மற்றும்அவரதுமனைவிபெங்லியுயான் இருந்தனர். அவர்களுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த புடினுடன் ட்ரம்ப் சிறிது நேரம் சம்பிரதாயமாகப் பேசினார்எனவெள்ளைமாளிகையின்செய்தித்தொடர்பாளர் சாரா சான்டர்ஸ் தெரிவித்துள்ளார்.
இந்த விருந்தின் போது உக்ரைன் விவகாரம் தொடர்பாக அமெரிக்க அதிபரின் கேள்விகளுக்குப் புடின் விளக்கம்அளித்ததாகரஷ்ய ஊடகங்கள்செய்திவெளியிட்டுள்ளன. அதேவேளை உக்ரைன் நாட்டின் பிரச்சினையைத்தீர்ப்பதில்அக்கறைகாட்டாதஆட்சியாளர்கள்பதவியில்இருக்கும்வரைஇரண்டுநாடுகளுக்கும் இடையேயானபோர்தொடரும்எனரஷ்யஅதிபர்புடின் திட்டவட்டமாகஅறிவித்துள்ளமையும்பிற்பாடுநிகழ்ந்துள்ளது.

**பின்னணி**
ரஷ்யாவின் பெருநிலப்பரப்பை ஒட்டி இருந்த பலநாடுகள் சோவியத் யூனியன் என்றபெயரில்ரஷ்யாவுடன் இணைந்த ஒரே நாடாக இருந்தன. பின்னர் அந்த நாடுகள் ரஷ்யாவில் இருந்து பிரிந்து சென்று விட்டன. அதில், முக்கியமான நாடு உக்ரைன். பிரிந்து சென்ற பிறகு இரண்டுநாடுகளும்பகைநாடுகளாக மாறிவிட்டன. சில ஆன
பகுதியான கிரி
கைப்பற்றித்
அதன் பிறகு
மோதல்போக்
யாக் கடல் பகு
களை ரஷ்யா
நாடுகளுக்கும்
நிலவுகிறது. எ
வச் சட்டத்தை
படைகளைஎல்
ரஷ்யாவும்எல்
வருகிறது. 20
ரஷ்யாவும் உ
ஈடுபட்டு வரு
அங்குசண்டை
யவிடம் கனரக
ரைனுக்கு மே
கிடைக்கின்றன

# மெக்சிக்கோவின் அதிபரா
# மேனுவேல் லோபெஸ் ஆ

மெக்சிக்கோ சிற்றி.டிச.3
அமெரிக்காவின் அயல்நாடான மெக்சிக்கோவின் புதிய அதிபராக மேனுவேல் லோபெஸ்ஆப்ரடார்என்பவர்பதவியேற்றுள்ளார். வட அமெரிக்க நாடான மெக்சிக்கோவில் அதிபர் பதவி, நாடாளுமன்றம் மற்றும் 3ஆயிரம் வரையான பிராந்தியப் பதவிகளுக்கான தேர்தல் கடந்த ஜூலை மாதம் நடந்திருந்தது. அப்போதைய அதிபராக இருந்த பெனா நெய்டோவுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுகள் குவிந்ததால், அவர் சார்ந்துள்ள கட்சி தோல்வியைத் தழுவும் எனக் கருத்துக் கணிப்புகள் வெளியாகியிருந்தன. அதேபோலதேர்தல்முடிவுகள்எதிரொலித்தன. 53சதவீதம்




வாக்குகள் பெற்று மேனுவேல் லோபெஸ் ஆப்ரடார் முதலிடம் பிடித்தார். இதன்மூலம் மெக்சிக்கோவைக்

ட்ரம்ப் வாழ்த்



# தம்வரை
# றகூவல்

## றிவிப்பு



ண்டுகளுக்கு முன்பு உக்ரைனின் ஒரு ரிமியாவை ரஷ்யா வலுக்கட்டாயமாகக் தன்னுடன் இணைத்து கொண்டது. இரண்டு நாடுகளுக்கும் இடையே க்கு அதிகரித்தது. இந்த நிலையில் கிரிமி குதியில் சென்ற உக்ரைனின் 3கப்பல் கைப்பற்றியுள்ளது. இதனால் இரண்டு ம்இடையேபோர்மூழும்என்றசூழ்நிலை னவே, உக்ரைன் உள்நாட்டில் இராணு த நடைமுறைப்படுத்தியுள்ளது. தனது ல்லையில்அதிகஆயுதங்களைக்குவித்து ல்லையில்குவித்துவருகிறது. பதிலுக்கு 014ஆம் ஆண்டிலிருந்து உக்ரைனும் க்ரைனின் கிழக்குப் பகுதியில் போரில் கின்றன. தற்போதைய நிலையால், டீவிரமடையும்ஆபத்து உள்ளது. ரஷ் க ஆயுதங்கள் உள்ளன என்பதும் உக் மலை நாடுகளிடமிருந்து உதவிகள் ன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# னார்
# ப்ரடார்


கடந்த 89 ஆண்டுகளாக ஆண்டு வந்த இரண்டு முக்கிய கட்சி களைத் தோற்கடித்தவர் என்ற வர லாற்றுச்சாதனையைமேனுவேல் லோபெஸ் ஆப்ரடார் படைத்தார். ஊழல், வறுமை, போதை வர்த்த கம் ஆகியவற்றை ஒழிப்பதே தனது முதல் இலக்கு என மேனு வேல் லோபெஸ் ஆப்ரடார் தனது தேர்தல் வாக்குறுதியில் குறிப்பிட்டிருந்தார். அமெரிக்கா வின்குடியேற்றக்கொள்கையைக் கடுமையாக ஆப்ரடார் விமர்சித்து வந்தாலும், இவரது வெற்றிக்கு துக்களைத் தெரிவித்தார்.

## இனிதே நிறைவடைந்தது ஜி20

# அமெரிக்கா - சீனா வர்த்தகப் போர் முடிந்தது; 2022ஆம் ஆண்டு உச்சி மாநாடு இந்தியாவில்

பியூனஸ்அயர்ஸ்.டிச.3

ஜி20 என்பது உலகின் பொருளாதாரத்தில் 90 சதவீதத்தைக் கொண்டுள்ள 20 நாடுகளை உள்ளடக்கிய கூட்டமைப்பாகும். 80 சதவீத உலக வர்த்தகம், மூன்றில் ஒருபகுதி மக்கள் தொகை என உலகின் அரைவாசியைக் கொண்டிருக்கும் இந்த அமைப்பில், ஆர்ஜென்டினா, ஆஸ்திரேலியா, பிரேசில், கனடா, சீனா, ஐரோப்பியஒன்றியம், பிரான்ஸ், ஜேர்மனி, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், மெக்சிக்கோ, ரஷ்யா, சவூதிஅரேபியா, தென் ஆபிரிக்கா, தென் கொரியா, துருக்கி, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன.






### அமெ. - சீனா வரி விவகாரம்

அர்ஜென்டினா நாட்டின் தலைநகர் பியூனஸ் அயர்ஸ் நகரில் ஜி20 நாடுகள் கலந்து கொண்ட மாநாடு கடந்த இரு நாள்களாகநடைபெற்றது. இந்தமாநாட்டில் அங்கத்துவநாடுகள்தமக்குள்நிலவிவரும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடின. இதில் சீனா மீது அமெரிக்கா விதித்துள்ள வரிவிதிப்பை ஜனவரி மாதத்திலிருந்து நீக்குவதற்கு இரண்டு நாட்டுத் தலைவர்களும் சம்மதித்துள்ளனர். அமெரிக்காவிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் முக்கிய பொருள்களுக்கான வரியையும், பிறநாடுகளில் இருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கான வரியையும் பலமடங்காக உயர்த்தி உத்தரவிட்டார் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப். இந்த உத்தரவால் சீனா - அமெரிக்கா வுக்குஇடையில்வர்த்தகப் போர் மூண்டது. சீனா அமெரிக்காவின் பொருள்கள் மீது ஏராளமான வரிகளை விதித்தது. இதற்குப் பதிலடியாகச் சீனாவின் பல்வேறு பொருள்கள் மீது சுமார் 20 ஆயிரம் கோடி டொலர்கள் மதிப்பிலான வரிகளைட்ரம்ப்சமீபத்தில் விதித்தார். .இந்த வரிவிதிப்பு அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில்





இருந்துநடைமுறைக்குவரும்என்றுஅமெரிக்க அரசு அறிவித்திருந்தது. இந்த நிலையில்தான் ஆர்ஜென்ரீனாவில் நடைபெற்ற ஜி 20 மாநாட்டில்சீனஅதிபர்க்சிஜின்பிங் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பும் சந்தித்து இரண்டு நாடுகளுக்கும் இடையிலான வரிவிதிப்புக் கொள்கை தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். இந்த பேச்சுவார்த்தை சுமுகமாக நடந்ததாகவும், வரிகளைத் தளர்த்துவதற்கு இரண்டு நாட்டு தலைவர்களும் சம்மதம் தெரிவித்ததாகவும் சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

### 2022ம் ஆண்டு ஜி20 மாநாடு இந்தியாவில்

2022ஆம் ஆண்டில் ஜி20 உச்சி மாநாட்டை நடத்தும் வாய்ப்பை இந்தியாவுக்கு இத்தாலி விட்டுக்கொடுத்துள்ளது. 2022ஆம்ஆண்டில் இந்த மாநாட்டை இத்தாலி நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், இந்தியாவுக்கு அந்த வாய்ப்பை இத்தாலி வழங்கியுள்ளது. இதற்காக அந்த நாட்டுக்கு நன்றி தெரிவித்துள்ளார் ஆர்ஜென்ரீனாவில் நடந்தஇந்தமாநாட்டில்கலந்துகொண்டிருந்த இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி. "2022ஆம்ஆண்டுஜி20மாநாட்டை இந்தியா நடத்த உள்ளது. இதில் கலந்து கொள்வதற்கு இந்தியாவுக்கு வரும்படி ஜி20 நாட்டுத்தலைவர்களைஅழைக்கிறேன். என்று தன்னுடைய கீச்சகப் பக்கத்தில் வரவேற்பைப் பதிவேற்றியிருக்கிறார் மோடி.

## ஆய்வாளர்கள் ஆச்சரியத் தகவல்!

# 6இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பே ஆபிரிக்காவில் மனிதர்கள்!

அல்ஜியர்ஸ்.டிச.3

பூமியில் மனிதர்கள் தோன்றி யது எங்கு? எப்போது? என்பது குறித்தபல்வேறுசர்ச்சைகளும், ஆய்வுகளும் நடைபெற்று வரு கின்றன. இந்த நிலையில், 6 இலட்சம்ஆண்டுகளுக்குமுன்பு வட ஆபிரிக்காவில் மனிதர்கள் தோன்றியிருப்பதற்கானவாய்ப் புக்கள் காணப்படுவதாக விஞ் ஞானிகள் தெரிவித்துள்ளனர். வட ஆபிரிக்காவில் உள்ள அல் ஜீரியா நாட்டில் தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆய்வுகளை மேற் கொண்டு வருகின்றன. அதில் அல்ஜீரியா உட் பட உலக நாடுகளின் நிபுணர்கள் பங்கேற்கின் றனர். அதில் அல்ஜியர்ஸ் நகரில் இருந்து கிழக்கே 300கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள செஃப் என்ற இடத்தில் கற்களால் ஆன கூர்மையான ஆயுதங்கள் கிடைத்துள்ளன. இவைதவிரவிலங்குகளின்வெட்டப்பட்ட எலும் புகளும் கிடைத்துள்ளன. இவற்றை ஆய்வு செய்த ஆய்வாளர்கள் இதில் அவை கற்கால மனிதர்கள் பயன்படுத்திய ஆயுதங்கள் என கண்டறியப்பட்டுள்ளன. இவை போன்ற ஆயு தங்கள் ஏற்கனவே கிழக்கு ஆபிரிக்காவில் கண்டு பிடிக்கப்பட்டிருந்தன. வெட்டப்பட்ட விலங்குகளின்எலும்புகள்பழங்காலமுதலை கள், யானைகள் மற்றும் நீர் யானைகளுடை யன என்றும்தெரிய வந்துள்ளது. அவை வேட் டையாடப்பட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என்




றும் கருதப்படுகிறது. இதற்கு முன்னரான ஆய்வுகளின்படி 26இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு நமது மூதாதையர்கள் வேட்டையாடு வதற்குப் பயன்படுத்திய கற்கால ஆயுதங்கள் போன்றேஇவையும்உள்ளன. எனவேகிழக்கு மற்றும் வடக்கு ஆபிரிக்காவில் வாழ்ந்த மூதா தையர்கள் இவற்றைப் பயன்படுத்தியிருக்க லாம் என்று ஆய்வில் ஈடுபட்டுள்ள நிபுணர்கள் கருதுகின்றனர். அதே நேரத்தில் மனிதர்கள் 24இலட்சம் ஆண்டுகள் அல்லது 19 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியிருக்கலாம் என 2 விதமான கருத்துக்கள் நிலவி வருகின் றன. இந்தநிலையில்தான், வட ஆபிரிக்காவில் உள்ள எதியோப்பியாவின் சோனா பகுதியில் உள்ள அய்ன்லானோக் என்ற இடத்தில் ஆதி கால மனிதர்கள் உருவாகியிருக்கலாம். அவர் கள் 6இலட்சம்ஆண்டுகளுக்குமுன்பேதோன் றியிருக்கலாம் என்றும் உறுதிபடத் தெரிவித் துள்ளனர்.


# இந்தோனேசியாவில் நிலச்சரிவு மாணவர்கள் 7 பேர் சாவு

ஜகார்த்தா.டிச.3

இந்தோனேசியாவின் வடக்குச் சுமத்ரா மாகாணத்தில்நேற்றுஏற்பட்டநிலச்சரிவில்ஓவ்வு விடுதி மண்ணில் புதைந்தது. விடுதியில் தங்கியிருந்த கல்லூரி மாணவர்கள் 7பேர் சாவடைந்துள்ளனர். இந்தோனேசியாநாட்டின் மேற்கு பகுதியில் உள்ள பல்கலைக்கழகத்தில் பயிலும் 14 மாணவர்கள் வடக்குச் சுமத்ரா மாகாணத்துக்குக் கல்விச் சுற்றுலா நிமித்தம் பயணமாகியுள்ளனர். அங்குள்ள காரோ மாவட்டம், டவுலு கிராமத்தில் ஒரு விடுதியில் இவர்கள் அனைவரும் தங்கி இருந்துள்ளனர். இந்த நிலையில், நேற்று அந்த பகுதியில் திடீரென்று நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதில் மாணவர்கள் தங்கியிருந்த விடுதி தரைக்குள் புதைந்தது. தகவல் அறிந்து விரைந்துவந்த தேசிய பேரிடர் மீட்புப் படையினர் அதில் சிக்கிக் காயப்பட்டிருந்த 7 பேரைக் காப்பாற்றினர். இடிபாடுகளுக்குள் சிக்கி, மூச்சுத்திணறி 7 மாணவர்கள் சாவடைந்த நிலையில் மீட்கப்பட்டார்கள்.







# விஸ்வாசம் படத்தில் அஜித்துக்கு இரட்டை வேடம் இல்லை - சிவா பேட்டி

சிவா இயக்கத்தில் நான்காவது முறையாக அஜித் நடிக்கும் படம் விஸ்வாசம். அஜித்துக்கு ஜோடியாக நயன்தாரா நடிக்க டி.இமான் இசையமைக்கிறார். இந்தப் படத்தில் அஜித் இரட்டை வேடங்களில் நடிப்பதாக தகவல் வந்தது. படத்தின் முதல் சுவரொட்டியில் இரண்டு அஜித் இருந்த தால் இந்தத் தகவல் பரவியது.

ஆனால் விஸ்வாசம் படத்தில் ஓர் அஜித் தான் என்று இயக்குநர் சிவா கூறி இருக்கிறார். படத்தின் கதை பற்றி அவர் அளித்துள்ள பேட்டியில் "தேனி மாவட்டத்தில் கொடு விலார்பட்டி என்கிற கிராமத்தில் நடக்கும் கதை இது. வெளியே வீரமாகவும், உள்ளுக்குள்ளே வெள்ளந்தியா கவும் வாழும் மனிதர்களின் உணர்வுபூர்வமான சம்ப வங்கள்தான் 'விஸ்வாசம்'. படத்தில் அஜித்துக்கு ஒரே ஒரு வேடம்தான்.

முரட்டு மீசையோடு அலப்பறையான தடாலடி ஆசாமி 'தூக்குதுரை' அஜித். முதல்பாதியில் தேனி கிராமத்துத் திருவிழாக் கொண்டாட்டத்தில் அதிரடி செய்கிறார். இடை வேளைக்குப் பிறகு நகரத்தில் தூள் கிளப்புறார்.

ஒரு கிராமத்து ஆள் எப்படி இருப்பாரோ அதே உடல் மொழி, பேசுகின்ற விதம், துறுதுறுப்பு, துள்ளல் என்று காவா தன்னைச் சரிவரத் தயார் படுத்திச் செய்துள்ளார்" என்று கூறி இருக்கிறார்.

# twitter

சப்பாணி@manipmp



இந்தக் கோட்டை
தாண்டி நீயும் வரக்கூடாது
நானும் வரமாட்டேன்
#வறுமைக்கோடு

அன்புடன் கதிர் @kathir_twits



யானைப் பசிக்குச் சோள
பொரி என்பதன் சுருக்கம்
அரசின் நிவாரணம்!!

சக்திமான் @MUFTHIMOHAMED1



வாட்ஸப் வா வாங்குது!
வேலை போ போங்குது!

நிகழ்காலப் பழமொழி.

தத்துவக்கிறுக்கன் @Kiruku_



இன்பமோ துன்பமோ
சிரித்துக்கொண்டே இரு.
பாக்கிறவன் லூசுப்பய னு
நினைச்சுத் தெறிச்சு ஓடட்டும்



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** விட்டுக் கொடுக்கும் மனப்பாங்குடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெறும். பணவரவில் திருப்திகரமான நிலைமை உண்டு.

**இடபம்:** ஆணவம், அகம்பாவத்தைத் தவிர்க்க வேண்டும். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெற அதிக உழைப்பு உதவும். புதிய வடிவங்களில் செலவு ஏற்படலாம்.

**மிதுனம்:** பணிகளை முன் யோசனையுடன் ஆரம்பிக்க வேண்டும். நண்பருக்கு கொடுத்த வாக்குறுதி நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளைச் சரி செய்வீர்கள்.

**கடகம்:** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும். உறவினருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உருவாகும்.

**சிங்கம்:** அத்தியாவசியமான பணியைப் பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். வாழ்வில் முன்னர் பெற்ற அனுபவம் நற்பயன் தரும். கண்களின் பாதுகாப்பில் கவனம் வேண்டும்.

**கன்னி:** புதியவர் ஒருவரின் அறிமுகம் கிடைத்து மனதில் மகிழ்ச்சி பெறுவீர்கள். பணிகள் ஒவ்வொன்றாக நிறைவேறும். தொழில் வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி ஏற்படும்.

**துலாம்:** வேண்டாத நபர் ஒருவரைப் பொது இடத்தில் சந்திக்க நேரிடலாம். பெருந்தன்மையுடன் விலகுவதால் சிரமம் தவிர்க்கலாம்.

**விருச்சிகம்:** : செயல்களில் நேர்த்தியும் வசீகரமும் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரம் செழிக்க அனுகூல சூழ்நிலை உருவாகும். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**தனுசு:** நல்ல செயல்களை நண்பர்கள் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் தேவையான அபிவிருத்திப் பணிபுரிவீர்கள். வளர்ச்சியும், பணவரவும் அதிகரிக்கும்.

**மகரம்:** எவரிடமும் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் முன் யோசனையுடன் பணிபுரிவது அவசியம். எதிர்பார்த்த வகையில் பணவரவு கிடைக்கும்.


**கும்பம்:** எவரிடமும் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் முன் யோசனையுடன் பணிபுரிவது அவசியம். எதிர்பார்த்த வகையில் பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** புதிய அணுகுமுறையினால் பணிகளை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டு. பணவரவில் சேமிப்புக் கூடும்.










## தோற்பதில் உண்டு வெற்றி!

அம்மாவிடம் தோற்றுப் போ,
அன்பு அதிகரிக்கும்

அப்பாவிடம் தோற்றுப் போ
அறிவு மேம்படும்

துணையிடம் தோற்றுப்போ
மகிழ்ச்சி இரட்டிப்பாகும்

பிள்ளையிடம் தோற்றுப்போ
பாசம் பன்மடங்காகும்

சொந்தங்களிடம்
தோற்றுப்போ உறவு
பலப்படும்

நண்பனிடம்
தோற்றுப்போ
நட்பு உறுதிப்படும்

தோற்றுபோனால்
வெற்றி கிடைக்கும்..

## சுடோக்கு
எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | | | | | 6 | | |
| 3 | | | | | | | | 7 |
| 7 | | 6 | | | | 4 | 9 | |
| | | | | 6 | 2 | 9 | | |
| | | | | 1 | 3 | | | |
| | 8 | 5 | 7 | 9 | | | | |
| | 3 | 1 | | 2 | 8 | | | 5 |
| | | 9 | 3 | | | | | |
| | | 7 | 6 | | | | 2 | |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | 7 | 1 | 9 | 2 | 5 | 8 | 3 |
| 3 | 8 | 1 | 5 | 7 | 4 | 2 | 9 | 6 |
| 9 | 5 | 2 | 8 | 6 | 3 | 1 | 4 | 7 |
| 6 | 1 | 3 | 4 | 8 | 5 | 9 | 7 | 2 |
| 2 | 9 | 4 | 3 | 1 | 7 | 8 | 6 | 5 |
| 5 | 7 | 8 | 9 | 2 | 6 | 4 | 3 | 1 |
| 1 | 2 | 6 | 7 | 4 | 9 | 3 | 5 | 8 |
| 7 | 3 | 9 | 2 | 5 | 8 | 6 | 1 | 4 |
| 8 | 4 | 5 | 6 | 3 | 1 | 7 | 2 | 9 |



# மன்னர் மனதை மாற்றிய புதிர்

மரகதவூர் எனும் நாட்டை வீரசேனன் எனும் மன்னர் ஆண்டு வந்தார். அந்த நாட்டில் வாழும் மக்களுக்கு மன்னரே கடன் கொடுப்பதும். அதை அவரே அறவீடு செய்வதும் வழக்கமாக இருந்தது. அப்படிக் கடன் வாங்கியவர்களில் முத்தையனும் ஒருவர். முத்தையன் நீண்ட நாள்களாகக் கடனை மீளச் செலுத்தாமலிருந்தார். ஒரு நாள் மன்னரே தனது மந்திரியுடன் அறவீட்டுக்காக வீட்டுக்கு வந்தார். முத்தையன் வீட்டின் வெளியே இருந்தபடி. "முத்தையா...முத்தையா..." என்று குரல் கொடுத்தார்.

வீட்டுக்கு உள்ளேயிருந்து 10 வயதுச் சிறுமி வெளியே வந்தாள். அவளுக்கு மன்னரைப் பார்த்ததும் மகிழ்ச்சி. "மன்னா... தாங்கள் எங்கள் வீடு தேடி வந்தது நாங்கள் செய்த புண்ணியம். தங்களின் வருகை மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது" என்றாள்.

"அதெல்லாம் இருக்கட்டும். முதலில் உன் தந்தையைக் கூப்பிடு" என்று மன்னர் அதிகாரத் தோரணையில் கட்டளையிட்டார்.

"மன்னா... தற்போது என் தந்தை வீட்டில் இல்லை. அவர் சூரியனின் கண்ணை மூடுவதற்காகச் சென்றிருக்கிறார்" என்றாள். "என்னது, சூரியனின் கண்ணை மூடவா?" மன்னருக்கும் மந்திரிக்கும் அவள் சொன்னது புரியவில்லை. அதை வெளியே காட்டிக்கொள்ளாமல், "சரி சரி... உன் அம்மாவைக் கூப்பிடு" என்றார்.

"அம்மாவா...? அம்மா தங்கத்திலிருந்து வெள்ளியைப் பிரித்து எடுக்க அடுப்பைப் பற்ற வைத்து, உலையேற்ற போய் இருக்கிறார்" எனப் பதில் சொன்னாள்.

ஒன்றும் புரியாமல் மன்னர் மந்திரியைத் திரும்பிப் பார்த்தார். மந்திரி தனக்கும் எதுவும் புரியவில்லை என்பதைப் போலத் தலையை ஆட்டினார். மன்னர் சற்றே கோபமானார். "கடனை அறவிட வந்த இடத்தில் இவள் புதிர் போட்டுப் பேசி நம்மைக் குழப்புகிறாளே. இவளைச் சும்மா விடக் கூடாது, என நினைத்த மன்னர், சிறுமியிடம் மிரட்டும் தோரணையில் பேசினார்.

"நான் யாரெனத் தெரியாமல் என்னிடம் விளையாடுகிறாய்" என்றார் மன்னர்.

"மன்னா, தாங்கள் யாரென நாடே அறியும். தாங்கள் 'ஹரிஹர வம்சம்" என்றாள் சிறுமி.

"மந்திரியாரே! இந்தச் சிறுமி என்னை மிகவும் குழப்புகிறாள். இப்போது வாரும், போகலாம்" என்று சொல்லி இருவரும் புறப்பட்டுச் சென்றனர். மறு நாள் மன்னர் மந்திரியை வரவழைத்துக் கேட்டார். "மந்திரியாரே! அந்தச் சிறுமி நேற்று சொன்ன வார்த்தைகள் என் காதுகளில் ஒலித்துக்கொண்டேயிருக்கின்றன. அவள் சொன்ன புதிர்களுக்கு என்னால் விடை கண்டுபிடிக்க முடியவில்லை. உங்களால் ஏதேனும் கண்டுபிடிக்க முடிந்ததா?" என்று கேட்டார்.

"ஆம் மன்னா! அந்தப் புதிருக்கான விடையைக் கண்டுபிடித்துவிட்டேன்".

"பிரமாதம்! அதைச் சொல்லும் மந்திரியாரே".

"முதல் புதிர். அவளது தந்தை கூரையைப் பழுது பார்க்கப் போய் இருக்கிறார் என்று சொன்னாள். அதாவது வீட்டில் கூரை பழுது அடைந்துவிட்டால், சூரியனின் பார்வை வீட்டுக்குள் விழும். கூரையை மூடி விட்டால் பார்வை விழாது. அதைத்தான் அப்படிச் சொல்லி இருக்கிறாள்" என்றார் மந்திரி.

"சரி... இரண்டாவது?".

அவளது அம்மா நெல்லை அவித்து அரிசியாக்குவதற்கு உலையேற்றும் பணிக்குச் சென்றிருக்கிறாள். அதைத்தான் தங்கத்திலிருந்து வெள்ளியைப் பிரித்தெடுக்கப் போனதாகச் சொன்னாள்.

" நல்ல விளக்கம். மூன்றாவதாக என்னை 'ஹரிஹர வம்சம்' என்று சொன்னாளே. அது என்ன?" என்று கேட்டார் ராஜா.

"மன்னராகிய தாங்கள் நல்லது செய்பவர்களைக் காப்பதும் தீமை செய்பவர்களைத் தண்டிக்கவும் செய்வதால் காக்கவும் அழிக்கவும் செய்யும் கடவுளைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறாள்" என்று மந்திரி விளக்கம் அளித்தார். இதைக் கேட்டதும் மன்னர் மகிழ்ச்சியடைந்தார்.


"மந்திரியாரே! அந்தச் சிறுமியை உடனே அரண்மனைக்கு அழைத்து வர உத்தரவு போடும்" என்று கட்டளையிட்டார். உடனே அந்தச் சிறுமியையும் அவரது தந்தையையும் அரண்மனைக்குக் காவலர்கள் அழைத்து வந்தனர். கடனுக்காக மன்னர் தண்டிப்பாரோ எனச் சிறுமியின் தந்தை பயப்பட்டார். ஆனால், சிறுமியைச் சபைக்கு அழைத்து அவளது திறமையைப் பாராட்டினார். ஏராளமான பரிசுகளையும் கொடுத்தார். பிறகு சிறுமியின் தந்தையிடம் திரும்பி, "முத்தையா! மிகவும் அறிவான குழந்தையைப் பெற்றிருக்கிறாய். அவளது புத்திக்கூர்மையைப் பாராட்டுகிறேன்: நீ வாங்கிய கடனைத் திருப்பித் தர வேண்டாம். சந்தோஷம் தானே முத்தையா" என்று கேட்டார்.




# தீக்கோழி

- பறவைகளில் மிகப் பெரியது தீக்கோழி என்றழைக்கப்படும் நெருப்புக்கோழி.
- நெருப்புக்கோழிகளில் 3 இனங்கள் உள்ளன. இந்தப் பறவை ஏழு அடி முதல் எட்டு அடி உயரம் வரை வளரும். கிட்டத்தட்ட 130 கிலோ எடை வரையில் இருக்கும்.
- கிட்டத்தட்ட 12 கோடி ஆண்டுகளுக்கு முந்தைய நெருப்புக்கோழி எலும்புகளின் படிவங்கள் கிடைத்துள்ளன.
- ஆண் நெருப்புக்கோழிகள் கறுப்பு நிறத்திலும் பெண் நெருப்புக்கோழிகள் பழுப்பு நிறத்திலும் காணப்படும்.
- நெருப்புக்கோழிகளின் கால்களில் 2 விரல்கள் மட்டுமே இருக்கும்.
- நெருப்புக்கோழியால் மணிக்கு 70 வேகத்தில் தொடர்ந்து 45 நிமிடங்களுக்கு ஓட முடியும். மனிதரைக்கூடச் சுமந்துகொண்டு ஓடும் அளவுக்கு வலுவுள்ளது. ஆனால், இந்தக் கோழிக்குப் பறக்கத் தெரியாது.
- பழங்கள், கொட்டைகள், பூச்சிகள், சிறிய ஊர்வன இனங்களை நெருப்புக்கோழி விரும்பி சாப்பிடும்.
- கும்பல் கும்பலாகக் காணப்படும் நெருப்புக்கோழிகளில் பெண் நெருப்புக்கோழிகளே தலைமை வகிக்கும்.
- நெருப்புக்கோழிகள் வால் பகுதியை ஆட்டியும், தலையை அசைத்தும் தங்களுக்குள் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும்.
- உலகிலேயே மிகப் பெரிதாக முட்டை இடுவது நெருப்புக்கோழிகள்தான்.
- முட்டையிலிருந்து 40 42 நாள்களில் குஞ்சுகள் வெளிவரும்.
- நெருப்புக்கோழியின் ஆயுள் காலம் சராசரியாக 45 ஆண்டுகள்.
- உலகமெங்கும் சுமார் 20 இலட்சம் நெருப்புக் கோழிகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளன.

# வர்ணம் தீட்டுவோம்



# சுண்டெலி



சுண்டெலி, சுண்டெலி,
துறுதுறுத்த சுண்டெலி!

பண்டமெல்லாம் கெடுத்திடும்
பானை சட்டி உருட்டிடும்.
கண்ட கண்ட பொருளெலாம்
கடித்து நாசம் செய்திடும்.

பையில் ஓட்டை போட்டிடும்
பணத்தை இழக்கச் செய்திடும்.
கையைக் காலை இரவிலே
கடித்து என்னை எழுப்பிடும்.

சுண்டெலி, சுண்டெலி
துறுதுறுத்த சுண்டெலி.



# வாசிப்பின் முக்கியத்துவம்



பாடப் புத்தகங்களில் உள்ளதைத் தாண்டி உலகம் மிகப் பெரியது. வாசிப்பதன் மூலம் மட்டுமே இந்த உலகின் பல்வேறு நுணுக்கங்களையும், நமக்குப் பிடித்த துறை சார்ந்து ஆழமாகவும், விரிவாகவும் தெரிந்துகொள்ள முடியும்.

எந்தத் துறையும் நமக்கு அவசியமற்றவை என்பதில்லை. பல்வேறு துறைகளைப் பற்றிச் சுவாரசியமாகத் தெரிந்து கொள்ள உதவுபவை புத்தகங்கள். பாடப்புத்தகத்தில் உள்ள ஒரு தகவலைப் பற்றிய கூடுதல் அம்சங்களைப் பல்வேறு புத்தகங்களில் விரிவாக வாசித்துத் தெரிந்து கொள்ள முடியும்.

பாடப்புத்தக வாசிப்பைவிட பிற நூல்களை வாசிக்கும் மாணவர்களுக்குக் கற்பனைத்திறனும் வாக்கியங்களை அமைக்கும் இலாகவமும் கூடிவிடும். கற்பித்தல் என்ற கடமை ஆசிரியர்களுக்கு எளிதாகிவிடும். வெறும் பாடப்புத்தகம் எனும் போது தோன்றும் கடமையுணர்ச்சி, அதைத் தாண்டிய படிப்பு எனும்போது ஆர்வத்தையும் உற்சாகத்தையும் நிரம்ப ஊட்டும். ஆசிரியர்கள் கண்காணிப்பில் அவர்களுடைய வழிகாட்டலில் நல்ல நூல்களைத் தாங்களாகப் படிக்கும் மாணவர்கள், நடந்து செல்லும் மாணவர்கள் மிதிவண்டியை ஓட்டப் பழகும்போது அடையும் மகிழ்ச்சியையும் தன்னம்பிக்கையையும் அடைவார்கள்!

# மன உறுதி கொண்ட சாதனையாளர்களை அரவணைத்திருப்போம்!



## இன்று உலக மாற்றுத் திறனாளிகள் தினம்

மாதவி உமாசுதசர்மா

ஊனால் ஆகிய இந்த உடம்பு மதிப்பு மிக்க பல உறுப்புக்களைக் கொண்டுள்ளது. இவற்றுள் ஏதேனும் ஒன்றிரண்டு குறைபாடுகள் உள்ளவர்களை மாற்றுத்திறனாளிகள்' என்கிறோம்.

ஒரு குழந்தை எந்த இடத்தில், எந்த வீட்டில், எந்த இனத்தில், எந்த மதத்தில் பிறப்பெய்த வேண்டும் என்பதை பிறக்கப் போகும் அந்தக் குழந்தை தீர்மானிப்பதில்லை. பிறப்பு என்பதும், இறப்பு என்பதும் யார் சொல்லியும் நிகழ்வதில்லை. அவை எப்படியோ நிகழ்ந்து விடுகின்றன.



### சமத்துவத்தைக் கடைப்பிடிப்போம்!

உடலில் ஏற்படும் குறைபாடுகளும் அப்படிப்பட்டவையே. விரும்பியோ, விரும்பாமலோ அதை ஏற்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இது பிறப்பாலோ, விபத்தாலோ, வியாதியாலோ பெரும்பாலும் உடலில் குறைபாட்டை ஏற்படுத்துகிறது. கூடாரம் தைப்பவரின் மகனாகப் பிறந்தவர் பாரசீக கவிஞர் உமர்கயாம். இவர் 'கவிதை, கணிதம், ஜோதிடம், வானவியல்' எனப் பல்துறை வித்தகராகத் திகழ்ந்தார். இந்தத் துறைகள் சார்ந்து மாற்றத்தை அறிந்து வெற்றி பெற்றவர். எதையும் ஈடுபாட்டுடன் செய்தமையே அவர் கண்டுகொண்ட வெற்றிக்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது எனலாம். போதையின் மயக்கத்தில் அவர் எழுதிய கவிதைகள் அனைவரையும் கவர்ந்தன.

'பானை பேசுகிறது' என்ற தலைப்பில் மாற்றுத்திறனாளிகள் பற்றி அவர் எழுதிய ஒரு கவிதை பின் வருமாறு அமைந்துள்ளது.

*வளைந்தும்*
*நெளிந்தும்*
*உள்ளதென்று*
*விலகிப் போகின்றனர்*
*அந்த நாள்*
*குயவன் செய்த பிழைக்கு*
*நான் என்ன செய்வேன்?*

இங்கு. எத்தனையோ பானைகளைக் குயவன் செய்கிறான். அவற்றுள் நல்லவற்றைத் தேடி வாங்கிச் செல்கின்றனர். சில பானைகள் வளைந்திருக்கின்றன. சில நெளிந்திருக்கின்றன. அவற்றை ஒதுக்கி வைத்து விடுகின்றனர். அப்படி ஒதுக்கி வைக்கப்பட்ட ஒரு பானை பேசுகிறது என்று அந்தப் பானையின் ஏக்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இது பானையின் ஏக்கம் மட்டுமல்ல, மாற்றுத் திறனாளிக ளின் ஏக்கத்தையும் இந்தப் பானையின் வழியாக உமர்கயாம் பதிவு செய்துள்ளார். இது ஒரு கவிதைப் பார்வை.

### திறனுடைய மனிதங்கள்!

அன்பானவர்களே! ஒரு கதவு மூடினால் இன்னொரு கதவு திறக்கும் என்பார்கள். ஆம் ஒவ்வொருவருக்குள்ளும் இன்னுமொரு மாற்றுத்திறன் மறைந்திருக்கிறது. அதைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். தேடலில்தானே வாழ்க்கையின் வெற்றி அடங்கியுள்ளது. அந்த வெற்றிதான் வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்துகிறது.

ஆம், 'ஊனம்' என்ற சொல்லாடல் கூட இன்று மாறி இருக்கிறது. மாற்றுத்திறனாளிகள் என்று அவர்களை உயர்நிலை பெறச்செய்திருக்கிறது. அவர்கள் ஒருவித உடலியற் குறை பாட்டால் வெளித் தோற்றத்தில் மாறுபட்டவர்களாக இருக்கலாம். ஆனால் மனதால், எண்ணங்களால் அவர்கள் என்றுமே உயர்ந்தவர்கள். மற்றவர்களிடம் இல்லாத 'மன உறுதி' இவர்களிடம் நிறைவாகவே உள்ளது. அந்த உறுதி நிலைபெற்று வாழவேண்டும் என்ற வைராக்கியத்தை ஏற்படுத்துகிறது.

மன உறுதியும் தன்னம்பிக்கையும் தான் வலிகளைத் தாங்கி வாழ்க்கையில் முன்னேற்றகரமான வழிப்படுத்தல்களைத் தந்து சாதனையாளர்களாகச் சாதிக்க வைக்கின்றது.

### ஹெலன் கெல்லர்!

'என் கதை' என்ற புத்தகம் என் கைகளில் அமர்ந்து ஒளி வீசுகிறது. அற்புதம்! ஒளி விலக்கி உள் நுழைந்து பக்கங்களைப் புரட்டுகிறேன். ஒரு குழந்தை! ஒரு வருடமும் ஏழு மாதங்களும் கடந்த ஒரு குழந்தை. ஆம், எதிர்பாராத ஒரு நோயின் தாக்குதலில் பேசுகின்ற, பார்க்கின்ற, கேட்கின்ற சக்தியைப் பறிகொடுத்த சின்னஞ்சிறிய பசுந் தளிரின் கதையாடலாக அது நீள்கிறது. ஒவ்வொரு அடியிலும் போராடி ஒரு புது உலகத்தை வசப்படுத்திக்கொண்ட அற்புதக் கதையாகத் தனித்துவம் பெறுகிறது. உண்மையில் அந்தக் குழந்தை கொடிய நோய் பறித்துக் கொண்ட பேச்சுத்திறனையும், பார்வைத் திறனையும் தனது எழுத்திறனாலும், முயற்சியின் திருவினையாலும் மீட்சி பெறுகின்றது.

அதிசயமே அதிசயித்துப் போகும் அசாத்திய சாதனைக்குரிய அந்தக் குழந்தைதான் "ஹெலன் கெல்லர்" 'தன்னம்பிக்கை, விடாமுயற்சி, துணிச்சல், ஆர்வம், அன்பு, பிரிவு, தேடல்' என அனைத்துவிதமான பேறுகளின் தனித்துவ அடையாளமாகத் திகழ்ந்தார். தான் கொண்ட ஊனத்தை மலை போன்ற மன உறுதியால் வென்றவர். "அசைக்க முடியாத உறுதியும், திடசித்தமும் கொண்டவன் உலகத்தைத் தன் வழியில் தானே உருவாக்கிக் கொள்வான்" என்பார் தத்துவ மேதை 'கதே'. இந்தச் சிந்தனைக்குச் சிகரம் வைத்தாற்போல் வாழ்ந்து சாதனை படைத்த மாற்றுத்திறனாளிகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

### ஸ்டீபன் ஹாக்கிங்!

அறுபத்து மூன்று வயது நிரம்பிய "ஸ்டீபன் ஹாக்கிங்" சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி இருக்க தொலைக்காட்சி நிலையத்துக்கு அவரை செவிலியர்கள் அழைத்து வருகின்றனர். கை, கால், தலை வயிறு என உடலின் எந்தப் பாகமும் செயற்படாத நிலை. நம்பிக்கை இழக்காமல் தனது வலது கண்ணை மட்டுமே அசைத்து எழுத்துக்களை அடையாளம் காட்டினார். பாடம் நடத்தினார். புத்தகம் எழுதுவித்தார். புகழின் உச்சிக்கே சென்றார். தன்னம்பிக்கைப் பயிற்சியாளர் தொலைக்காட்சி நிலையத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு கணினி மூலம் பதிலுரைத்தார்.

'வாழ்க்கை எப்படி இருக்கிறது?" என தொகுப்பாளர் கேட்ட கேள்விக்கு, "முன்பை விடவும் சந்தோசமாகவும், சவால் நிறைந்ததாகவும் உள்ளது" என அவர் பதிலளித்தார். என்ன ஒரு தன்னம்பிக்கை! நம்மில் பலரிடமும் இந்தக் கேள்வியைக் கேட்டால் வாழ்வின் மீதான சலிப்பும்,விரக்தியும் மட்டுமே விதம் விதமான பதில்களாக வெளிப்படும். 'இந்த உடல் நிலையில் உங்களால் சந்தோசமாக இருக்க முடிகிறதா?' தொகுப்பாளர் கேட்க அதற்குப் பதிலுரைத்த 'ஸ்டீபன் ஹாக்கிங்', "எதை இழந்தீர்கள் என்பது முக்கியமல்ல, என்ன மிச்சம் இருக்கிறது என்பதுதான் முக்கியம்!" என்றார்.

### உறுதியையும் முயற்சியையும் கரம் பற்றி நடை பயில்வோம்!

*உள்ளத்தில் உறுதி பூண்டு*
*உடலில் ஊக்கத்தைச் சுமக்கும்*
*உயிர்கள் நாங்கள்!*

*பிறரிடம் நாங்கள் பெறுவது*
*உதவியும் உபசரிப்பும் – ஆனால்*
*பிறர் எங்களிடம் பெறுவது*
*ஊக்கமும், தன்னம்பிக்கையும்!*


*உடலால் மட்டுமே குறைந்த*
*நாங்கள் உள்ளத்தால்*
*உயர்ந்து நிற்கிறோம்!*

உண்மையான உறுதியையும் முயற்சியையும் சமூகத்துக்குக் கற்றுக் கொடுப்பவர்கள் இவர்களே! இதுதான் வாழத் தெரிந்தவர்களின் வழி. திறமைகளைத் தேடிக் கண்டுபிடித்துப் பட்டை தீட்டுங்கள். தோல்வி, பய உணர்வைத் தூர வீசுங்கள். சிறகுகளை விரியுங்கள். பரந்த பூமியும் விரிந்த வானமும் வசப்படட்டும். நம்பிக்கையோடு பயணிப்போம்!

'ஊனம்' என்ற சொல்லாடல் கூட இன்று மாறி இருக்கிறது. மாற்றுத்திறனாளிகள் என்று அவர்களை உயர்நிலை பெறச் செய்திருக்கிறது. அவர்கள் ஒருவித உடலியல் குறை பாட்டால் வெளித் தோற்றத்தில் மாறுபட்டவர்களாக இருக்கலாம். ஆனால் மனதால், எண்ணங்களால் அவர்கள் என்றுமே உயர்ந்தவர்கள். மற்றவர்களிடம் இல்லாத 'மன உறுதி' இவர்களிடம் நிறைவாகவே உள்ளது. அந்த உறுதி நிலைபெற்று வாழ வேண்டும் என்ற வைராக்கியத்தை ஏற்படுத்துகிறது.



## மரண அறிவித்தல்



# தம்பு நடராசா

(முன்னாள் காங்கேசன்துறை சீமெந்துக்கூட்டுத்தாபன ஊழியர்)

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், கோட்டைக்காடு மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் காங்கேசன்துறை சீமெந்துக்கூட்டுத்தாபன ஊழியர் தம்பு நடராசா நேற்று (02.12.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் புஸ்பலீலாதேவியின் (தங்கம்) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தம்பு பூரணம் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து மீனாட்சி தம்பதியரின் அன்புமருமகனும் கசிலராஜா, கஜேந்திரராஜா (பிரான்ஸ்), கஜேந்தினி ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற செல்வராசா (காத்தி) மற்றும் பரமேஸ்வரி, தர்மவதி, குணவதி (இந்தியா), யோகவதி காலஞ்சென்ற அழகுராசா மற்றும் யோகராசா, ஆனந்தராசா ஆகியோரின் அன்புச்சகோதரரும் திருமதி கமலாதேவி, கருணாமூர்த்தி, சந்திராதேவி, கணேசமூர்த்தி, தெட்சணாமூர்த்தி, திருமதி பவானிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2018) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. ஒரு மணியளவில் பூதவுடல் சம்மட்டியான் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 2420 457
021 224 2454

தகவல் :
குடும்பத்தினர்.


## English Literature Classes
முக்கிய அறிவித்தல்

முதலாம் திகதி உதயனில் பிரசுரமாகிய
**K.Subramaniam Sir** இன்
**English Literature Classes**
**IPS** இல் நடைபெறாது.

**Science Guide Centre**
**116/2, Rasavinthoddam Veethy, Jaffna.**

என்ற முகவரியில் நடைபெறும் விளம்பரத்தில் குறிப்பிட்டது போல்
04.12.2018 - 9.00 am முதல் பதிவுகளும்
05.12.2018 - 4.30 pm இற்கு வகுப்புகளும்
புதிய முகவரியில் நடைபெறும்

**T.P.: 077 351 8308, 077 724 4358**
அசௌகரியத்திற்கு வருந்துகின்றோம்

(cs.21539)


## மரண அறிவித்தல்கள்

# பொன்னையா நல்லையா

(ஓய்வுபெற்ற அதிபர்
நல்லூர் ஞானோதய வித்தியாலயம்)



கைதடி நுணாவிலைப் பிறப்பிடமாகவும் அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா நல்லையா (ஓய்வு பெற்ற அதிபர் நல்லூர் ஞானோதய வித்தியாலயம்) நேற்றுமுன்தினம் (01.12.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

(cs 21539)

தகவல் : **பிள்ளைகள், மருமக்கள்.**


**உதயன்**
தொடர்புகளுக்கு
**021 493 1111**
**advt@uthayan.com**


## பதினெட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 17.09.1927 விண்ணில் 22.11.2000

அமரர்

### அருணாசலம் ஆறுமுகம்


(முன்னாள் உப அதிபர், யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை, சமாதான நீதவான்)

திதி - ஏகாதசி

ஆண்டுகள் பதினெட்டு ஆனபோதும் ஐயா!
உங்கள் நினைவுகள் என்றென்றும் நீங்காது ஐயா!
எங்கள் குடும்ப ஒளிவிளக்காய் நீங்கள்
இருந்து ஐயா!
எமக்காக என்றும் ஒளி வீசினீர்கள் ஐயா!
பாசத்தின் உறைவிடமாய் ஊர்போற்றும் உத்தமனாய் ஐயா!
எங்கள் உயர்விற்கு உங்கள் ஆசீர்வாதம் ஐயா! என்றென்றும் வேண்டும் ஐயா!

" ஜெயபதி குடும்பம் "
தாமோதரம் வீதி, சாவகச்சேரி.

## மரண அறிவித்தல்



தோற்றம் 26 . 12 . 1942

மறைவு 30 . 11 . 2018

# சதாசிவம் அருமைநாயகம்

நல்லூர், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கச்சேரி நல்லூரை வசிப்பிடமாகவும் கூமாங்குளம் வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் அருமைநாயகம் கடந்த (30.11.2018) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - தங்கரத்தினம் தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - லட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சுசிலாவின் அன்புக் கணவரும் ரவிச்சந்திரன், வதனி, சிவதர்சினி, முகுந்தன், மேனகா ஆகியோரின் தந்தையும் பவா, சிறிரஞ்சன், நவசீலன், சிவாசினி, பிரசாத் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற தையல்நாயகி மற்றும் மகாலட்சுமி, பரமேஸ்வரி, மகேந்திரன், காலஞ்சென்ற விஜயபாஸ்கரன் ஆகியோரின் சகோதரனும் நரேன், சுரேன், அச்சுதன், சங்கவி, அக்ஷயா, ரிஷிகா, கிருஷாணி, யதுசாளினி, அபிசாளினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2018) திங்கட்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கூமாங்குளம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நிரோஜன் 077 087 9130,**
**முகுந்தன் 076 244 3960, தீபன் 077 890 2974**

தகவல்:
குடும்பத்தினர்.


# சயன்ஸ் அக்கடமி
நல்லூர் - அரியாலை.

## புதிய கல்வியாண்டு - 2019

### தரமான கல்வியுடன் ஆரம்பமாகின்றது!

40 வருடங்களுக்கு மேலான கல்விப் பாரம்பரியத்தில் என்றும் முன்னணியில் திகழும்
எமது நிறுவனம் அனேக பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க
புதிய கல்வியாண்டில் மாணவர்களை இணைத்துக்கொள்கின்றது.
நிகரற்ற சிறப்பான நிர்வாகக் கட்டமைப்பின்கீழ்
முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த வழிகாட்டலில்

தமிழ்மொழி மூல வகுப்புக்கள்.
தரம் 6 முதல் **O/L** வரை

English Medium Classes
Gr. 6 - O/L

**வெற்றித்தேர்வு ஆரம்பக் கல்விப்பிரிவு**
வெற்றித்தேர்வு பரீட்சைகளோடு
வெற்றித்தேர்வு வளவாளர்களுடன்
யாழ். முன்னணி ஆசிரியர்களின் சிறப்பான வழிகாட்டலில்

**தரம் 1 முதல் தரம் 5 வரை**

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

**05.12.2018**
**புதன்கிழமை**
**பி.ப 4.00 மணி**

**அனுமதிகள் வழங்கப்படுகின்றன.**

## கண்ணீர் அஞ்சலி

நெஞ்சம் அழுகிறது
உங்கள் நினைவு நினைத்து

யா/பரிசுத்த புதுமை மாதா ஆலயம் குருநகர், யாழ்ப்பாணம்.

கருவாக
24.03.1929

குருவாக
06.08.1957

தருவாக
29.11.2018



### அமரர் அருட்பணி அ.கி.வேதநாயகம்

(அமலமரித் தியாகி)

எம் பங்கின் முதற்குருவே
அமல மரித் தியாகிகளில் மூத்த குருவே
வேதமே
எம் வேதாந்தமே.
கட்டடக் கலைக்குள்
கடவுளைக் கண்டவரே
ஆலய அமைவுக்குள்
ஆண்டவன் தரிசனம் கண்ட அகல்விளக்கே
இன்று இல்லை
நீர் எம்மோடு
தூய்மையான குருத்துவப் பணி
ஆடம்பரமற்ற ஆண்டவன் பணி
சொத்து
சொந்தம்
அடையாளம் தேடாத
யேசுபணி – உமது பணி

ஆண்டவன் அழைப்பில்
பரிசுத்தம் காத்து
பக்குவமாய் பணி செய்து
அமைதியாய் அவன் காலடியில்
உறங்குகின்றீர் இன்று

**விழிகளை உடைத்து கண்ணீர் சொரிகின்றோம்**

பரிசுத்த புதுமை மாதா ஆலய
பங்குத் திருச்சபை, குருநகர், யாழ்ப்பாணம்.

**பங்குத் தந்தையும்
பங்கு மக்களும்**

(CS/21578)(11,17)

## மரண அறிவித்தல்

தோற்றம்
02 . 08 . 1994



மறைவு
01 . 12 . 2018

### தர்மசேகரம் வசீகரன்

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தர்மசேகரம் வசீகரன் 01.12.2018 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராசா மற்றும் மகேஸ்வரி , காலஞ்சென்றவர்களான சின்னராசா - இராஜேஸ்வரி தம்பதிகளின் அன்புப் பேரனும், தர்மசேகரம் - யோகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், லக்ஸ்மன், தர்சன், கார்த்திகா, தர்ஷிகா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.12.2018) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு வசாவிளான் பட்டியப்புலம் சேமக் காலைக்கு நல்லடக்கத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(CS/21585)(11,17)

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 245 6781**

## 5ஆம் ஆண்டு நினைவேந்தல்

### சாத்தன் சுப்பிரமணியம்



தோற்றம் 15.09.1955
மறைவு 03.12.2013

பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய்
எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு
இனியவனாய்
வாழ்ந்து எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் ஐந்து மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும்
நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**குடும்பத்தினர்.**
கைதடி தெற்கு, கைதடி.

(CS/21584)(11)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் லைற்றர் கந்தசாமி

(சுப்பன் கந்தசாமி)

(யாழ். மாநகரசபை மின்சார திணைக்கள ஊழியர்)



பிறப்பு
24.10.1928

இறப்பு
14.12.2017

ஓராண்டாகியும்
உம் நினைவுகள் எம்மை விட்டு நீங்கவில்லை
உங்கள் நினைவுகளில் மிதக்கின்றோம் – ஐயா...

இன்று (03.12.2018) திங்கட்கிழமை நடைபெறும் மதிய போசன நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வராகி அம்மன் கோயிலடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் இரத்தினம் சரஸ்வதிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



மலர்வு
07.02.1932

உதிர்வு
10.12.2016

கண் இமைத்து விழிக்கவில்லை இரண்டாண்டுகள் சென்று விட்டதம்மா
ஒரு நொடிப்பொழுதும் அழியவில்லை உங்கள் அன்பான நினைவுகள்
எமைவிட்டு அகலவில்லை

இல.19,கனகரட்ணம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(CS/21575)(11,17)

உங்கள் நினைவுகளுடன் வாழும்
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### தம்பிமுத்து இராஜமனோகரன்

ஊரெழு கிழக்கை வதிவிடமாகக் கொண்ட தம்பிமுத்து இராஜமனோகரன் நேற்று (02.12.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான **E.S**.தம்பிமுத்து - பாக்கியம் தம்பதிகளின் அன்புப் புதல்வரும், சாவித்திரிதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை), லோகநாதன் (கண்ணன் - கொழும்பு), சாரதாதேவி, இராஜமனோகரி (ஆசிரியை - ஊரெழு கணேச வித்தியாசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் , காலஞ்சென்ற சந்திரகுமார் மற்றும் மைதிலி (கொழும்பு ) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2018) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் ஊரெழு பொக்கனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்க முன் ஒழுங்கை,
ஊரெழு கிழக்கு.

(CS21576)(11,17)

தகவல்:
**குடும்பத்தினர்.**


## கடைக்கட்டடம் விற்பனைக்கு

நெல்லியடி பிரதான வீதியில் 50 அடி நீளமும் 25 அடி அகலமும் கொண்ட விஸ்தீரணமான கடைக்கட்டடம் விற்பனைக்கு உண்டு. - 077 617 0750

(CS 21589/15/18)

## Group & Personal Classes

### 3D Building Design

பயிற்சி முடிவில் பெறுமதி மிக்க சான்றிதழும் வழங்கப்படும்..

Autodesk 3d max



தமிழ்மொழி மூலமான
விளக்கத்துடன்
விரிவான
செய்முறைகளுடனும்

யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பில்

**0773903123**

Colombo - Wellawatte -Jaffna

## Video Editing

திருமணம்,பூப்புனிதநீராட்டு விழா,பிறந்தநாள்
பயிற்சி முடிவில் 100% வேலைத்திறனுக்கு உத்தரவாதம்
தொலைக்காட்சியில் பணிபுரியும் ஆசிரியரால் கற்பிக்கப்படும்
Adobe Premiere CC,EDIUS 7,After Effect CC, Photo Shop CC

10 Days 20 Hours Video Plugin

Colorcorrection,Adorage Filter,Mask,New blue,Blu ray writing
Skin smooth,Color Upgrading Wedding song Editing Tectnic,

விபரங்களுக்கு - 0773903123

## ES Printers

GRAPHIC design

2019 இற்கான அனைத்து வகையான கலண்டர்களையும் குறைந்த விலையில் செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

அனைத்தும்
தனித்துவமான
கணினி வடிவமைப்புடன்



357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

021 492 7471 / 021 492 7472

esprintersjaffna@gmail.com

நவீன சந்தை, முதலாம் மாடி, சாவகச்சேரி.
021 222 7432



கட்டுரை

சீனிவாச ராமானுஜம்

# சிவாஜி ஏன் மிகை நடிப்பைத் தேர்ந்தெடுத்தார்?

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் நடிப்புப் பாணி 'மிகை நடிப்பு' என்ற விமர்சனம் எப்போதும் உண்டு; அவர் எதிர்கொண்ட பெரும் விமர்சனம் என்றும் அதைச் சொல்லலாம். சரி, சிவாஜியின் மிகை நடிப்பை நாம் எவ்வாறு அர்த்தப்ப்டுத்திக்கொள்ளப்போகிறோம்?

சிவாஜி பலவிதமான நடிப்பு முறைகளை அறிந்தவர். மேற்கத்திய யதார்த்தப் பாணி நடிப்பு வரப்பெறாதவர் அல்ல. ஆனாலும், மிகை நடிப்புப் பாணி என்பது அவரது அடையாளமானது. சொல்லப்போனால், அவரது நடிப்பை விமர்சித்தவர்கள்கூட அவரது படங்களைப் பார்த்து தாரைதாரையாகக் கண்ணீர் வடித்திருக்கக்கூடும் பெண்கள் மட்டுமல்ல; ஆண்களும்கூட.

இன்றும் சிவாஜி படங்களைப் பார்ப்பதற்கு எனக்குப் பெரும் தடையாக இருப்பது நான் கண்டிப்பாக அழுதுவிடுவேன் என்கிற அச்சம்தான். இந்த அழுகை என்னைப் பல காலங்கள் பின்னுக்கு இழுத்துவிடும் என்று அஞ்சுகிறேன். குறிப்பாக, அவரது 'பா' வரிசைப் படங்களைச் சொல்லாம். இந்தப் படங்களில், அவர் ஏற்கும் பாத்திரங்கள் பெரும் துயரத்தை, வலியை அனுபவிக்கின்றன. சுமை, பழி, பொறுப்பு, கடன் எல்லாம் அவர் ஏற்கும் பாத்திரத்தின் மீது சுமத்தப்பட்டிருக்கும். அவற்றையெல்லாம் தாங்கிக்கொண்டு அந்தப் பாத்திரங்கள் தம்மை நிலைநிறுத்திக்கொள்கின்றன; மீண்டுவருகின்றன.



**போலச்செய்தல்தானே நடிப்புக்கான வரையறை?**

நடிப்பு என்பது அடிப்படையில் பிரக்ஞைபூர்வமாகப் போலச்செய்தல். தான் ஏற்கும் பாத்திரத்தை ஒரு நடிகர் போலச்செய்கிறார். சிவாஜி இத்தகைய பாத்திரங்களை ஏற்கும்போது, எதைப் போலச்செய்கிறார் என்பதுதான் கேள்வி. சிவாஜியின் பாத்திரங்களின் உளவியல்ரீதியான வெளிப்பாட்டைப் போலச்செய்ய முயற்சிக்கிறார் என்ற புரிதலிலிருந்துதான் அவரது நடிப்பை மிகை நடிப்பு என்கிறோம்.

ஆனால், சிவாஜி பாத்திரங்களின் உளவியலைப் போலச்செய்யவில்லை. மாறாக, சுற்றத்தாரை, குடும்பத்தை, உறவை, சமூகத்தை, தேசத்தை முன்னி லைப்படுத்தி அதற்காக எத்தகைய வேதனையையும், வலியையும் ஏற்றுக்கொள்ளும் மனநிலையைப் போலச்செய்கிறார். இது உளவியல் பூர்வமானதல்ல என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

**எதிர்மறையாகவே அணுக வேண்டியதா துயரம்?**

வலி, வேதனை, துயரம் போன்றவை பொதுவாக எதிர்மறையாகப் பார்க்கப்படுகின்றன. உடலில் உள்ள நோயை வெளியேற்றுவதுபோல் உடல், உள்ளத்திலிருந்து வலி, வேதனைகளையும் வெளியேற்றுவதே நேர்மறையானதாக நம் மனதில் இருக்கிறது. ஆனால், வலி என்றால் என்ன?

வலி எதிர்மறையானது மட்டும்தானா? வலி தனிமனித அனுபவத்துக்குள் சுருங்கிவிடக் கூடியதுதானா? வலிக்கு முகமை என்று ஒன்று இல்லையா? இத்தகைய கேள்விகளை நாம் கேட்டுக்கொள்ள வேண்டியுள்ளது.

நாம் வலியை, துயரத்தைப் பார்க்க முடியாது. தீண்ட முடியாது. ருசிக்க முடியாது. அதற்குப் பருமனான பண்புகள் ஏதும் கிடையாது. ஆனாலும் துயரத்தை, வலியை அனுபவிக்கிறோம். வலி, வேதனை எப்போது அனுபவமாகிறது? "ஒரு துயரர் அவரது வலியை மொழியாக்கம்செய்து, துயரத்தை ஒரு சமூக உறவாக மாற்றும்போது அது அனுபவமாகிறது" என்கிறார் மானுடவியலாளர் தலால் அசாத்.



**மிகை தவிர்க்க முடியாமல் போகும் இடம்**

ஒரு துயரர் அவர் அனுபவிக்கும் துயரத்தின் ஊடாக சமூகத்துடன் உறவை உருவாக்கிக்கொள்கிறார்; அர்த்தப்படுத்துகிறார். வலி, வேதனை போன்றவை தனிமனித இயலாமை சார்ந்தவை அல்ல. உதாரணமாக, கீழே விழுந்து விட்ட அவரது குழந்தை யைக் கண்டு ஒரு தாய் பதறி ஓடிவருகிறார். ஒரு தாயாக இருப்பதால் மட்டுமே அவர் ஓடிவரவில்லை. ஓடிவருவதன் மூலமாகத் தாய் என்ற உறவையும் அவர் பலப்படுத்துகிறார்; உத்தரவாதப்படுத்துகிறார்.

இத்தகைய வெளிப்பாடுகளில் மிகை தன்மை தவிர்க்க முடியாததாகிறது. ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தின் மக்களின் வலியை, வேதனையை அர்த்தப்படுத்திய பெரும் கலைஞன் சிவாஜி. ஸ்டானிஸ்லாவிஸ்கியின் 'மெதட் ஆக்டிங்' முறையை சிவாஜி முழுமையாக அறிந்திருந்தாலும், எலிசபெத் நடிப்பு பாணியை அவரது தனித்த பண்பாக வரித்துக்கொண்டார்.

எலிசபெத் நடிப்பு பாணியில் ஒரு நடிகர் தன்னை முழுமையாக இழக்க வேண்டியிருக்கிறது.

நடிப்பு என்பது போலச்செய்தல் என்பதைத் தற்காலிகமாகவேனும் மறக்க வேண்டியுள்ளது. இதில் தனிமனிதனின் நுட்பமான உளவியலைக் காட்டிலும் கூடுதலாக ஏதோ ஒன்றை அது கொண்டிருக்க வேண்டியுள்ளது. இந்த இடத்தில் தான் அர்ப்பணிப்பைப் போலச்செய்தார் சிவாஜி.

தான் ஏற்கும் பாத்திரத்துக்கும் தனக்கும் இடையேயான இறுக்கத்தைக் காட்டிலும், அவர் ஏற்ற பாத்திரத்துக்கும் மக்களுக்கும் இடையேயான இறுக்கத்தைப் முதன்மைப் படுத்தினார் சிவாஜி. அவர் தமிழ் மக்களிடம் பெற்ற பெரும் அங்கீகாரம் அவர்கள் உள்ளார்ந்து அனுபவித்த, அவர்களுக்குள் தக்கவைத்துக்கொள்ள முடியாத வலியை எல்லாம் திரையில் சிவாஜி என்ற பெரும் கலைஞன் ஊடாக சாதகமாக ஒன்றாக மாற்றி மகிழ்ந்தார்கள் என்பதுதான்.

**வலியைச் சமூக உறவாக்கியவர்**

வலியும் வேதனையும் அந்தரங்கமானவை அல்ல; அவை எப்போதும் சமூக உறவுக்கானது என்று விட்டிங்கென்ஸ்டைன் சொன்னதையே சிவாஜி அவரது நடிப்பு பாணியாக மாற்றினார். அவரது நடிப்பு தேசத்தின் மீதும், சமூகத்தின் மீதும், அரசாங்கத்தின் மீதும், குடும்பங்கள் மீதும், தனிமனித உறவுகள் மீதும், மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைகளையும் அதற்காக எத்தகைய வலிகளையும் ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் வெகுஜன உளவியல் இருந்த ஒரு காலகட்டத்தின் வெளிப்பாடு. இது அவருக்கு முன்னும் சாத்தியமில்லை பின்னும் சாத்தியமில்லை. சுருக்கமாகச் சொல்வதென்றால், சிவாஜியின் நடிப்பு மிகை பாணியிலானது அல்ல. அது ஒரு காலக்கட்டத்தின் தேவை. அதை மிகச் சிறப்பாக நிறைவேற்றியதன் மூலமே சிவாஜி பெரும் கலைஞனாகத் நிகழ்கிறார்!

நன்றி: ஹிந்து

காணவில்லை




சிவகடாட்சம் சிவடேந்திரன்
(கோண்டாவில் கிழக்கு) கடந்த
(01.12.2018) அன்று யாழ். போதனா
வைத்தியசாலை சென்ற போது
தவறியுள்ளார். இவர் பற்றிய தகவல்
தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
திருமதி சி.சுதர்சினி
(இலங்கை மின்சார சபை,
யாழ்ப்பாணம்)
021 205 3936, 077 3628 318

# 'நெல்லி'

## ஊட்டச் சத்துக்களை உடைய கனி

கு.க.கவிதா



வேறு கனிகளில் இல்லாத அளவுக்கு விற்றமின் 'சி' உடையது நெல்லிக்கனி. இவை இலையுதிர் காடுகளில் அதிகம் காணப்படுகின்றன. தவிர



இது தருகின்ற அருமையான கனிகளுக்காகத் தோட்டங்களிலும் வீடுகளிலும் வளர்க்கப்பட்டு வருகிறது.

**தாவரவியல் பெயர்** : 'பில்லாந்தஸ் எம்பிலிகா அஃபீசினாலிஸ்'

**தாவரக் குடும்பம்** : 'யுபோர்பியேசி'

**வளர்ச்சியும் அறுவடையும்**

நெல்லி மரம் 8 தொடக்கம் 12 மீற்றர் உயரம் வரை வளரக்கூடியது. அடிமரம் 45 செ.மீ அளவுக்குப் பருத்து சிறிது உயரத்தில் கிளைகளைப் பரப்பிக் கொண்டு, ஓரளவுக்கு அடர்ந்து காணப்படும். பட்டை கருமைச் சாம்பல் நிறத்தில் சொரசொரப்பாக இருக்கும்.

புதுத்தளிர்கள் உருவாக ஆரம்பித்ததும் அதன் சந்துகளிலிருந்து பூக்களும் தோன்ற ஆரம்பிக்கும். இலங்கையைப் பொறுத்தவரையில் நெல்லிமரங்கள் ஆண்டுக்கு இரு முறை பூக்கின்றன.

பெப்ரவரியில் ஒரு முறையும், ஜூலையில் மற்றொரு தடவையும் பூக்கும். ஆனால் பெப்ரவரியில் அதிக அளவு காய்கள் உருவாவதில்லை. ஜூலை மாத காலப்பகுதியில் அதிகளவான காய்கள் கிடைக்கின்றன.

**பயன்**

தழை, கால்நடைகளுக்கு உணவாகின்றது. தழையை எருவாகவும் பயன்படுத்துகின்றனர். தழையில் 25 சதவீதம் டானின் உள்ளது. தழையிலிருந்து சாயப்பொருள்கள் தயாரிக்கலாம்.

மரப்பட்டையில் 8 தொடக்கம் 9 சதவீதம் அளவில் டானின் உள்ளது. சிறு கிளைக்குரிய பட்டையில் 21 சதவீதம் அளவில் டானின் உள்ளது. இதைப் பயன்படுத்தி தோலைத் திறம்படப் பதனிடலாம். மற்றும் தோலுக்குச் சிவப்பு, கருமை நிறமும் ஏற்படும்.

கனியில் விற்றமின் 'சி' அதிக அளவில் உள்ளது. நெல்லிக்கனியிலுள்ள விற்றமின் 'சி' சத்து 100 கிராம் சதையில் 720 மில்லி கிராம் வரை சில கனிகளில் இருக்கும்.

கடலில் பயணம் செய்வோரும் நெல்லிக்கனிப் பொடியை உணவுடன் கலந்து உண்டால் கடல் நோய் (sea sictness) வராது. நெல்லிக்கனியில் அதிகளவான பெக்டினும் உள்ளது. நெல்லிக்கனியுடன் கடுக்காயையும் சேர்த்து தோல் பதனிட உபயோகிக்கின்றனர்.

நெல்லிக்காயிலிருந்து எழுதும் மையும், சாயப்பொருளும் தயாரிக்கலாம். காயிலிருந்து எடுக்கப்படும் ஒருவித எண்ணெய் தலை முடியை வளர்க்கும் எனக் கருதப்படுகிறது. பக்டீரியா நாசினியாகச் செயல்படும் திறனையும் இது கொண்டுள்ளது.

நெல்லி விதையில் புரதத்தையும் கொழுப்பையும் சிதைக்கும் என்ஸைம்கள் உள்ளன. மரத்துண்டுகளையும், கிளைகளையும் கலங்கிய நீரில் போட்டு வைத்திருந்தால் அதாவது கிணறுகளில் நீர் தெளிந்துவிடும். மற்றும் உப்பு நீரில் உப்பின் கடுமையைக் குறைத்துவிடும்.

மரத்தைத் தவிர, இதர பகுதிகள் அனைத்தும் மருத்துவப் பயன்களுடையவை. இலைக்கொழுந்தை சீதக், கழிச்சலுக்குக் கொடுக்கலாம்.

நெல்லிப்பூ குளிர்ச்சியுண்டாக்கி, மலமிளக்கி ஆகிய பண்புகள் கொண்டது. நெல்லிவேர் வாந்தி, சுவையின்மை ஆகியவற்றைக் குணப்படுத்தும். நெல்லிக்கனி குளிர்ச்சியுண்டாக்கி, சிறுநீர் பெருக்கி, மளமிலக்கி, உரமாக்கி ஆகிய பண்புகளையும் விற்றமின் 'சி'யையும் கொண்டுள்ளது. ஆஸ்துமா, பித்தம், சளி ஆகியவற்றைக் குணப்படுத்தும் திறனை நெல்லி விதை கொண்டுள்ளது. ■



# 'பலாமரம்'

## முக்கனி முதல்வன்

தமிழ் மக்கள் குறித்துரைக்கின்ற 'முக்கனிகளில்' ஒன்றெனப் பெருமையுடைய பலா, சுவைமிக்க கனிகளைத் தருவதுடன், ஆடுகளைக் கொழுக்க வைக்கும் தழை. இசைக் கருவிகளுக்கான மரம், கறியாகச் சமைத்திடப் பிஞ்சு மற்றும் விதை, மருத்துவப் பயனுடைய பல்வேறு பகுதிகள் ஆகிய அனைத்தையும் உடையது.

**தாவரவியல் பெயர்** : 'ஆர்டோகார்பஸ் ஹெட்டிரோஃபில்லஸ்'

**தாவரக் குடும்பம்** : 'மோரேசி'

பலாவின் தாயகம் இந்தியாவாகும். இலங்கையில் இவற்றின் பயிரிடலும் அறுவடையும் அதிகமாகவே பயன்கொள்ளப்படுகின்றன.

பலா ஒரு பசுமை மாறா மரம். வறண்ட இடங்களிலும் கூட முழுமையாக இலையுதிர்த்திடாது ஓங்கி உயர்ந்து 10 தொடக்கம் 20 மீற்றர் வரை வளரக்கூடியது. ஈரச் செழிப்புள்ள மணற்பாங்கான நிலங்களிலும் மலைச் சரிவுகளிலும் உயர்ந்து வளரும்.

**பயன்**

தழை கால்நடைகளுக்கு உணவாகின்றது. இலைகளில் சைகிளோ ஆர்பினோன், சைகிளோ ஆர்டநோல், பீடாஸ் பிரோஸ் பிரால், டானின்கள் ஆகியவை உள்ளன.

பலாப்பிஞ்சை காய்கறியாகச் சமைத்து உண்ணலாம். காய்களில் உள்ள பாலில் சைக்ளோ ஆர்பினோன், சைக்ளோ ஆர்டனால், பீடா சிடோஸ்டிரால், ப்யூடிரோஸ் பெர்மால் மற்றும் பல அமினோ அமிலங்கள் உள்ளன.

பலாக்கனியில் 29 சதவீதம் அளவில் உண்ணக்கூடிய சுளைப் பகுதி, 12 சதவீதம் அளவில் விதை, 59 சதவீதம் அளவில் மேல் தோலுடன் கூடிய சக்கைப் பகுதி ஆகியவை உள்ளன. பலாச் சுளைகளை நேரடியாக உண்பதுடன், அதிலிருந்து சிரப், ஜாம், ஜெல்லி முதலியனவும் செய்யலாம்.

பலாத் தோல்ச் சக்கையும் பயனுடையதே. இதிலிருந்து 0.03 சதவீதம் நறுமணமுடைய உலர்தைலம் தயாரிக்கலாம். பலாக்கொட்டை நல்லதொரு உணவாகும். மலைவாசிகள் கொட்டையை மாவாக்கி உண்பர்.

பலாவின் காயிலிருந்தும், மரத்திலிருந்தும் பால் எடுக்கலாம். மரத்துப் பால் பக்டீரியாக் கிருமிகளைத் தடுக்கும் திறனைக் கொண்டுள்ளது. அதிலும் குச்சிகளில் இருந்து வெளிப்படும் பாலில் இந்தத் திறன் நான்கு மடங்காக உள்ளது.

வேரில், 'பீடா ஸ்டிரோஸ்பிரால், அர்சோலிக் அமிலம், பெடுலினிக் அமிலம், சைகிளோ ஆர்பினோன், ஆர்டோஃபிளேவானோன்' ஆகியவை உள்ளன. வயதான மரங்களின் வேர்களைக் கொண்டு படச் சட்டங்கள் தயாரிக்கின்றனர்.

மரம் வீணை, தம்புரா முதலிய இசைக் கருவிகள் செய்ய ஏற்றது. கோப்பித்தோட்டங்களில் நிழல் மரமாகப் பயிரிட ஏற்றதாகும். ■



## அமைதிவாழ்வு....

கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்கள மக்களும் சரி இராணுவமும் சரி தமிழ் மக்களுடன் நல்லிணக்கத்துடன் வாழவே விரும்புகின்றார்கள். போருக்கு முன்னரான காலப் பகுதியில் தமிழ் சிங்கள மக்கள் ஒற்றுமையுடன் நட்புடன் வாழ்ந்தார்கள். போர்க் காலத்தில் துன்பட்ட தமிழ் மக்களின் வாழ்வை இன்பமான வாழ்வாக மாற்றுவது எமது பொறுப்பாகும்.

இவ்வாறே தொடர்ந்து அமைதியான வாழ்வை வாழ வேண்டும் என்று தமிழ் மக்களைக் கேட்டுக் கொள்கின்றேன். இந்த அமைதியான வாழ்வு மீண்டும் மாறுமாயின், பொலிஸாரும், இராணுவத்தினரும் வீதியோரங்களில் சோதனைச் சாவடிகளை அமைத்து வீதியில் செல்வோரை வழிமறித்து சோதனை செய்யும் பழைய காலம் மீண்டும் வரும். அதனால் இந்த அமைதியான வாழ்வை வாழ வேண்டும்.

அதேபோல இராணுவத்தினருடன் இணைந்து ஒற்றுமையாக தமிழர்கள் வாழ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அமைதியை யாராவது ஒருவர் குலைக்க விரும்பினால் அவர்களுக்கு தமிழ் மக்கள் தைரியம் கொடுக்காது அவர்களை வலுவிழக்க செய்து இந்த நாட்டின் அமைதியைப் பேணுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நான் கூறுவதை நம்புங்கள். நான் எனது மனதில் தோன்றுவதைச் சொல்கிறேன். அதனால் நாம் ஒன்றுபட்டு ஒற்றுமையாக வாழ்வோம். நாம் இந்த வேலை திட்டத்தை மேற்கொண்டு எதிர்காலத்தில் அரசியல் நோக்குடன் வாக்குக் கேட்டு செய்யவில்லை. யாழ்ப்பாணத்தில் வாழும் தமிழர்கள் அன்புடன் வாழ வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் - என்றார். (5,37)

## தமிழ்...

அமைவாக புதிய அரசமைப்பை நிறைவேற்றுவேன். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் ரணில் விக்கிரம சிங்கவைச் சந்தித்த வெளிநாட்டு ஊடகம் ஒன்றின் இலங்கைச் செய்தியாளருக்கு வழங்கிய சிறப்பு நேர்காணலிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அரசியல் சாணக்கியம் மிக்கவர்; தீர்க்கதரிசனமான தலைவர். எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் அமர்ந்திருந்தாலும் நாட்டின் நலனைக் கருத்தில்கொண்டு எம்முடன் ஒத்துழைத்துச் செயற்பட்டு வருகின்றார். இதனால் அவர் மீதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீதும் தமிழ் மற்றும் சிங்கள இனவாதிகள் கடும் விமர்சனங்களைத் தொடுத்து வருகின்றனர். நல்லதைச் செய்தால் விமர்சனங்கள் இருக்கத்தான் செய்யும்.

ஐக்கிய தேசிய முன்னணி மீண்டும் ஆட்சியமைக்க இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழு ஆதரவை வழங்குவதாகப் பகிரங்கமாக அறிவித்துள்ளது. இது தொடர்பில் அரச தலைவருக்கும் கூட்டமைப்பினர் எழுத்து மூலம் அறிவித்துள்ளார்கள். இதனைப் பொறுக்க முடியாத ராஜபக்ச அணியினர் இனவாதக் கருத்துக்களை வெளியிடத் தொடங்கிவிட்டனர். சில ஊடகங்களும் இதற்குத் துணைபோகின்றன.

தமிழீழம் மலரப் போகின்றது என்று மகிந்த ராஜபக்ச அணியினர் கூக்குரல் இட்டாலும் நாம் எதையும் பொருட்படுத்தமாட்டோம். தமிழ், சிங்கள, முஸ்லிம் ஆகிய மூவின மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு புதிய அரசமைப்பை உருவாக்கி நிரந்தர அரசியல் தீர்வை வழங்குவதே எமது இலக்கு. இதைத்தான் தமிழீழம் என்று ராஜபக்ச அணியினர் புலம்புகின்றனர். அரசியல் அரங்கில் தங்கள் பெயர்களைத் தக்கவைத்துக் கொள்வதற்காக அவர்கள் இவ்வாறு வதந்திக் கதைகளைக் கட்டவிழ்த்து விடுவார்கள். இதைப் பற்றி அலட்டிக்கொள்ளாமல் நாம் இருக்க வேண்டும். நாட்டு மக்களுக்கு உண்மை நிலைவரம் தெரியும்.

நாட்டு மக்களின் ஆணையை மீறி நாம் செயற்படமாட்டோம். பதவியில் நீடிப்பதற்காக, குருதிக் கறை படிந்தவர்களின் கைகளைப் பிடித்து வாக்களித்த மக்களுக்கு நாம் துரோகமிழைக்கவும் மாட்டோம் என்று தெரிவித்துள்ளார். (5)

## மீண்டும்...

சிறிசேனவிடம் முன்வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இரவு இடம்பெற்றது. ஐக்கிய தேசிய முன்னணியுடனான சந்திப்புக்கு நேற்று நேரம் ஒதுக்கப்பட்டிருந்தபோதும் அதனை இன்று வரை ஒத்தி வைத்த அரச தலைவர், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அவசரச் சந்திப்பை நடத்தினார்.

இந்தச் சந்திப்பின்போது, மகிந்த தலைமையிலான அரசு தொடர்பில் அதிருப்தியில் உள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து இடைக்கால கூட்டு அரசு அமைப்பதற்கான யோசனையை அரச தலைவர் மைத்திரிபாலவிடம் முன்வைத்துள்ளனர். அரச தலைவர் இதற்கு இணக்கம் வெளியிடவில்லை என்று கூறப்படுகின்றது. (5)

## அபிவிருத்தி...

தெரியும். வடக்கு கிழக்கு மக்களுக்கு அபிவிருத்தி அவசியமா அல்லது நாடு பிளவுபட வேண்டுமா என்பதை அவர்களே தீர்மானிக்க வேண்டும். இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது ஆட்சியைப் பலமாக அமைத்தவுடன் ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்வதே முதல் நடவடிக்கை. நாட்டில் இடம்பெற்ற மிகப் பெரிய ஊழலான மத்திய வங்கி ஊழல் குற்றத்தில் முதல் குற்றவாளி ரணில் விக்கிரமசிங்கவே. அவரை கைவிலங்கு போட்டுச் சிறையில் அடைப்போம்.

நாடாளுமன்றத்தைக் கலைத்தமைக்கு எதிராக நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கின் தீர்ப்பை எதிர்பார்த்துள்ளோம். தீர்ப்பு எமக்குச் சாதகமாக அமைய வேண்டும் என்பதே எமது வழிபாடு. ஒருவேளை நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை தவறென தீர்ப்பு வந்தால் அப்போதில் இருந்து ஆட்சியை கையில் எடுத்துக்கொள்வோம் - என்றார். (5)

## கூட்டமைப்பு...

அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் கடந்த வெள்ளிக் கிழமை இரவு சந்திப்பு நடைபெற்றது. தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் கூட்டமைப்பால் சந்திப்பின்போது சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் திங்கட் கிழமை (இன்று) சட்டமா அதிபர் மற்றும் பாதுகாப்புத் தரப்பினருடன் பேச்சு நடத்த இருப்பதாகவும் அதில் கலந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுத்திருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்றைய சந்திப்பில் பங்கேற்கவுள்ளனர். (5)

## வடக்கில்...

தோற்றுகின்றனர். பாடசாலைப் பரீட்சார்த்திகள் 25 ஆயிரத்து 942 பேரும், தனியார் பரீட்சார்த்திகள் 19 ஆயிரத்து 396 பேரும் பரீட்சை எழுதவுள்ளனர்.

இன்று ஆரம்பமாகும் பரீட்சைக்கு வடக்கு மாகாணத்திலிருந்து தோற்றும் அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் சிறந்த பெறுபேறுகள் கிடைக்க மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 162 பரீட்சை நிலையங்களில், பாடசாலைப் பரீட்சார்த்திகள் 13 ஆயிரத்து 293 பேரும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக 9 ஆயிரத்து 306 பேருமாக, 22 ஆயிரத்து 591 பேர் தோற்றுகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 48 பரீட்சை நிலையங்களில், பாடசாலைப் பரீட்சார்த்திகள் 3 ஆயிரத்து 842 பேரும், தனியார் பரீட்சார்த்திகளாக 2 ஆயிரத்து 176 பேருமாக, 6 ஆயிரத்து 18 பேர் தோற்றுகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 36 பரீட்சை நிலையங்களில், பாடசாலைப் பரீட்சார்த்திகள் 2 ஆயிரத்து 936 பேரும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக ஆயிரத்து 894 பேருமாக, 4 ஆயிரத்து 830 பேர் தோற்றுகின்றனர்.

வவுனியா மாவட்டத்தில் 51 பரீட்சை நிலையங்களில், பாடசாலைப் பரீட்சார்த்திகள் 2 ஆயிரத்து 622 பேரும், தனியார் பரீட்சார்த்திகளாக 3 ஆயிரத்து 235 பேருமாக, 6 ஆயிரத்து 857 பேர் தோற்றுகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் 36 பரீட்சை நிலையங்களில், பாடசாலைப் பரீட்சார்த்திகள் 2 ஆயிரத்து 249 பேரும், தனியார் பரீட்சார்த்திகளாக 2 ஆயிரத்து 785 பேருமாக, 5 ஆயிரத்து 34 பேர் தோற்றுகின்றனர். (5,105)

## கூட்டமைப்பு - ரணில்...

கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த ராஜபக்சவினுடைய ஆட்சிக் காலத்தில் புலிகளுக்கு பணம் வழங்கப்பட்டதா என்பது குறித்து எனக்குத் தெரியாது. ஆனால் அது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. அந்த விடயம் இது வரையில் நிரூபிக்கப்படவில்லை. முடிந்தால் ஐக்கிய தேசியக் கட்சி அதனை நிரூபித்துக்காட்டட்டும்.

1989 மற்றும் 1990ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில், இப்போது ரணிலின் ஆலோசகராக உள்ள ஆர்.பாஸ்கரலிங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இலட்சக்கணக்கான பணத்தை வழங்கினார். அதற்கான ஆதாரம் எம்மிடம் உள்ளது. ஆரம்ப காலங்களிலிருந்தே இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டமையாலேயே நாட்டின் பொருளாதாரம் உறுதிப்பாடற்ற நிலமையை இன்று எதிர்கொண்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி வழங்கிய காரணத்தால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஐ.தே.க.வுடன் கைகோர்த்துள்ளனர் - என்றார். (5)

## மைத்திரி...

தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், ஐக்கிய தேசிய முன்னணிக்கும் இடையில் கடந்த வெள்ளிக் கிழமை இரவு சந்திப்பு இடம்பெற்றிருந்தது. ரணில் விக்கிரமசிங்கவை தலைமை அமைச்சராக மீண்டும் நியமிக்க மாட்டேன் என்று அரச தலைவர் இந்தச் சந்திப்பில் உறுதிபடத் தெரிவித்திருந்தார். இந்த நிலையில், இந்த விவகாரம் குறித்து மீண்டும் ஞாயிற்றுக் கிழமை (நேற்று) சந்தித்துப் பேச்சு நடத்துவதாக இருந்தது.

இந்த நிலையில் நேற்று மாலை திடீரென சந்திப்பு ஒத்திவைக்கப்பட்ட அறிவிப்பு வெளியானது. என்ன காரணத்துக்காக சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டது என்ற தகவல் வெளியிடப்படவில்லை. ஒத்திவைக்கப்பட்ட சந்திப்பு இன்று இரவு 8 மணிக்கு அரச தலைவர் செயலகத்தில் இடம்பெறும் என்று கூறப்படுகின்றது. (5)

## தமிழ்க்...

கூட்டமைப்பின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் குறிப்பிட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சி அமைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் 14 பேரும் கையெழுத்திட்டு அரச தலைவருக்கு கடிதம் அனுப்பியிருந்தனர். கூட்டமைப்பு ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்த பின்னர், கடந்த வியாழக்கிழமை இரவு ரணில் விக்கிரமசிங்கவுடன் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேச்சு நடத்தினர். ரணிலுடனான சந்திப்பின் பின்னர், கடந்த வெள்ளிக்கிழமை இரவு அரச தலைவர் மைத்திரிபாலவுடன் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேச்சு நடத்தினர்.

இந்த இரண்டு சந்திப்புக்களின்போதும், போர்க்குற்ற விசாரணை தொடர்பில் கூட்டமைப்பு பேச்சு நடத்தவில்லை என்று நேற்றுச் செய்தி வெளியாகியிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் முகநூலில் இது தொடர்பில் கருத்துப் பதிவிட்டிருந்தார். ஐக்கிய தேசியக் கட்சியுடனான சந்திப்பில் போர்க்குற்ற விசாரணை தொடர்பில் பேசப்பட்டதாகவும், அதற்கு ரணில் பதில்களை வழங்கியிருந்ததாகவும் குறிப்பிட்டிருந்தார்.


யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்ற கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனிடம், போர்க்குற்ற விசாரணை தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர், அரசியல் நெருக்கடி தொடர்பாகத் தென்னிலங்கையுடன் பேசும்போது தமிழ் மக்களின் இனப்பிரச்சினை சார்ந்தே பேசினோம். எந்தச் சந்தர்ப்பத்திலும் போர்க்குற்ற விசாரணை தொடர்பாகப் பேசவில்லை. ஒரு நிலையான அரசு அமையும்போதே நாம் அதைப் பற்றிப் பேசமுடியும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றுவதில் இலங்கை அரசின் வேகம் குறைவாக உள்ளது - என்றார். (5,8)

## ஏ.ரி.எம்மில்...

சாவகச்சேரி நகரில் உள்ள வங்கியொன்றில் இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபர் வங்கியின் பணப் பரிவர்த்தன இயந்திரத்தை உடைத்து பணம் எடுக்க முற்பட்ட போது, இயந்திரம் அபாய ஒலியினை வங்கியின் தலைமையகத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளது. வங்கித் தலைமையகத்தால் பொலிஸாருக்கு தகவல் அனுப்பவே பொலிஸார் அங்கு சென்றனர். பொலிஸாரைத் தாக்கிவிட்டு சந்தேகநபர் அங்கிருந்து ஓடி அவ்வழியே வந்த பேருந்தில் ஏறி தப்ப முயன்றார். துரத்திச் சென்ற பொலிஸார் பேருந்தை நிறுத்தி சந்தேக நபரைக் கைது செய்தனர்.

திருகோணமலையைச் சேர்ந்த அவரை சாவகச்சேரி பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்ற நீதிவானின் இல்லத்தில் நேற்று முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் சந்தேக நபரை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (5,9)



## நோய் எதிர்ப்பு சக்தி தரும் விளாம்பழம்

விளாம்பழம் தசை வளர்ச்சி மற்றும் உடல் வளர்ச்சிக்குத் தேவையான சத்துக்களை தருகிறது. குருதியைச் சுத்தம் செய்கிறது. ஜீரணசக்தியைமேம்படுத்துகிறது. பசியை அதிகரிக்கிறது. பித்தம் அதிகரிப்பதால் தலைவலி, கண் பார்வை மங்கல், இளநரை, ருசியின்மை போன்றவை ஏற்படும். அவைகளைஇந்தபழம்போக்கும். இதில் புரதமும், தாது சத்துகளும் அதிகம் உள்ளதால், எலும்புகளை உறுதியாக்கும். ஞாபக சக்தியை மேம்படுத்தும். இதை ஒரு சிறந்த ஊட்டச்சத்து உணவாகப் போற்றலாம்.

### என்....

சேர்த்து எரித்து விடாதீர்கள் என்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா நகர சபையின் ஏற்பாட்டில் எழு நீ விருது வழங்கும் நிகழ்வு வவுனியா நகர சபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வு தொடர்பான ஏற்பாட்டுக் குழுவிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விலகுவதாக அறிவித்திருந்தனர். விக்னேஸ்வரன் இந்த நிகழ்வுக்கு அழைக்கப்பட்டமைக்கு அவர்கள் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர். இவ்வாறானதொரு நிலையில் நிகழ்வு இடம்பெற்ற வவுனியா நகர சபை மண்டபத்துக்கு நேற்றுக் கடும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. சிறப்பு அதிரடிப்படையினரும் பாதுகாப்பு வழங்கியிருந்தனர்.

விக்னேஸ்வரனுக்கு எதிராக வவுனியாவில் அவரது உருவப் பொம்மை எரித்து எதிர்ப்பு வெளியிடப்படும் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. ஆனால் வவுனியாவில் அவ்வாறான எந்தச் சம்பவமும் இடம்பெறவில்லை. முன்னாள் முதலமைச்சர் நேற்று அங்கு ஆற்றிய உரையில் முக்கியமாகத் தெரிவித்ததாவது,

இன்று காலை எனக்குப் பல தொலைபேசி அழைப்புக்கள் வந்தன. வவுனியாவில் நடைபெறும் இந்தக் கூட்டத்துக்கு முன்னர் ஒரு கட்சி சார்ந்தோர் எதிர்ப்புத் தெரிவித்து எனது உருவ பொம்மையை எரிப்பதற்கு ஆயத்தம் செய்வதாகச் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் எனக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் அந்தக் கட்சியைச் சார்ந்தோர் ஒன்றை மட்டும் நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும். என்னுடைய உருவ பொம்மையை ஒரு முறையல்ல ஆயிரம் முறை எரியுங்கள். அதைப்பற்றி நான் கவலைப்பட மாட்டேன். ஆனால் தமிழ் மக்களின் நீண்ட கால கொள்கைகளை நீங்கள் சார்ந்த கட்சியுடன் சேர்த்து எரித்து விடாதீர்கள் என்று தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**காற்றில் பறக்கும் வாக்குறுதிகள்**

தேர்தல் காலங்களில் பல்வேறு கட்சிகள் தமது தேர்தல் அறிக்கைகளை வெளியிடுவதும் மேடைகளில் முழக்கங்களை மேற்கொள்வதும் நீங்கள் அனைவரும் அறிந்ததே. தேர்தல் காலங்களில் வாக்குறுதிகளை அள்ளி வழங்குவதும் தேர்தல் முடிந்த கையோடு அவற்றையெல்லாம் காற்றில் பறக்க விட்டுத் தம்மை வளப்படுத்திக் கொள்கின்ற நடவடிக்கைகளிலேயே எமது அரசியல் தலைவர்கள் பலர் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இன்றைய காலகட்டத்தில் எமது நாட்டின் அரசியல் முன்னெடுப்புக்களும் அரசியல்வாதிகளின் அல்லது மக்கள் பிரதிநிதிகளின் செயற்பாடுகளும் கேலிக்கூத்தாக மாற்றப்பட்டு நாடாளுமன்றம் ஒரு நகைப்புக்குரிய மன்றமாக மாற்றப்பட்டிருப்பது வேதனைக்குரியது. மக்கள் பிரதிநிதிகளின் வாதப் பிரதிவாதங்கள் வன்முறைகளாக மாற்றமடைய நாம் இடம்கொடுத்தலாகாது. எது எவ்வாறிருப்பினும் எமது நாடு என்ற வகையில் எம்மைப் பிற நாட்டவர்கள் எள்ளி நகையாடுவதை நாம் இடமளிக்கலாகாது.

**சேறுபூசல்கள்**

அரசியல் என்பது எப்பாடுபட்டேனும் எமக்கெதிரான கருத்துக்களைக் கொண்டிருப்பவர்களை பெயரிழக்கச் செய்யும் ஒரு வித்தையாகவே இன்று மாறியுள்ளது. அரசியல் ரீதியாக ஒருவரைப் பிடிக்கவில்லை என்றால் அவர் மீது சேறு அள்ளிப் பூசுவதே அரசியல் என்று ஆகிவிட்டது. மக்கள் நலம் இந்தச் சேறு பூசலின் போது அடிபட்டுப்போய் விடுகின்றது. சேறு பூசலும் அதற்கெதிரான செயற்பாடுகளுமே முதன்மை அடைகின்றன. நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கூட பேரம் பேசப்பட்டதாக ஊடகங்கள் பிழையான பல தகவல்களை வெளியிட்டு வந்துள்ளன. எனக்கு தெரிவித்த அளவில் அவர் வேடிக்கையாகக்கூறிய ஒரு விடயத்தைப் பதிவு செய்து, ஊடகங்கள் அதை ஊதிப் பெருப்பித்து மக்கள் மனங்களில் அவரைப்பற்றிய ஒரு தப்பபிப்பிராயத்தை உருவாக்க முயன்றுள்ளன என்பதே உண்மை எனக் காண்கின்றேன்.

**துரோகியில்லை**

சிவசக்தி ஆனந்தனுடன் நான் பெரிதாக நெருங்கிப் பழகாத போதும் அவரின் நடைமுறைகள் அவரை ஒரு துரோகியாகக் கணிக்கக்கூடியவாறு எந்நிலையிலும் அமைந்திருக்கவில்லை. எமது மக்கள் நீண்ட காலப் போரின் பின்னராக அனுபவிக்கின்ற துன்ப துயரங்களில் இருந்து இன்றைய நிலையில் ஓரளவாவது அவர்களைப் பாதுகாக்க வேண்டுமாயின் தம்பி சிவசக்தி ஆனந்தனின் எண்ணக்கருவில் உருவாகியுள்ளன போன்ற சிறப்பான திட்டங்களும் முன்மொழிவுகளும் ஏனைய அரசியல் தலைவர்களினது எண்ணங்களிலும் உருவாக வேண்டும். மாறாக உண்மை பேசுபவர்களை அடக்கியாள முனைவதும் புளுகு மூட்டைகளை அவிழ்த்துக் கொட்டுபவர்களை உயரத் தூக்கி வைத்து கொண்டாடுவதுமான நிலையே இன்று அரசியலில் வலுப்பெற்றுள்ளது. இந்த அரசியல் நிலை மாற்றப்பட வேண்டும்.

**வேறுபாடு**

எமது அரசியல் முன்னெடுப்புக்களில் சட்டத்தின் வாயிலாக அரசமைப்பு ரீதியாக எமது மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உரித்துக்களைப் பெற்றுக் கொடுப்பதையே நான் முதன்மைப்படுத்தி வருகின்றேன். கிடைப்பதை எடுப்பதே உசிதம் என்று வாழ்ந்து வரும் எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர் நிலை அங்கத்தவர்களுக்கும் ஏனைய பிரதிநிதிகளுக்கும் எனது செயற்பாடு சற்று விசனத்தை உண்டுபண்ணியிருப்பதை அவதானிக்கக் கூடியதாய் உள்ளது. இந்த நாட்டில் தமிழ் மக்கள் சகல உரித்துக்களுடனும் கூட்டாட்சி முறையிலான ஒரு அரசியல் கட்டமைப்பின் கீழ் சுதந்திரமாக வாழக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாக வேண்டும்.

**கட்சி நலனே முதன்மை**

ஆனால் எம்முடன் ஒத்த அரசியல் கருத்துக்களைக் கொண்ட கட்சிகள் கூட பல்வேறு திசைகளில் பயணப்படுகின்ற நிலை ஒன்று உருவாகி வருகின்றது. இது தவிர்க்கப்பட் வேண்டும். தத்தம் கட்சி ரீதியான அவர்களின் சிந்தனைகளே பல சிக்கல்களை உருவாக்கி வருகின்றன. இந்த நிலையில் மேலும் ஒரு கட்சி அவசியமா என்று சிலர் கேட்கின்றார்கள். நான் புதியதொரு கட்சியை உருவாக்கியதன் ஊடாக ஏனைய கட்சிகளுடன் பகைத்துக் கொண்டேன் என்றோ அல்லது அவர்களை உதாசீனம் செய்து விட்டேன் என்றோ பொருள் கொள்ளக்கூடாது. ஒத்த கருத்துடையவர்களைச் சேர்த்துக் கொண்டு தமிழ் மக்களின் விடிவுக்காக ஒரு நேர் வழியில் சிறந்த ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் கூடிய ஒரு அரசியல் முன்னெடுப்பின் ஊடாக எமது இலக்கை அடைய முயற்சி செய்யவே விரும்புகின்றேன். என்னோடு இணைந்து கொண்டு சேவையாற்ற விரும்புகின்ற அனைவரையும் அன்புக்கரம் நீட்டி அழைக்கின்றேன். கட்சிகளுக்கிடையே உள்ள பேதங்களை மறந்து எமது மக்கள் நன்மை கருதி ஒற்றுமையுடன் உழைக்க முன்வாருங்கள் என அனைவருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் பகிரங்க அழைப்பு மூலம் அழைப்பு விடுக்கின்றேன். எனினும் எமது கொள்கைகளுக்கு மாறாக இதுவரை செயற்பட்ட தமிழர் விரோதக் கட்சிகள் எம்முடன் இணைந்து செயலாற்ற முன்வந்தாலுங் கூட அவர்களை இணைத்துக் கொள்வது கடினம்.

**அரசியல் அனுபவம்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையை நான் கலைத்துவிட்டதாக ஒரு சாரார் குற்றஞ் சாட்ட இன்னொரு சாரார் எனக்கு அரசியல் அனுபவம் எதுவும் இல்லை என்கின்றார்கள். பிழையான கருத்துக்களின் அடிப்படையில் ஒற்றுமையைப் பேணுவதில் எமது மக்களுக்கு எதுவித நன்மையும் ஏற்படாது. ஒற்றுமை என்பது தகுந்த கொள்கை ரீதியான அடித்தளத்தில் இருந்து கட்டி எழுப்பப்பட வேண்டும். அடுத்து அவர்கள் கூறுவது போல அரசியல் அனுபவம் என்பது உண்மைக்குப் புறம்பான விடயங்களை அவ்வவ்போது மக்கள் நம்பக்கூடிய வகையில் உரத்துப் பேசி அவர்களை நம்ப வைக்கின்ற தன்மையே என்றால் போலிப்பித்தலாட்டம் ஆடுவதே அரசியல் அனுபவம் என்றால் அந்த அனுபவம் என்னிடம் இல்லை என்பதை நானும் ஏற்றுக் கொள்கின்றேன்.

எமது மக்கள் பலர் எமது மக்கள் சந்திப்பின் போது என்னிடம் எடுத்துக் கூறிய துயரச் சம்பவங்களும் அவர்களால் தீர்க்கமுடியாத கவலைகளுந்தான் என்னைக் கல்லாக இறுக வைத்து விட்டது. அவர்கள் துயர் துடைக்க வெறுமனே அண்டிப் பிழைத்தல் வழியாகாது என்ற முடிவுக்கு வந்தேன். இதனால்த்தான் எனது பதவிக்காலம் முடிவுற்ற நிலையிலும் நான் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்தும் ஒரு வாடகை இல்லத்தில் வசித்து வருகின்றேன். போலிக் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்ற அரசியல்வாதிகள் யாராக இருந்தாலும் அவர்கள்தொடர்பில் அவதானமாக இருங்கள் என்று மக்களிடம் நான் கூறி வைக்கின்றேன் - என்றார். (5.110)

### தந்தை...

சேர்ந்த ஓய்வு பெற்ற மேஜர் அஜித் பிரசன்ன (பாதுகாப்புத் தரப்பினர் தொடர்பான வழக்குகளில் பாதுகாப்புத் தரப்பினருக்கு ஆதரவாக முன்னிலையாகுபவர்) தனது கீச்சகத்தில், பொலிஸ் பரிசோதகர் நிசாந்த டி சில்வாவின் பிறப்புச் சான்றிதழ் பிரதியைப் பதிவிட்டிருந்தார். நிசாந்த சில்வாவின் தந்தை தமிழர் என்று அடையாளப்படுத்தியிருந்தார். இது தொடர்பில் நிசாந்த டி சில்வா, லங்கா நீயூஸ் வெப் ஊடகத்துக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

'எனது தந்தை, எனது தாத்தா என்று எனது பரம்பரையே இந்த நாட்டில் வாழ்ந்து இந்த நாட்டிற்காக சேவை செய்தவர்களாகும். அவர்கள் அனைவர் தொடர்பிலும் நான் பெருமைப்படுகின்றேன். நான் மனிதத் தன்மையை மதிக்கிறேனே தவிர நபர் ஒருவரின் இனத்துக்கு அல்ல. எனது கடமையின் போது கட்சி, நிறம், இனம், மதம் பேதங்கள் இல்லை. அனைவரும் மனிதர்கள் என்ற அடிப்படையிலேயே நான் சேவை செய்கின்றேன். எனது பிறப்புச் சான்றிதழில் எனக்கு சிங்களவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் மனித இனத்துக்கே உரிமையாகின்றேன். சிங்களம், தமிழ் முஸ்லிமாக இருப்பதற்கு முன்னர் அனைவரும் மனிதனாக இருப்போம். நான் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மனசாட்சிக்கு உண்மையாகவும், நாட்டின் சட்டத்திற்கமையவும் செயற்படுகிறேன். இனிமேலும் அப்படி தான் செயற்படுவேன். எனது கடமை தொடர்பில் பலர் கோபமடைகின்றார்கள். அது குறித்து நான் அதிர்ச்சியடைவதில்லை' என்று நிசாந்த சில்வா குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மாணவர்கள் கடத்தப்பட்ட வழக்கு, லசந்த விக்கிரமதுங்க கொலை வழக்கு என்று மிக முக்கியமான வழக்குகளில் விசாரணை அதிகாரியாகச் செயற்படுபவர் நிசாந்த சில்வா. புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கிலும் விசாரணை அதிகாரியாகச் செயற்பட்டிருந்தார். கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி ஆட்சி மாற்றத்தின் பின்னர், மேற்குறித்த வழக்கு விசாரணைகளிலிருந்து அவரை நீக்கும் முயற்சி எடுக்கப்பட்டிருந்தது. பல தரப்புக்களின் எதிர்ப்பையடுத்து அது கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5)

ஆசிகளும் வாழ்த்துக்களும்

இன்று (03.12.2018) திங்கட்கிழமை ஆரம்பமாகும் க.பொ.த (சா/த) பரீட்சையில் தோற்றும் மாணவச் செல்வங்கள் அனைவரும் பரீட்சையில் சித்திபெற்ற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் சார்பாக வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் மகிழ்வுடன் வழங்குவதோடு 34 ஆவது அகவையில் கால் பதித்து நிற்கும் உதயன் பத்திரிகையின் சேவை மேன் மேலும் வளர வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் மகிழ்வுடன் வழங்குகின்றோம்.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 375
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.12.02
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 104,487,153/-
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
V 37 43 50 65
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 452
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2018.12.02
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 54,286,095/-
வெற்றி இலக்கங்கள்
08 12 36 41
ஆங்கில எழுத்து
S
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AKஎன டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ராசி அதிர்ஷ்டம்
திகதி 02.12.2018
வெற்றி வாரம் 2410
வர்ணம் ஊதா
கடகம்
வெற்றி இலக்கங்கள் 45 48 49 55
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3, 982, 332
2018.12.04ம் திகதி செவ்வாய்க் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 889
சீட்டிழுப்பு திகதி 2018.12.01 சனிக்கிழமை
G 20 48 62 74
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 40,231,156/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
ஊதா நிற டிக்கட்டுகள் 2018.12.03ம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## மரண அறிவித்தல்

### செல்வி இராசமலர் பாலசிங்கம்



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு நிலை ஆங்கில ஆசிரியர் செல்வி இராசமலர் பாலசிங்கம் நேற்று (02.12.2018) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (03.12.2018) திங்கட்கிழமை 212, கிளிங்கரன் மலர்ச்சாலை, மெயின் வீதி, யாழ்ப்பாணம் (புனித யாகப்பர் ஆலயமருகில்) பி.ப. 3.00 மணிக்கு நடைபெற்று நல்லடக்கத்திற்காக உடுவில் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

CACM திருச்சபை,
நவாலி.

தகவல்: Rev. T.E. அசோக்குமார்.
(பெறாமகன்)

## உணவு அருந்திவிட்டு உறங்கியவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ. 3

வீட்டில் உணவு அருந்தி விட்டு உறங்கியவர் சுவாச குழாய்க்குள் உணவுப் பதார்த்தம் அடைத்ததில் நித்திரையிலேயே உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

3 ஆம் குறுக்கு தெரு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தர்மசேகரம் வசீகரன்(வயது-25) என்பவரே நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

வீட்டில் உணவு உண்டுள்ளார். பின்னர் உறங்கியுள்ளார். உறங்கியவரை வீட்டில் உள்ளவர்கள் மாலை தேநீர் கொடுப்பதற்காக எழுப்பியுள்ளனர். அப்போது எவ்வித அசைவும் இல்லாது காணப்பட்டுளளார். உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோதிலும் அங்கு அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

உயிரிழந்தவருக்கு வலிப்பு ஏற்படுவது என்றும் நித்திரையில் அவ்வாறான நிலமை ஏற்பட்டதால் சுவாச குழாய்க்குள் உணவுப் பதார்த்தம் அடைத்து உயிரிழப்பு ஏற்பட்டிருக்கலாம் என்று ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்த இறப்பு தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (5.8)

## சீனக் கடன்பொறி தொடர்பில் ஐ.நாவில் விரைவில் விவாதம்!

கொழும்பு, டிசெ. 3

இலங்கையில் சீனாவின் கடன்பொறி தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அடுத்த கூட்டத் தொடரில் விவாதிக்கப்படவுள்ளது என்று தெரியவருகின்றது.

ஐ.நாவின் சிறப்பு நிபுணர் ஜுவான் பப்லோ பொஹோஸ்லாவ்ஸ்கி இந்த ஆண்டு இலங்கை வந்திருந்தார். அவர் வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான நிலவரங்களை ஆராய்ந்திருந்தார்.

மனித உரிமைகளில் வெளிநாட்டுக் கடன்களின் தாக்கம் தொடர்பாக, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 2019ஆம் ஆண்டு பெப்ரவரி மார்ச் கூட்டத் தொடரில் விரிவான அறிக்கையைச் சமர்ப்பிக்கவுள்ளார்.

இது தொடர்பாக ஐ.நாவின் சிறப்பு நிபுணர் ஜுவான் பப்லோ பொஹோஸ்லாவ்ஸ்கியின் பேச்சாளர் ஒருவர் கொழும்பு ஆங்கில இதழ் ஒன்றுக்கு தகவல் வெளியிடுகையில், இந்த அறிக்கை பேரவையின் அடுத்த அமர்வில் சமர்ப்பிக்கப்படும். அதற்கு முன்னதாக, பெப்ரவரி மாதத் தொடக்கத்தில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் இணையத்தில் வெளியிடப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு சீனாவின் கடன் பொறியே காரணம் என்று குற்றம்சாட்டப்பட்டுவரும் நிலையில் இந்த விவகாரம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் விவாதிக்கப்படவுள்ளது. (ற)

## சண்டையை விலக்க சென்றவருக்கு காயம்

அச்சுவேலி, டிசெ. 3

கள்ளுத் தவறணையிலிருந்து வந்தவர்கள் பொல்லால் தலையில் தாக்கியதால் படுகாயமடைந்த நிலையில் குடும்பத்தலைவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமன்னையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு அச்சுவேலிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. அச்சுவேலி கதிரிப்பாயைச் சேந்த பசுபதி திருஞானசம்பந்தர் (வயது -38) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே தாக்குதலில் படுகாயம் அடைந்துள்ளார்.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:

சம்பவத் தினம் அன்று இரவு கள்ளுத்தவறணையிலிருந்து வந்த சிலர், வீட்டு வாசலில் நின்ற சிலருடன் தகாத வார்த்தைகளைப் பேசி முரண்பட்டுள்ளனர். இரு தரப்பினருக்கும் இடையே வாய்த்தர்க்கம் மூண்டு கைகலப்பு நிலமைக்கு மாறியது.

இதனை அவதானித்த குடும்பத் தலைவர், இரு தரப்பினருக்கும் இடையே மூண்ட கைகலப்பை விலக்குப்பிடிக்கச் சென்றுள்ளார். இதன்போது அவர் பொல்லால் அடித்துத் தாக்கப்பட்டுள்ளார். தலையில் பலத்த காயம்பட்ட நிலையில் அச்சுவேலி பிரதேச மருத்துவமனையில் உடனடியாகச் சேர்க்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக் காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (5.7.11)



## ஒதியமலை படுகொலையின் 34ஆவது நினைவேந்தல்

முல்லைத்தீவு, டிசெ. 3

முல்லைத்தீவு, நெடுங்கேணி எல்லைக் கிராமமான ஒதியமலையில் படுகொலை செய்யப்பட்ட 32 தமிழர்களின் 34ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

ஒதியமலைக் கிராமத்தை 1984ஆம் ஆண்டு மார்கழி மாதம் 2ஆம் திகதி அரச படையினர் சுற்றிவளைத்தனர். கிராமத்தில் இருந்த ஆண்களை அங்குள்ள வாசிகசாலைக்கு அழைத்துச் சென்று துப்பாக்கிச் சூடு நடத்திக் கொலை செய்தனர். அந்தச் சம்பவத்தில் 32 பேர் கொல்லப்பட்டனர். அவர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நடுகற்கள் உள்ள பகுதியில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது. உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொது மக்கள் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசாவின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபியும் திறந்து வைக்கப்பட்டது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா, வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான மருத்துவர் ப.சத்தியலிங்கம், ஜி.ரி. லிங்கநாதன், து.ரவிகரன் ஆகியோரும் வவுனியா வடக்கு, கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்கள், கிராம மக்கள் எனப் பலரும் நினைவேந்தலில் கலந்துகொண்டனர். (ற-105,21)

## 18 முதிரை மரக் குற்றிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன

யாழ்ப்பாணம், டிசெ. 3

சட்ட விரோதமாக கொண்டு வரப்பட்ட 18 முதிரை மரக் குற்றிகளை மானிப்பாய் பொலிஸார் நேற்றுக் கைப்பற்றினர். சண்டிலிப்பாய்ப் பகுதியில் வீதிக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் கன்டர் வாகனத்தைச் சோதனை செய்தனர். இதன் போது கிளிநொச்சியிலிருந்து சட்ட விரோதமான முறையில் கொண்டு வரப்பட்டதாக கூறப்படும் 2 லட்சம் ரூபா பெறுமதியான 18 முதிரை மரக் குற்றிகள் கைப்பற்றப்பட்டன. வாகனச் சாரதியும் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (7-26)

## தவறான முடிவுக்கு முயற்சித்த படையினர்

### முல்லை. மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்ப்பு

*முல்லைத்தீவு, டிசெ. 3*

*முல்லைத்தீவு மாவட்டத்தில் பணியாற்றும் படையினர் இருவர் தவறான முடிவு எடுத்து உயிரை மாய்க்க முற்பட்ட நிலையில், காப்பாற்றப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.*

*முல்லைத்தீவு 59ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த 42 வயதுடைய சிப்பாய் தவறான முடிவு எடுத்து உயிரை மாய்க்க முற்பட்டுள்ளார். அவர் சக படையினரால் காப்பாற்றப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.*

*மேலும் 68ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த 28 வயதுடைய சிப்பாய் தவறான முடிவு எடுத்து உயிரை மாய்க்க முற்பட்ட நிலையில் படையினரால் காப்பாற்றப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவங்கள் நேற்றும், நேற்று முன்தினமும் இடம் பெற்றுள்ளன. (5,ரி3)*

## பலவீனப்படுத்தப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாத்திரமே உறுதிப்பாட்டை ஏற்படுத்த முடியும். இவ்வாறு மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நிலமை தொடர்பில் மகிந்த ராஜபக்ச நேற்றுச் சிறப்பு அறிக்கையை வெளியிட்டார். அந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல்களை நடத்துவதற்கு அரசியல் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவிப்பதை இலங்கையில் மாத்திரம் காணமுடியும். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, அரசமைப்புக்கு ஏற்ப அரசிதழ் அறிவித்தலை வெளியிட்டிருந்தார். தேர்தலுக்கும், வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்குமான திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. ஏற்கனவே திட்டமிட்டபடி அனைத்தும் இடம்பெற்றிருந்தால் நாட்டில் உறுதிப்பாட்டை ஏற்படுத்தியிருக்க முடியும்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் எல்லைநிர்ணய விவகாரம் தொடர்பில் சிலர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்ததன் காரணமாக உள்ளூராட்சி தேர்தல்கள் இடம்பெறாமலிருக்கக் கூடிய ஆபத்து ஏற்பட்டது. தேர்தல் ஆணையாளர் தேர்தலை நடத்தியே தீருவேன் என்று தெரிவித்ததும் அரசு அதனை தயக்கத்துடன் ஏற்றுக்கொண்டது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களும் விலக்கப்பட்டன. அவ்வேளை அரசியல் நோக்கங்களுக்காக நீதிமன்ற நடைமுறைகள் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன என்பது தெளிவாகியது.

இன்று நாட்டில் ஆறு மாகாணசபைகள் இயங்காத நிலையில் காணப்படுகின்றன. முன்னைய அரசு தேர்தல்களைக் கடந்த ஒரு வருட காலமாக நடத்தவில்லை.

நாங்கள் போர் முடிவடைவதற்கு முன்னரே 2008ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகளை அகற்றிய பின்னர் கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தினோம். வன்னியில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றிய பின்னர் 2013ஆம் ஆண்டு நாங்கள் வடமாகாண சபைத் தேர்தலை நடத்தினோம்.

இன்று போரற்ற நிலையிலும் அந்த இரு மாகாணங்களும் மாகாணசபைகள் அற்ற நிலையில் காணப்படுகின்றன. ஐக்கிய தேசியக் கட்சியும் அதனுடன் இணைந்த கட்சிகளும் மக்களை ஏமாற்றுவதற்காக தவறான அறிக்கைகளை வெளியிடுவதன் காரணமாக கடந்த காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் சிலவற்றைச் சுட்டிக்காட்டவேண்டியுள்ளது.

எங்களுடைய முதலாவது நாடாளுமன்ற தேர்தல் காலம் முதல் அவசியமான சந்தர்ப்பங்களில் எல்லாம் தேர்தலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

1952ஆம் ஆண்டு தலைமை அமைச்சர் டிஎஸ்.சேனநாயக்க உயிரிழந்தபோது அடுத்த தலைமை அமைச்சர் யார் என்ற மோதல் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உருவானது. டிஎஸ்.சேனநாயக்கவுக்கு அடுத்த நிலையில் சேர் ஜோன் கொத்தலாவல காணப்பட்ட போதிலும் ஆளுநர் சோல்பரி டட்லி சேனநாயக்காவை பதவி ஏற்குமாறு அழைத்தார். தலைமை அமைச்சரான அவர், ஒரு சில நாள்களில் புதிய தேர்தலுக்கு அழைப்பு விடுத்து ஆளும் கட்சிக்குள் காணப்பட்ட மோதல்களுக்குத் தீர்வை காண்பதற்காக மக்களின் புதிய ஆணையை பெற்றார்.

1959ஆம் ஆண்டு பண்டாரநாயக்கவின் படுகொலைக்கு பின்னர் டபிள்யூ தசநாயக்க தலைமை அமைச்சரானார். அமைச்சரவைக்குள் பிளவுகள் ஏற்பட்டவேளை அவரும் புதிய தேர்தலுக்கு அழைப்பை விடுத்தார். பலவீனப்படுத்தப்பட்ட ஜனநாயகத்துக்கு தேர்தல்கள் மூலம் மாத்திரே உறுதிப்பாட்டை ஏற்படுத்த முடியும்.

இலங்கையின் அரசமைப்புக்கு அமைவாக இறைமை என்பது மக்களிடத்திலேயே உள்ளது. நாடாளுமன்றத்திடம் இல்லை. மக்கள் தங்கள் இறைமையை தேர்தலில் வாக்களிப்பு மூலமே பயன்படுத்துகின்றனர். ஜனநாயகத்தை மதிக்கும் அனைவரையும் இந்த விடயம் குறித்து அவதானமாக ஆழ்ந்து சிந்திக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (5.10)

## மூதாட்டியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டுக்குள் புகுந்த கும்பல், தாக்கி படுகாயப்படுத்தியுள்ளது. குருதி வெள்ளத்திலிருந்த மூதாட்டியை மீட்ட மகள், தெல்லிப்பழை மருத்துவமனையில் உடனடியாகச் சேர்த்தார். மேலதிக சிகிச்சைகளுக்காக அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

எம்.பொன்மலர் (வயது-72) என்ற மூதாட்டியே தாக்குதலுக்குள்ளாகி படுகாயமடைந்தார். உந்துருளியில் வந்த கும்பலே மூதாட்டியைத் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. படுகாயமடைந்த மூதாட்டியை காலையில் உணவு வழங்க சென்ற மகள் கண்டுள்ளார். அவசர நோயாளர் காவு வண்டியின் உதவியுடன் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்த்தார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அவர் மாற்றப்பட்டார். மூதாட்டியின் இரண்டு கைகளும் கொடூரமாக அடித்து உடைக்கப்பட்டுள்ளன. தலைப்பகுதி மற்றும் முகம் முழுவதும் அடிகாயங்கள் காணப்படுகின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்றுமாலை வரையில் தமக்கு முறைப்பாடு கிடைக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (5.7.26)

# சமநிலைகள்

யாழ்ப்பாணம், டிசெ. 3
கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கொலின்ஸ் பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்கள் சமநிலையில் முடிவடைந்தன.

கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் கொலின்ஸ் ரைகர்ஸ் அணியை எதிர்த்து எலைட் அணி மோதியது. நிர்ண யிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்தமையால் ஆட்டம் சமநிலையானது.

இரண்டவது ஆட்டத்தில் கொலின்ஸ் ஜக்குவார் அணியை எதிர்த்து பிளாஸ் ரைடர்ஸ் அணி மோதியது.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்ததை அடுத்து ஆட்டம் சமநிலையானது. (ம-23)

# ஆஸ்திரேலியாவை இந்தியா வெல்லும்

## வாஹ் கணிப்பு

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்திய அணி கைப்பற்றும் என்று நம்பிக்கை தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ஸ்ரீவ் வாஹ்.

இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் எதிர்வரும் 6ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்த நிலையில் தொடர் தொடர்பில் ஆஸ்திரேலிய ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் வாஹ்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆஸ்திரேலியத் தொடருக்காக இந்திய அணி தன்னை நல்ல முறையில் தயார்படுத்தி உள்ளது. இதனால் இந்திய அணிக்கு கணிசமான வாய்ப்பு இருக்கிறது. இந்த டெஸ்ட் தொடர் உண்மையிலேயே மிகுந்த பரபரப்புடன் இருக்கும் என்று நினைக்கிறேன். விராட் கோக்லி மிகச் சிறந்த வீரர். சச்சின், லாராவைப் போன்று அவரும் மிகப் பெரிய வீரர்.

இந்த டெஸ்ட் தொடரில் யார் மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருப்பார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம் - என்றார்.

பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்திய குற்றச்சாட்டில் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் சிமித், முன்னாள் உபதலைவர் வோர்ணர், முன்னாள் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பான்குரொப்ட் ஆகியோர் தடைபெற்றுள்ள நிலையில் அவர்கள் இல்லாமல் ஆஸ்திரேலிய அணி இந்தத் தொடரில் படுதோல்வியடையும் என்று பொதுவான கருத்துக் கணிப்புக்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)





# மட்ரிட்டின் வெற்றிநடை நீண்டகாலம் தொடரும்!

## நம்பிக்கையில் ராமோஸ்

அண்மைக்காலமாகத் தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்து வந்த ரியல் மட்ரிட் அணி சம்பியன்ஸ் லீக் தொடரில் கடந்தவாரம் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்றுள்ள நிலையில், "அணியின் வெற்றிநடை தொடரும்" என்று நம்பிக்கை தெரிவித்தார் அந்த அணியின் தலைவரான ராமோஸ்.

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் கடந்த மாதம் இடம்பெற்ற ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி பார்சிலோனாவுடன் 1:5 என்ற கோல் கணக்கில் படுதோல்வியடைந்தது.

மெஸ்ஸி இல்லாத நிலையில்கூட பார்சிலோனா அணியை ரியல் மட்ரிட்டால் சமாளிக்க முடியவில்லை.

இதையடுத்து ரியல் மட்ரிட் அணிக்கு எதிராகக் கடும் விமர்சனம் முன்வைக்கப்பட்டது. அப்போது, ரியல் மட்ரிட் அணி மிகவிரைவில் தோல்வியில் இருந்து மீண்டு வரும் என்று ராமோஸ் தெரிவித்திருந்தார்.

அவர் தெரிவித்ததைப் போன்று ரியல் மட்ரிட் அணி தற்போது சில வெற்றிகளைக் குவித்துள்ள நிலையில் "அணியின் வெற்றிநடை தொடரும்" என்று நம்பிக்கை தெரிவித்தார் ராமோஸ். (ம)

# பூப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 3
முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுத் திணைக்களம் நடத்தும் 13, 15, 17, 20 வயதுப்பிரிவு இருபாலாருக்குமான பூப்பந்தாட்டத் தொடர் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நெல் சந்தைப் படுத்தும் கட்டத்தில் இடம்பெறவுள்ளது. (ம-23)

# வடமாகாண ரீதியிலான துடுப்பாட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 3
அரியாலை நூற்றாண்டு சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு வடமாகாண ரீதியாக அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் 6 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரொன்று நடத்தப்படவுள்ளது. இந்தத் தொடரில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் ஐந்தாம் திகதிக்கு முன்னர் (நாளைமறுதினம்) பதிவை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம -23)

# மருத்துவபீடம் சம்பியனானது

யாழ்ப்பாணம், டிசெ. 3
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் மருத்துவ பீட அணி சம்பியனானது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தர் அணியை எதிர்த்து மருத்துவ பீட அணி மோதியது. 3:2 என்ற கோல்கணக்கில் மருத்துவ பீட அணி வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-23)

# பரிஸ் செயின்ட் ஜேர்மனுக்காகவே தொடர்ந்து விளையாட விருப்பம்!

## நெய்மர் வெளிப்படை

பிரபல கால்பந்தாட்ட வீரரான நெய்மர், ஸ்பெய்னின் ரியல் மட்ரிட் கழகத்துக்காக விளையாடவுள்ளார் என்று தகவல்கள் வெளிவந்திருந்த நிலையில், அவர், தான் பிரான்ஸின் பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணிக்காகவே தொடர்ந்தும் விளையாடவுள்ளார் என்று தெரிவித்தார்.

ஸ்பெய்னின் பார்சிலோனா கழகத்துக்காக விளையாடி வந்தவர் நெய்மர். கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அவரை பார்சிலோனாவிடம் இருந்து வாங்கியது பிரான்ஸின் பரிஸ் செயின்ட் ஜேர்மன். கால்பந்தாட்ட உலகில் இதுவரை இல்லாத தொகைக்கு நெய்மர் வாங்கப்பட்டார். ஆனால் பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணியில் நெய்மர் தொடர்ந்து விளையாட மாட்டார் என்றும் ரியல் மட்ரிட் கழகத்துக்காக ஒப்பந்தம் செய்யப்படவுள்ளார் என்றும் தகவல்கள் அடுத்தடுத்து வந்திருந்தன. ரியல் மட்ரிட் கழகத்தின் சில வீரர்கள் நெய்மர் ரியல் மட்ரிட்டுக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டால் அது சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்திருந்தனர். இதனால் நெய்மர் ரியல் மட்ரிட்டுக்குச் செல்வது கிட்டத்தட்ட உறுதி என்றே கருதப்பட்ட நிலையில், அந்தச் செய்திகளை மறுத்து பரிஸ் செயின்ட் ஜேர்மனில் தான் தொடரும் முடிவை அறிவித்துள்ளார் -நெய்மர். (ம)



# இரண்டாவது டெஸ்ட்டில் தீவுகளை வழித்துத்துடைத்தது பங்களாதேஷ்




**மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இன்னிங் ஸாலும் 183 ஓட்டங்க ளாலும் இமாலய வெற்றிபெற்று இரண்டு ஆட்டங்க ளைக் கொண்ட டெஸ்ட் தொடரை 2:0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது பங்க ளாதேஷ் அணி.**

மேற்கிந்தியத் தீவுகள் அணி பங்களாதேஷுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. முதலாவது ஆட்டத்தில் பங்களாதேஷ் வெற்றிபெற்று 1:0 என்று முன்னிலையில் இருந்த நிலையில் இரண்டாவது ஆட்டம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. சகல இலக்குகளையும் இழந்து 508 ஓட்டங்களைக் குவித்தது. மகமதுல்லா 136 ஓட்டங்களையும், சகிப் அல் ஹசன் 80 ஓட்டங்களையும், இஸ்லாம் 76 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் வரிக்கன், பிஷ்கூ, பீரீத்வைட், றோச் நால்வரும் தலா 2 இலக்குகளையும் லூயிஸ், சேஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் இன்னிங்ஸுக்காக வெறும் 111 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக ஹெட்யமர் 39 ஓட்டங்களையும், டவ்ரிச் 37 ஓட்டங்களையும், ஹோப் 10 ஓட்டங்களையும் பெற்றனர். இவர்களை விட வேறு எவரும் இரட்டை இலக்கத்தில் ஓட்டங்களைப் பெறவில்லை. பந்துவீச்சில் மிராஸ் 7 இலக்குகளையும், சகிப் அல் ஹசன் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸுக்கா களத்தடுப்பில் ஈடுபடத் தகுதியற்ற நிலையில்,



இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடுமாறு பணிக்கப்பட்டது மேற்கிந்தியத் தீவுகள் அணி. இரண்டாவது இன்னிங்ஸிலும் மேற்கிந்தியத் தீவுகள் அணி மிகப்பெரியளவில் தடுமாறியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக பிரீத்வைட் ஓர் ஓட்டத்துடனும், பவல் 6 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். சகிப் அல் ஹசன், மிராஸ் கூட்டணி மேற்கிந்தியத் தீவுகளின் முன்வரிசையைத் தகர்த்தெறிந்தது. ஹோப் 25, அம்பிரிஸ் 4, சேஸ் 3 என்று ஒருவர் பின் ஒருவராக பவிலியனுக்குச் சென்றனர். எனினும் ஹெட்மயர் மத்திய வரிசையில் அணியை வலுப்படுத்த படாதபாடுபட்டார். அவர் அதிரடியாக விளையாடி 92 பந்துகளில் 9 சிக்சர்கள் அடங்கலாக 93 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். 171 ஓட்டங்களில் தீவுகள் 9 இலக்குகளை இழந்த போதிலும் இறுதி இலக்குக்காக றோச், லூயிஸ் இருவரும் கடுமையாகப் போராடினார்கள். அணி 213 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் றோச் 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இன்னிங்ஸாலும் 183 ஓட்டங்களாலும் வெற்றிபெற்றது பங்களாதேஷ். (ம)

# அற்புதமாக வீசுகிறார் யாசிர் ஷா

## அப்ரிடி பாராட்டு



பாகிஸ்தான் அணியின் சுழல் பந்து வீச்சாளர் யாசிர் ஷா அற்புதமாக வீசுகிறார் என்று தெரிவித்தார் பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் அப்ரிடி.

பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வரும் நிலையில் இந்தத் தொடரில் யாசிர் ஷா அற்புதமாகப் பந்துவீசி வருகிறார். இதையடுத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் அப்ரிடி.

யாசிர் ஷாவின் பந்துவீச்சு அபாரம். நாளுக்குநாள் அவரது பந்து வீச்சு மெருகேறி வருகிறது. யாசிர் ஷா பந்துவீசும் லெந் மற்றும் லைன் அற்புதமாக உள்ளது. அவரால் தொடர்ந்து இவ்வாறு செயற்பட முடியும். யாசிரின் மற்றொரு சிறப்பம்சம் என்னவென்றால் அவர் வெறுமனே ஐக்கிய அரபு இராச்சியத்தில் மட்டும் தனது உச்சக்கட்டப் பெறுபேற்றை வெளிப்படுத்துவதில்லை. உலகின் பல்வேறு மைதானங்களில் அவர் தன்னை நிரூபித்துள்ளார். எதிர்வரும் காலங்களில் பாகிஸ்தானின் வெற்றியில் யாசிரின் பங்களிப்பு இன்னும் அதிகம் இருக்கும் என்று நம்புகிறேன் என்று அப்ரிடி மேலும் தெரிவித்தார்.

"பாகிஸ்தான் கிரிக்கெட் வரலாற்றில் இதுவரை தோன்றிய சுழல்பந்து வீச்சாளர்களில் யாசிர் ஷா தனித்துவமானர். அற்புதமான வீரர்'' என்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் இன்சமாம் உல் ஹக் முன்னதாகத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (ம)

# கொக்குவில் இந்துக் கல்லூரி வெற்றி




யாழ்ப்பாணம், டிசெ. 3

இலங்கைப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 19 வயதுப் பிரிவு பெண்கள் அணிகளுக்கு இடையிலான தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

கந்தானை டீ மெசனற் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கேட்வே கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதியது. 63:54 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது. (ம-23)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 03 . 08 . 1938



உதிர்வு 18 . 11 . 2018

அமரர்

### வேதவனம் கந்தையா தருமராஜா

**(ஓய்வுநிலை பிரதி அதிபர் - வித்தியானந்தக் கல்லூரி, முள்ளியவளை)**

கடந்த 18.11 2018 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், வித்தியானந்தக் கல்லூரி சமூகத்தினர் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையில் எமக்குதவிய வைத்தியர்கள், ஊழியர்கள், தொலைதூரங்களில் இருந்து வருகைதந்தவர்கள், தொலைபேசி, முகநூல் மூலமும் மலர்வளையம், கண்ணீர் அஞ்சலி, பதாகைகள் ஊடாக துயர் பகிர்ந்தவர்களுக்கும் இறுதி அஞ்சலியில் உரையாற்றிய, உணவு அளித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதோடு அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (03.12.2018) திங்கட்கிழமை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று நாளை (04.12.2018) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நல்லூர் **"சட்டநாதர் சிவன்கோவில் திவ்விய ஜீவன சங்க"** மண்டபத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் தொடர்ந்து மதிய போசனமும் நடைபெற இருப்பதனால் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இல.959, பருத்தித்துறை வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**

(cs.21851)

---

## Maths Classes

Gr. 6 - 11வரையான மாணவர்களுக்கான
**Maths (English Medium) Classes**
7 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவமிக்க Maths (English Medium) நியமனம் பெற்ற தேசிய பாடசாலை ஆசிரியரால் குழுவாகவோ/ தனியாகவோ கற்பிக்கப்படும்.
**BRILLIANT MATHS ACADEMY**
**இணுவில் கிழக்கு, அங்களப்பாய்.**
Contact No. 077 454 0529
ஆரம்பம் : நாளை 04.12.2018
(குறிப்பு : தமிழ்மொழி மூலமான கணித வகுப்புக்களுக்கும் தொடர்பு கொள்ளவும்)

---

## வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

11Kg இற்கு மேற்பட்ட பொதிகளுக்கு விசேடசலுகை UK 600/=, France 700/=, Swiss 800/= மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்.

**திருமுருகன் கொம் நெற் (Pvt) Ltd.**
**321, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். 077 755 4528**

(CS 21158/15/18)

---

12 வருட கல்விச்சேவையில் ........

## வின் கல்வி நிறுவனம்

**இல : 783, நாவலர் வீதி , யாழ்ப்பாணம்.**
**தரம் 1–5 வரையிலான வகுப்புக்கள்**
ஆரம்பம் - 05.12.2018 (புதன்கிழமை) நேரம் :- பி.ப 3.00 மணி

தரம் – 3 , 4 , 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வகுப்புக்கள்
வாராந்த புலமை மாதிரிப் பரீட்சைகளுடன்
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

நடைபெறும் பரீட்சைகள் :- அலகு ரீதியாக - 6 , இடைத்தவணை -3 , தவணை -3
(மூன்று தவணைகளுக்கான 12 பரீட்சைகள் )
பரீட்சைகளில் மட்டும் பங்கு பெற விரும்புவோர் பதிவு செய்து கொள்ளவும் .

077 921 79 20

---




## றொனால்டோ அதிரடியாட்டம்

இத்தாலியக் கழகங்களுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வெற்றிபெற்றது ஜுவென்டாஸ். ஜுவென்டாஸை எதிர்த்து பியோரென்ரினா மோதியது.

3:0 என்ற கோல் கணக்கில் ஜுவென்டாஸ் வெற்றிபெற்றது. ஜுவென்டாஸின் சார்பாக றொனால்டோ ஒரு கோலைப் பதிவுசெய்தார். இரண்டு கோல்கள் பதிவாகுவதற்கு அவர் உதவி செய்தார். (ம)

## வலென்சியாவை வென்றது மட்ரிட்

லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வெற்றிபெற்றது ரியல் மட்ரிட். ரியல் மட்ரிட்டை எதிர்த்து வலென்சியா மோதியது. ஆட்டத்தின் 8ஆவது நிமிடத்தில் வாஸ் மட்ரிட்டின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். 1:0 என்ற கோல் கணக்கில் அந்த அணியின் ஏக ஆதிக்கத்துடன் நகர்ந்து சென்று முடிந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியின் 88ஆவது நிமிடத்தில் லூகாஸ் மட்ரிட்டின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். இதையடுத்து முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ரியல்மட்ரிட் அணி. (ம)

---

## மரண அறிவித்தல்கள்



### திருமதி பரமேஸ்வரி திருநாவுக்கரசு

45, கொண்டலடி வீதி, நல்லூரை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட திருமதி பரமேஸ்வரி திருநாவுக்கரசு நேற்று (02.12.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஓய்வு நிலை ஆசிரியர் திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சண்முகம் அம்மாக்குட்டி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் சுரேஸ் (லண்டன்), சு ந்தி (கனடா) ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற காங்கேஸின் அன்பு மைத்துனியும் கீதராஜ், அஜித்தா ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான லட்சுமி, செல்லம்மா, தம்பிஜயா, சின்னத்துரை, சின்னம்மா, எஸ். பொன்னுத்துரைமற்றும்இராசமணி, மங்கையற்கரசி, சரவணமுத்து, இராஜேஸ்வரி, சரத்சந்திரன், சொல்வேந்தன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் கௌசிகா, கௌதரன், யாகுலன், இந்துஜா, கபாரினி, யாதவன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.12.2018) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**45, கொண்டலடி லேன்,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

---

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சத்தியவடிவேல்



மூளாயைப் பிறப்பிடமாகவும் நவாலி தெற்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சத்தியவடிவேல் நேற்றுமுன்தினம் (01.12.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - செல்லமா தம்பதியரின் மூத்த மகனும், கனேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணமூர்த்தி, விஜயகாந்தி மற்றும் தவமணிதேவி, தேன்மொழி, திலகவதி, பாலகிருஸ்ணன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான சந்திரன், கணேசு மற்றும் இராசேந்திரம், அருள்கண்ணன், செல்வராணி ஆகியோரின் மைத்துனரும், கேதீஸ்வரி (சுவிஸ்), கேதீஸ்வரன் (ஈசன் - கேசிகன் ரான்ஸ்போட் ), நிர்மலேஸ்வரன் (பிரான்ஸ்), லங்கேஸ்வரி, நமலேஸ்வரன் (பிரான்ஸ்), மங்களேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மனோகரன் (சுவிஸ்), கனுசியா, சிறிபிரியா (பிரான்ஸ்), சசிந்திரன், அனோஜன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், சயித், பவித்திரா, கேசிகன், விபூசன், தக்சிகன், அஸ்வின், அஸ்மலன், தரணியா, கிருத்தியா, ஆர்த்திக் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.12.2018) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**மகன் (கேதீஸ்வரன்)**

**077 358 3614**

---


## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**

1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.